திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

143

வில்லேந்திய வேலவர், (சாயாவனம்)

மாலை 12] சாதாரண—சித்திரை—மே, 1970 [மணி 8

தமிழ் நாடு அரசின் அறநிலைய



தஞ்சை மாவட்டம் நீடாமங்கலம் ஸ்ரீ சந்தானராமசுவாமி தொகுதிக்கோயில் திருமண மண்டபத்திற்கு, தமிழ் நாடு முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள், கால்கோள் விழாவைத் தொடங்கி வைத்தல். (29 - 3 - 70)

பொருளடக்கம்

1. சங்க நூல்களில் இராமாயணக் குறிப்புகள்
2. வாழ்வெனும் பாதையில்
3. அப்பரும் சம்பந்தரும்
4. மகாபாரதம்
5. கம்பர் கண்ட கோசலம்
6. பட்டர் பெருமை
7. திருவக்கரை
8. திருஞான சம்பந்தர் தேவாரத்தில் குறிஞ்சித் திணைவளம்
9. இறைவனின் இன்னருட்டிறன்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/-

தனி இதழ் விலை ரூ. ஒன்று

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறாமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்



மாலை 12] சாதாரண — சித்திரை — மே, 1970 [மணி 8

சங்கநூல்களில் இராமாயணக் குறிப்புகள் *

[ந. ரா. முருகவேள், M. A., M. O. L.]

முன்னுரை :

அமிழ்தினும் இனிய நமது அருமைத் தமிழ் மொழியிலுள்ள நூல்களுள், பழமையும் பெருமையும் வாய்ந்தவை, சங்க நூல்கள் என்பனவாகும். அவைகள் இற்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பது, அறிஞர்கள் ஆராய்ந்து கண்ட முடிவு. 'சங்கமலி செந்தமிழ்' என்று திருஞான சம்பந்தரும், 'சங்கத் தமிழ் மாலை' என்று ஸ்ரீ ஆண்டாளும். 'சங்கத் தமிழ் மூன்றும் தா' என்று ஔவைப் பிராட்டியாரும், பிறரும் குறிப்பிட்டிருத்தலால், சங்க நூல்களின் அருமை பெருமைகளை யாவரும் இனிது உணரலாம்.

சங்கச் சான்றோர்கள் :

இத்துணைப் பழமையும், பெருமையும் வாய்ந்த சங்க நூல்களில், சைவம் வைணவம் முதலிய சமயங்களின், கருத்துக்களும் கொள்கைகளும் தத்துவங்களும் ஆங்காங்கே விரவிக் காணப்படுகின்றன. சங்க காலப் புலவர்கள், சமய உணர்வும் பண்பாடும் நிரம்பிய தலை சிறந்த பெருஞ் சான்றோர்களாக விளங்கியிருந்தனர். அவர்கள் தெய்வத் தன்மை வாய்ந்த சிறந்த பெருங் கவிஞர்களாய், 'பொய்யடிமை இல்லாப் புலவர்கள்' எனப் பாராட்டப் பெறும் நிலையில் புகழ் பெற்று விளங்கியிருந்தனர். அத்தகைய தெய்வப் பெற்றிமை மிக்க சங்க காலத்துச் சான்றோர்கள் அருளிச் செய்த சங்கநூல்களில், பல சிறந்த சமயஉண்மைகளும்

* திருவள்ளூர் வீரராகவப் பெருமாள் கோயிலில், ஸ்ரீராமநவமி விழாவை முன்னிட்டு ஸ்ரீ அகோபில மடத்தின் 'மதிப்பியல் முகவர்' நியாய வேதாந்த வித்வான் திரு. புரிசை நடாதூர் கிருஷ்ணமாசாரிய சுவாமிகள் அவர்கள் கேட்டுக்கொண்டபடி, ஆற்றிய சொற்பொழிவைத் தழுவியது (16-4-70).
—ஆசிரியர்.

வரலாறுகளும், ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிறப்புற எடுத்து விளக்கப் பெற்றிருப்பது, நம்மனோர் உணர்ந்து மகிழ்தற்குரிய செய்தியாகும்.

600 008
158579

இராமாயணம் :

நம்முடைய பாரத நாட்டில் வழங்கி வரும் பலப்பல சிறந்த பண்டைய நூல்களுள் இராமாயணம் என்னும் இதிகாசம், ஈடும் எடுப்பும் அற்றது என்பதனை யாவரும் அறிவர். இராமபிரானின் இனிய வரலாறும், இணையற்ற சிறந்த தெய்விக இயல்புகளும், எவருள்ளத்தையும் கொள்ளை கொள்ளவல்லன. மிகவும் கற்றுணர்ந்த அறிஞர்கள், ஏதும் அறியாத பாமரர்கள் ஆகிய எல்லோருக்குமே, எல்லையில்லாச் சுவையும் இன்பமும் நல்கி, யாவராலும் மிகவும் விரும்பிப் போற்றப்படத்தக்கதாக ‘இராமாயணம்’ இலங்குகின்றது. எத்துணையோ பன்னெடுங்காலமாக, பற்பல நூற்றாண்டுகளாக, பல கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களை எளிதில் கவர்ந்து, இணையற்று விளங்கி வருகின்றது இராமாயணம்; நம் பாரத நாட்டுக் கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களில் எல்லாம் ஊடுருவித் தோய்ந்து ஒன்றி நின்று, பக்தி உணர்ச்சியினை வற்றாத பெரு வெள்ளம் எனப் பெருக்கெடுத்து ஓடச் செய்துவரும் பெருமைக்குரிய நூல்களுள் இராமாயணம் இணையற்றது என்பதற்குத் தடையும் உண்டோ?

சங்க நூல்கள் :

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கருதப்படும் பழந்தமிழ்ச் சங்க நூல்களிலும்கூட, இராமாயணத்தைப் பற்றிய செய்திகளும் கதைகளும் குறிப்புகளும் விரவி அமைந்து காணப்படுகின்றன. சங்க காலப் புலவர்கள் தாம் பாடத் தலைப்பட்ட செய்திகளையும் கருத்துக்களையும் தகவுற விளக்குவதற்கு, இராமாயண நிகழ்ச்சிகளையும், கதைகளையும் ஆங்காங்கே அழகிய இனிய உவமைகளாக எடுத்துக்காட்டி விளக்கிப் பாடியிருக்கின்றார்கள்.

எல்லோருக்கும் தெளிவுறத் தெரிந்தனவும், யாவரும் சுவைத்து உவந்து விரும்புவனவும் ஆகிய செய்திகளே, இலக்கியங்களில் உவமைகளாகப் புலவர்களாற் கையாளப்படும். இவ்வடிப்படையில் ஆராய்ந்தால், மிகப்பழங் காலத்திலேயே இராமாயண வரலாறு தமிழ் நாட்டில் நன்கினிது பரவியிருந்தமை புலனாகும். இவ்வுண்மையை விளக்கும் சங்ககால இலக்கியச் சான்றுகள் சிலவற்றை மட்டும், ஈண்டுக் கண்டு இன்புறுவோம்.

அகநானூறு :

1. இராமபிரான் சேதுபந்தனம் செய்து, இலங்கை செல்லத் தலைப்படும் முன்னர், ஒரு நாள் மாலை தன் துணைவர்களாகிய வானர வீரர்களுடன், மேலே நிகழ்தற்குரிய போர்ச் செய்திகள் குறித்து, தனுக்கோடியிலுள்ள கடற்கரையில், ஓர் ஆலமரத்தின் கீழ்த் தங்கியிருந்து ஆராய முற்பட்டார். அம்மாலை வேளையில், அவ்வால மரத்தின்கண் வாழ்ந்து கொண்டிருந்த பறவையினங்கள் தம் இயல்பிற்கேற்ப ஒன்றுகூடிப் பேரொலி செய்தன. அஃது இராமபிரான் வானரவீரர்களுடன் கலந்து நிகழ்த்திய ஆலோசனைக்குச் சிறிது தடையாக இருந்தது. அதனால் இராமபிரான் அப்பறவைகளை நோக்கித் தம் திருக்கை அமர்த்தினார். அவ்வளவில் அப்பறவைகள் சிறிதும் ஒலி செய்யாமல் அமைதியுற்றடங்கி நின்றன.

இந்த இராமாயண வரலாற்றுச் செய்தியினை, ‘ஒரு தலைவனும் தலைவியும் தம்முட் காதலித்துக் களவொழுக்கம் மேற்கொண்டிருந்த பொழுது அலர்தூற்றிய அவ்வூர்ப் பெண்டிர்கள், பின்னர் அவ்விருவரும் முறைப்படி திருமணம் செய்துகொண்ட நிலையில், அலர் தூற்ற வாய்ப்பின்றி நாவடங்கி நின்றனர்’ என்னும் கருத்தினை வற்புறுத்த, உவமையாக எடுத்துக்காட்டிக் கடுவன்மள்ளனார் என்னும் புலவர் பின்வருமாறு பாடுகின்றார்.

> வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
> முழங்கிரும் பவ்வம் இரங்கும் முன்துறை,
> வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
> பல்வீழ் ஆலம் போல,
> ஒலியவிந் தன்று இவ்வழுங்கல் ஊரே.
>
> — அகநானூறு.

புறநானூறு :

2. சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி என்னும் கொடைவள்ளல் ஒருவனிடம்

N70.12-8

சென்று, புலவர் ஒருவர் அவனைப் புகழ்ந்து பாடினார். அவ்வள்ளல், அவர்தம் புலமை நலனையும் பாடல்நலனையும் வியந்தினிது போற்றி மிகுந்த பரிசில்களை வழங்கினான்; ஏராளமான பொன் அணிகலன்களை அளித்தான். புலவரும், அவர் தம் உறவினரும் அத்தகைய அணிகலன்களை என்றும் எங்கும் கண்டதிலர். அதனால் அவற்றைச் செய்வதின்னதென்றறியாமல், விரலில் அணிவதைச் செவியிலும், செவியில் அணிவதை விரலிலும், இடுப்பில் தரிப்பதைக் கழுத்திலும், கழுத்தில் தரிப்பதை இடுப்பிலுமாகக் காண்பார்க்கு நகைப்புண்டாகும் வண்ணம், மாற்றிமாற்றி யணிந்து கொண்டு மகிழ்ந்து நின்றனராம். இச்செய்தியினை ஊன்பொதி பசுங்குடையார் என்னும் அப்புலவர் தாமே குறிப்பிடுகின்றார்.

அங்ஙனம் குறிப்பிடுங்கால் அவர், 'இராவணன் சீதையைக் கவர்ந்து தேரில் ஏற்றிக் கொண்டு வான்வழியாகச் சென்ற பொழுது இருசியமுக மலையின் அருகில், சீதைப்பிராட்டி தன் அணிகலன்களையெல்லாம் ஒவ்வொன்றாகக் கழற்றி எறிந்துகொண்டு சென்றாள். அவற்றை அங்கு வாழ்ந்து திரிந்து கொண்டிருந்த வானர சேனைகள் கண்டு எடுத்து, அவற்றின் ஒளியிலும் அழகிலும் மயங்கி, அவற்றைத்தாம் அணிந்து கொண்டு அழகு பார்க்க முற்பட்டன. ஆனால் அணிந்து கொள்ளும் முறை அறியாமையால், அவற்றை மாற்றி மாற்றிப் பிழைபட அணிந்து கொண்டு நகைச்சுவையைத் தோற்றுவித்துத் திகைத்து மயங்கின' என்னும் இராமாயணக் கதையினை எடுத்து உவமையாகக் காட்டிப் பாடி, உவகை விளைவிக்கின்றார்.

> மேம்படு சிறப்பின் அருங்கல வெறுக்கை
> தாங்காது பொழிதந் தோனே; அதுகண்டு
> இலம்பாடு உழந்தஎன் இரும்பேர் ஒக்கல்
> விரற்செறி மரபின செவித்தொடக் குநரும்
> செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரும்
> மிடற்றமை மரபின அரைக்குயாக் குநரும்
> கடுந்தேர் இராமன் உடன்புணர் சீதையை
> வலித்தகை அரக்கன் வவ்விய ஞான்றை
> நிலஞ்சேர் மதர்அணி கண்ட குரங்கின்
> செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந்
> தாஅங்கு
> அருஅ அருநகை இனிதுபெற் றிகுமே
>
> —புறநானூறு 378.

பரிபாடல் :

3. இராமாயணத்தில் தாடகை வதம் நிகழ்ந்த பின்னர், இராமன் அகலிகையின் சாபம் தீர்த்தருளிய செய்தியை யாவரும் அறிவர். இந்திரன் வஞ்சக வடிவம் கொண்டு வந்து அகலிகையினைப் புணர்ந்ததும், கவுதம முனிவர் வருதல் கண்டு பூனை வடிவம் கொண்டு மறைந்தோடியதும், கவுதம முனிவர் நிகழ்ந்த துணர்ந்து அகலிகையினைக் கல்லாகும் வண்ணம் சபித்ததும் ஆகிய செய்திகள், இராமாயணத்தில் வருவன. இவற்றை ஆசிரியர் திருவள்ளுவர் தாமும், தம்முடைய திருக்குறள் நூலில்,

> ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்
> கோமான்
> இந்திரனே சாலும் சரி.
>
> — திருக்குறள்.

என்று குறிப்பிட்டருளினர். இவ்விராமாயணக் கதைபற்றிய குறிப்பு, பரிபாடல் என்னும் சங்கம் மருவிய நூலிலும் பயின்றுள்ளது,

பரிபாடலில் முருகனைப் பற்றிய பாடல்கள் பல வருகின்றன. அவற்றுள் திருப்பரங்குன்றம் பற்றிய பாடற் பகுதி ஒன்று, 'அங்கேயுள்ள கோயிலில் அமைந்திருந்த சித்திர மண்டபத்தில் அகலிகை சாப விமோசனம் பற்றிய கதைச் சித்திரம் ஒன்றும் வரையப் பெற்றிருந்தது; கோயிலில் முருகனைத் தொழுவதற்கு வரும் அடியார்கள், அச்சித்திரத்தைக் கண்டு வியந்து மகிழ்கின்றனர்' எனக் குறிப்பிடுகின்றது.

> இந்திரன் பூனை; இவள்
> அகலிகை; இவன்
> சென்ற கவுதமன்;
> சினன் உறக் கல்உரு
> ஒன்றிய படிஇது;
> என்றுரை செய்வோரும்
>
> — பரிபாடல் : 19, 50-53.

கலித்தொகை :

4. சங்கத் தொகை நூல்களுள் மிகவும் புகழ் பெற்ற தொன்றாய்க் 'கற்றறிந்தார் ஏத்துங்கலி' என்னும் சிறப்பினைப் பெற்றுத் திகழ்வது, கலித்தொகை என்னும் நூல். அதன்கண் 'குறிஞ்சிக்கலி' என்னும் பகுதி

யைப் பாடிய நல்லிசைப் பெரும்புலவர், கபிலர் என்னும் கவிஞர் பெருமான். 'மலைநிலத்தில் வாழும் மதங்கொண்ட ஓர் யானையானது, பூத்துப் பொலிவு எய்தி நின்ற வேங்கை மரத்தினைக் கண்டு, அதனைப் புலி என மயங்கி மருண்டு, கறுவு கொண்டு, அதன்மீது வேகமாகச் சென்று மோதியது. அதனால் அவ்வேங்கை மரத்தின்கண் அழுந்திய தந்தங்களை மீண்டும் அம்மரத்தினின்று இழுக்க முடியாமல், அவ் யானையானது அலறிக் கதறி அழுது வருந்தி ஓலமிடுகின்றது.

இவ்வியற்கை வருணனைச் செய்தியை விளக்கிப் பாடலுறும் கபிலர், 'இராவணன், சிவபிரான் உமைப்பிராட்டியுடன் எழுந்தருளி வீற்றிருக்கும் திருக்கயிலை மலையினைப் பெயர்த்தெடுக்க முயன்று முடியாமல், அதன் கீழ் அகப்பட்டுக் கொண்டு அலறிக் கதறி அழுது ஓலமிட்ட நிகழ்ச்சியினை, உவமையாக எடுத்துக் காட்டிப் பாடி உவகை கூர்கின்றார்.

> இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
> உமையமர்ந்து உயர்மலை இருந்தனன் ஆக
> ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
> தொடிப்பொலி தடக்கையிற் கீழ்ப்புகுத்து அம்மலை
> எடுக்கல் செல்லாது உழப்பவன் போல;
> உறுபுலி உருஏய்ப்பப் பூத்த வேங்கையைக்
> கறுவுகொண்டு அதன்முதற் குத்திய மதயானை
> நீடிரு விடரகம் சிலம்பக் கூஉய்த்தன்
> கோடுபுய்க் கல்லாது உழக்கும் நாடகேள்;
>
> — கலித்தொகை.

மணிமேகலை :

(5, 6) செந்தமிழ் மொழியிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் 'மணிமேகலை' என்பது ஒன்று. மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்பவர், இதனை இயற்றியருளினர். பௌத்த சமயக் கொள்கைகளைப் பரப்புதற்கென்றே, இந்நூல் தோன்றியது. இதன் கண்ணும் இராமாயணம் பற்றிய குறிப்புகள் அமைந்துள்ளன.

கோவலனுக்கும் மாதவிக்கும் மகளாகப் பிறந்த 'மணிமேகலை' யானவள், அமுதசுரபி என்னும் அரும்பெறற் பாத்திரத்தைப் புத்தர் பெருமான் அவதரித்த வைகாசிப் பூர்ணிமை நாளில், மணி பல்லவத் தீவில், கிடைக்கப் பெறுகின்றாள். அஃது அள்ள அள்ளக் குறையாமற் பெருகும் அட்சய பாத்திரம். அதனைக் கொண்டு மணிமேகலை, 'காணார் கேளார் கால் முடப்பட்டோர் பேணுநரில்லோர் பிணி நடுக்குற்றோர்' முதலிய ஏழைகள் யாவருக்கும் உணவு வழங்கி உதவி செய்கின்றாள். விருச்சிகன் என்னும் முனிவராற் சபிக்கப் பெற்று, யானைத்தீ என்னும் தீராத பசி நோய்எய்திப் பன்னிரண்டு ஆண்டுகள் எங்கணும் வருந்தியுழன்ற காயசண்டிகை என்னும் கந்தருவப் பெண் ஒருத்தி, மணிமேகலைபாற் போந்து அவள் அமுதசுரபியினின்று வழங்கிய உணவை உட்கொண்டு, தீராத தன் நோய் தீரப் பெறுகின்றாள். `தற்கு முன்பெல்லாம் எத்துணை மலையளவு உணவையுண்டும் தன் பசி நோய் தணியாமல் இருந்த தன்மையினை மணிமேகலைக்கு அவள் கூறுங்கால், 'இராமபிரான் சேது பந்தனம் செய்த பொழுது வானர சேனைகள் கொண்டு வந்து எறிந்த பெரிய பெரிய மலைகள் எல்லாம் கடலின் கண் சென்று ஆழ்ந்து மறைந்து நின்றது போல, மலைமலையாகத் தான் இதற்கு முன்பு உண்ட உணவெல்லாம் தன் வயிற்றுக்குள் சென்று மறைந்து அடங்கிப் பசி தணிக்காமல் ஒழிந்தன' என்று கூறியதாகச் சீத்தலைச் சாத்தனார் பாடுகின்றார்.

> யானைத் தீநோய் அகவயிற் றடக்கிய
> காயசண் டிகைஎனும் காரிகை வணங்கி,
> நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
> அடலரு முந்நீர் அடைத்த ஞான்று
> குரங்குகொணர்ந் தெறிந்த நெடுமலை எல்லாம்
> அணங்குடை அளக்கர் வயிறுபுக் காங்கு,
> இட்டது ஆற்றுக் கட்டழற் கடும்பசிப்
> பட்டேன் என்றன் பழவினைப் பயத்தால்
>
> —மணிமேகலை 17, 7 - 14

> மீட்சி என்பது இராமன்வென் றான்என
> மாட்சியில் இராவணன் தோற்றமை மதித்தல்,
>
> —மணிமேகலை 27, 53 - 54

எனப் 'பத்துவகை அளவைகள்' பற்றி விளக்குங்காலும் 'மீட்சி' அல்லது பாரிசேடம் என்னும் பிரமாணம் பற்றிய உதாரணம் காட்டும் இடத்தில், இராமன் வென்றதும் இராவணன்

தோற்றதும் ஆகியசெய்தியை அவர்குறிப்பிட்டிருத்தலும் உணர்தற்குரியது.

சிலப்பதிகாரம் :

7. இன்று தமிழ் மக்களிடையே பொதுவாக அனைவராலும் பாராட்டப்பெற்றுச் சிறந்து திகழ்வது, சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியம். இதனை இயற்றியவர் இளங்கோவடிகள் என்னும் தவநலஞ் சான்ற முனிவரர். அவரைச் சமண சமயம் சார்ந்தவர் எனவும் சிலர் கூறுவர். அப்பெருந்தகையார் இயற்றியருளிய சிலப்பதிகார காவியத்திலும், இராமாயணத்தைப்பற்றிய இனிய குறிப்புகள் சில வருகின்றன.

கோவலன் புகார் நகரத்தைவிட்டு நீங்கி மதுரை மாநகர்க்குக் கண்ணகியுடன் புறப்படுகின்றான். அவன் புகார் நகரம் விட்டு நீங்கிய நிலையில் அந்நகரம், இராமனைப் பிரிந்த அயோத்தி போலப் பெரிதும் கலங்கி வருந்தியதாகக் கௌசிகன் என்னும் அந்தணன் கூற்றில் வைத்து இளங்கோவடிகள் பாடுகின்றார்.

பெருமகன் ஏவல் அல்லது யாங்கணும்
அரசே தஞ்சமென் றருங்கான் அடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும்பேது உற்றதும்.

—சிலப்பதிகாரம்.

8. மதுரைமாநகர் நோக்கிப் புறப்பட்ட கோவலன், வழியிற் கவுந்தியடிகள் என்னும் சமண சமயத் தவமூதாட்டியாரைக் கண்டு வணங்குகின்றான்; வணங்கித் தனக்கு நேர்ந்த மிகப்பெருந்துயரநிலை பற்றிக்கூறி மனம்வருந்துகின்றான். அதுபோது கவுந்தியடிகள், இராமபிரானே தந்தையின் கட்டளைப்படி கானகம் சென்று, அங்கே தன்மனைவியாகிய சீதையினை இராவணனின் சூழ்ச்சியால் இழந்து வருந்திப் பலவகை இன்னல்களை அடைந்தனன் என்றால், நம்போலும் மனிதர் எம்மாத்திரம்? என்று கூறிக் கோவலனுக்கு ஆறுதல் உரைகள் பகர்ந்ததாக இளங்கோவடிகள் பாடுகின்றார்.

தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வற் பயந்தோன் என்பது
நீஅறிந் திலையோ ? நெடுமொழி அன்றோ!

—சிலப்பதிகாரம்.

இராமனை 'வேதமுதல்வற் பயந்தோன்' என்றும்; இராமனது வரலாறாகிய இராமாயணம், மக்கள் அனைவராலும் அறியப்பெற்று நாடு முழுவதும் பரவியிருந்தமையின் 'நெடுமொழி' என்றும், இராமன் 'தந்தை தாய் வாக்கிய பரிபாலனம்' செய்தற் பொருட்டுப் பல இன்னல்களையும் மேற்கொண்டு நின்றான் என்பதனை யுணர்த்தத் 'தாதை ஏவலின் மாதுடன் போகிக் கடுந்துயர் உழந்தோன்' என்றும் கூறியிருக்கும் நுட்பங்கள் நுனித்தறிந்து மகிழ்தற்குரியன.

9. மேலும், சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டம் என்னும் பகுதியில், சேரன் செங்குட்டுவனுக்கும் கனக விசயர்களுக்கும் நிகழ்ந்த போர்த்திறம் பற்றிக் குறிப்பிடுகையில், தேவாசுரப் போர் 18 ஆண்டுகளும், இராம ராவணப் போர் 18 மாதங்களும், பாரதப்போர் 18 நாட்களும், செங்குட்டுவனும் கனகவிசயனும் நிகழ்த்திய போர் 18 நாழிகைகளும் நடைபெற்று முடிவுற்றன' என இளங்கோவடிகள் குறிப்பிடுதலும் காணலாம்.

செறிகழல் வேந்தன் தென்தமிழ் ஆற்றல்
அறியாது மலைந்த ஆரிய மன்னரைச்
செயிர்த்தொழில் முதியோன் செயிர்த் தொழில் பெருக
உயிர்த்தொகை யுண்ட ஒன்பதிற் றிரட்டி யென்று
யாண்டும் மதியும் நாளும் கடிகையும்
ஈண்டுநீர் ஞாலம் கூட்டி எண்கொள
வருபெருந் தானை மறக்கள மருங்கின்
ஒரு பகல் எல்லை உயிர்த்தொகை யுண்ட
செங்குட்டுவன்....

—சிலப்பதிகாரம்

தொல்காப்பிய மேற்கோள் :

10. இராமபிரான் தாடகைவதம் செய்து அகலிகை சாபம் தீர்த்து, விசுவாமித்திர முனிவர் அழைத்துச் செல்ல மிதிலைமா நகர்க்குட் போகின்றார். அங்கே வீதியிற் போய்க் கொண்டிருக்குங்கால், தற்செயலாக இராம

பிரான் அரசமாளிகையின் மேல் மாடியில் உலாவி நின்ற சீதைப் பிராட்டியினைக் காண் கின்றார். சீதையும் இராமபிரானைக் காண் கின்றார். இருவர் கண்களும் ஒன்றை ஒன்று சந்தித்தன! இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்திக் காதல் வயப்பட்டனர். இதனை,

எண்ணரும் நலத்தினள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றையொன்
றுண்ணவும் நிலைபெறு துணர்வும் ஒன்றிட
அண்ணலும்நோக்கினன் அவளும் நோக்கினள்.
பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்.

—கம்பராமாயணம்

எனக் கம்பநாடர் கவிதைச் சுவை பெருகக் கவின்மிகப் பாடுகின்றார். இராமன் ஜனகனின் சிவதனுசை முறித்த பின்பே சீதையைக் கண்ட தாக வான்மீகி முனிவர் வடமொழியிற் பாடி யிருக்கின்றார். ஆயினும், தமிழ்மொழியில் அகப்பொருள் இலக்கணம் வகுத்த முறை யினைத் தழுவி, ஜனகனின் சிவதனுசை முறிப்ப தற்கு முன்பே சீதை இராமபிரானைக்கண்டு காதல்கொண்டுவிட்டதாகக் கம்பநாடர் பாடி யருள்கின்றார். கவிச்சுவை யமையப் பாடும் கம்பரின் கற்பனைத் திறனுக்கு, இஃதொரு சிறந்த எடுத்துக்காட்டாகும் எனலாம்.

இங்ஙனம், கம்பநாடர் தாமே தம்முடைய மனம் சென்றவாறு பாடிவிட்டார் எனப் பிறரெவரும் குறைகூற இயலாதவகையில், அவர்க்கு ஆதாரமும் அடிப்படையுமாக அமையத்தக்கதொரு செய்யுள் ஒன்று, தொல் காப்பியப் பொருளதிகார நூற்பா ஒன்றின் மேற்கோளாக, ஆசிரியர் நச்சினார்க்கினியர் அவர்களால் எடுத்துக்காட்டப் பெற்றிருக் கின்றது.

ஆள்வினை முடித்த அருந்தவ முனிவன்
வேள்வி போற்றிய இராமன், அவனெடு
மிதிலை மூதூர் எய்திய ஞான்றே
மதியுடம் பட்ட மாக்கண் சீதை
கடுவிசை வில்ஞாண் இடியொலி கேளாக்
கேட்ட பாம்பின் வாட்டம் எய்தித்
துயிலெழுந்து மயங்கினள்.....

—தொல். பொருள், 54 உரை.

(11) இராமாயணத்தில் பரதனின் பாதுகா பட்டாபிடேகம் என்பது, ஒரு பெருஞ் சிறப்பு நிகழ்ச்சி. தனக்காகத் தனது தாய் ஆகிய கைகேயி பெருமுயற்சி செய்து பெற்றுத் தந்த அரசு கட்டில் உரிமையைப் பரதன் ஒரு சிறிதும் விரும்பாமல், துச்சமென மதித் துத் துறந்தான். தனது தமையன் ஆகிய இராமபிரானின் திருவடி நிலைகள் ஆகிய பாது கையினை விரும்பி வேண்டிப் பெற்றுத் தன் தலைமேற் கொண்டு போற்றி மகிழ்ந்தான். பரதனின் இப் பண்பு நலம் பெரிதும் வியக்கத் தகுவது.

தொல்காப்பியத்திற் போதரும் ''கட்டில் நீத்தபால்'' என்பதற்கு, 'அரசன் அரச வுரிமையைக் கைவிட்ட பகுதி. அது பரத னும் பார்த்தனும் போல்வார் அரசு துறந்த வென்றி' எனப் பொருள் விளக்கி உரை வரைந்து;

கடலும் மலையும் தேர்படக் கிடந்த
மண்ணக வளாகம், நுண்வெயில் துகளினும்
நொய்தால் அம்ம தானே! இஃதெவன்
குறித்தனன் நெடியோன் கொல்லோ? மொய்தவ
வாங்குசிலை இராமன் தம்பி, ஆங்கவன்
அடிபொறை ஆற்றின் அல்லது
முடிபொறை ஆற்றலன் படிபொறை குறித்தே

எனவரும் பழையதொரு சிறந்த மேற்கோட் பாடலையும், ஆசிரியர் நச்சினார்க்கினியர் எடுத் திக் காட்டியருள்கின்றார்.

(12) இராமாயணத்தில் வரும் பற்பல சிறந்த இனிய சுவைமிகு பகுதிகளில், 'விபீடண சரணகதி' என்பது மிகவும் முதன்மை வாய்ந் தது. இராவணனை விட்டுப் பிரிந்து போந்த விபீடணனை, இராமபிரான் தனது படைத் துணையாக அமைந்த சுக்கிரீவன் அநுமான் முதலிய வானரசேனை வீரர்கள் பலரொடும் கலந்து உசாவியபின்னர், ஏற்றருள முடிவு செய்கின்றான்,

குகனொடும் ஐவர் ஆனேம்
முன்பு, பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம் ;
புகலரும் கானம் தந்து
புதல்வராற் பொலிந்தான் நுந்தை

என்றும்,

''ஏழினேடு ஏழாய் நின்ற
உலகும், என் பெயரும், எந்நாள்
வாழும்நாள் அன்று காறும்,
வாளெயிற்று அரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம்
நின்னதே தந்தேன்''

என்றும், அன்பு ததும்பும் இன்சொற் கூறி, இராமபிரான் விபீடணனைத் தழுவி ஏற்றுக் கொள்ளுகின்றான்.

தொல்காப்பியப் புறத்திணைத் துறைகளுள் ஒன்றாக வரும் ''கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம்'' எனவரும் பகுதிக்கு, ''தன்னை இகழ்ந்தாரையும் தான் இகழ்ந்தோரையும் கொள்ளார் (பகைவர்) என்ப. பகைவர் நாட்டினைத் தான் கொள்வதற்கு முன்னேயும் கொண்டான் போல வேண்டுவோர்க்குக் கொடுத்தல், 'கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம்' எனப்படும். 'ஒன்னார் ஆரெயில் அவர்கட் டாகவும் நுமதெனப் பாண்கடன் இறுக்கும் பெரியோய்' (புறம் 203) என்பது காண்க. 'ஆனா ஈகை அடுபோர்' (புறம் 42) என்பதும் அது. இராமன் இலங்கை கொள்வதன் முன்பே விபீடணற்குக் கொடுத்த துறையும் இது'' என ஆசிரியர் நச்சினார்க்கினியர் அழகுற எழுதியிருக்கும் விளக்கம், இங்கு நாம் பொன்னினும் மணியினும் போற்றத் தக்கதாகும்.

(13) தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் வரும் புறத்திணைத் துறைகளுள் தோலின் பெருக்கம் என்பது ஒன்று. அஃதாவது ''மதில் மேற் சென்றுழி மதிலகத்தோர் அம்புமாரி விலக்குதற்குக் கிடுகும் கேடயமும் மிடையக் கொண்டு சேறல்'' எனப் பொருள் வரைந்து,

இருசுடர் இயங்காப் பெருமூது இலங்கை
நெடுந்தோள் இராமன் கடந்த ஞான்றை
எண்குஇடை மிடைந்த பைங்கட் சேனையில்,
பச்சை போர்த்த பல்புறத் தண்ணடை
எச்சார் மருங்கினும் எயிற்புறத்து இறுத்தலில்,
கடல்சூழ் அரணும் போன்றது
உடல்சின வேந்தன் முற்றிய ஊரே

என்னும் அழகிய இனிய ஒரு மேற்கோட் செய்யுளினையும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டியிருக்கின்றார். இதன்கண் இலங்கைமா நகரினை இராமபிரான் முற்றுகையிட்ட செய்தி உவமையாக வந்திருத்தல் உணர்தற்கு உரியது.

(14) ஆசிரியர் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள புறத்திணைக்குரிய துறைகள் பலவற்றுள், ''அழிபடை தட்டோர்த் தழிஞ்சி'' என்பதும் ஒன்று. தமது படைக் கலங்களை இழந்து தோல்வியுற்றுப் புறங்கொடுக்கும் நிலையிலுள்ள எளிய பகைவர்களின் மீது படைகளைச் செலுத்திக் கொல்ல நினையாமல், அவர்கள்பால் இரங்கிப் பரிவுகாட்டுதல் என்பது இதன்பொருள். 'அழிகுநர் புறக்கொடை அயில்வாள் ஓச்சாக் கழிதறு கண்மை காதலித்து உரைத்தன்று' என்பது, இதற்குப் பின்னையோர் வகுத்த இலக்கணம்:

ஆளயா உனக்கு அமைந்தன ?
மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனை;
இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன்
நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல
நாடுடை வள்ளல் !

வாரணம் பொருத மார்பும்,
வரையினை எடுத்த தோளும்,
நாரத முனிவர்க்கு ஏற்ப
நயம்பட உரைத்த நாவும்,
தார்அணி மவுலி பத்தும்,
சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு
வெறுங்கையோடு இலங்கை புக்கான் !

எனவரும் இனிய கம்பராமாயணச் செய்யுட்கள், தமிழறிவு சிறிதுடையாரும் உணரும்

சிறப்புடையவை, தொல்காப்பியர் குறித்த ''தழிஞ்சி'' என்னும் துறைக்கு இவை மிகப் பொருத்தமான எடுத்துக்காட்டுகள் ஆகும்.

''பேராண்மை என்ப தறுகண்;
ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்று, அதன் எஃகு''

எனவரும் திருக்குறளுக்கு, ''பகைவர்மேற் கண்ணோடாது செய்யும் மறத்தை நூலோர் மிக்க ஆண்தன்மை என்று சொல்லுவர்; அப் பகைவர்க்கு ஒரு தாழ்வு வந்ததாயிற் கண்ணோடி இரக்கம் கொண்டு, அவர் அதுதீர்த்துக் கோடற் பொருட்டு உபகாரம் புரியும் தன்மையை, நூலோர் ஆண்தன்மையாகிய வீரத்திற்குக் கூர்மை என்று சொல்லுவர்'' எனப் பொருள் வரைந்து, ''அஃதாவது ''இலங்கையர் வேந்தன்;' (இராவணன்) போரிடைத் தன் தானை முழுவதும்படத் தமியனாய் அகப்பட்டானது நிலைமை நோக்கி, அயோத்தியர் இறை (இராமபிரான்) மேற்செல்லாது, இன்று போய் நாளை நின் தானையோடு வா என விட்டாற் போல்வது. இவை யிரண்டு பாட்டும் தழிஞ்சி'' எனப் பரிமேலழகர் விளக்க உரையும் வகுத்தருளியிருத்தல் நினைத்து நினைத்து வியக்கத் தகுவது.

முடிவுரை :

இதுகாறும் சங்க நூல்களில் காணப்படும் இராமாயணம் பற்றிய குறிப்புகள் சிலவற்றை இயன்றவரை ஆராய்ந்து கண்டோம். இலக்கியங்களை ஒரு வகையில் 'துணுக்குகளின் துணுக்கு' என்று குறிப்பிடலாம்.* ஏனெனில், ஒரு நாட்டில் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடைபெற்றாலும், அவைகள் அனைத்தையுமே பற்றி மக்கள் ஆராய்வதோ, பேசுவதோ இல்லை. ஒருசில நிகழ்ச்சிகள் மட்டுமே மக்களால் மதிக்கவும் பேசவும் பெறும். அவைகளுள்ளும் மிகச் சிலவே எழுதிவைக்கப்பெறும்; அவற்றுள்ளும் மிகமிகச் சிலவே நூல்களில் இடம்பெறும். அந்நூல்களினுள்ளும் ஏதோ ஒரு சிலவே இலக்கியங்களாக விளங்கும் மாண்பை எய்தும். அவைகள் தம்முள்ளும் ஒருசிலவே விரைவில் அழிந்துபோகாமல் நிலைத்துநிற்க வல்லன. அங்ஙனம் நிலைத்து நிற்க வல்லனவற்றுள்ளும் இரண்டாயிரம் ஆண்டுகளாக நிலைத்து நின்று திகழக்கூடியவை, மாபெரும் சிறப்புடைய ஒரு சில நூல்கள் மட்டுமேயாகும். இம்முறையில் ஆராய்ந்து பார்த்தால், நம்முடைய பழந்தமிழ்ச் சங்க நூல்களில் அமைந்து காணப்படும், இராமாயணம் பற்றிய குறிப்புக்கள் எத்துணைச் சிறப்பும் விழுப்பமும் உடையவை என்பது தெற்றென விளங்கும். இத்தகைய இராமாயணம் என்னும் இதிகாசத்தினை நாம் அனைவரும் கற்றுப் போற்றி நலம் எய்துவோமாக!

—ஆசிரியர்

* "Literature is a fragment of a fragment; of all that ever happened or has been said, but a fraction has been written, and of this but little is extant."

—GOETHE.

"வாழ்வெனும் பாதையில்"

தமிழ்நாடு முதலமைச்சர்

மாண்புமிகு. கலைஞர். திரு. மு. கருணாநிதி அவர்கள்,

[திருச்சி வானொலி நிலையத்தினர், 'சாதாரண' புத்தாண்டுப் பிறப்பு நாள் (14—4—1970) அன்று "வாழ்வெனும் பாதையில்" என்னும் தலைப்பில், கவியரங்கம் ஒன்றற்கு ஏற்பாடு செய்து ஒலிபரப் பினர். சென்னை, கோவை, திருநெல்வேலி, பாண்டிச்சேரி வானொலி நிலையங்களிலும், அஃது அஞ்சல் செய்யப்பெற்றது. அதுபோது, அக்கவியரங்கத்திற்குத் தலைமை தாங்கிய, நமது தமிழ்நாடு முத லமைச்சர் மாண்புமிகு கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்களின், சிறந்த செந்தமிழ்த் தலைமைக் கவிதை, இங்கு வெளியிடப்பெறுகின்றது.

ஆசிரியர்]

வணக்கம், வந்திருக்கும் அனைவர்க்கும் — கவி
வடித்தளிக்கும் புலவர்க்கும் வணக்கம் ——
நித்திரையில் ஆழ்ந்திருந்த நீள் வையம்
நீல விழி ஒளிகாட்டி நடை போட்டு
முத்திரைகள் பலவற்றைப் பதிப்பதற்கு
முழு மூச்சாய் ஆண்டுபல உருண்டுருண்டு
சித்திரைத் திங்களிலே சிரிக்கின்ற
செழுமை கண்டோம்... பெருமை கொண்டோம்.

சௌமியா தான் சென்ற ஆண்டு... நம்
சௌமியனைத் தமிழர்க்குத் தந்த ஆண்டு.
சௌமியாவை அண்ணனுமே புனை பெயராய்ப் — பூண்டு
சுவை சொட்டக் கதை குவித்துப் போனார் — மாண்டு;
'சௌமியா' மறைந்து 'சாதாரண' வந்தது போல் — அந்தச்
சௌமியன் மறைந்து இந்தச் சாதாரணன் வந்துள்ளேன்.

அரங்கின்றி வட்டாடுகின்றார் அரசியலில் பல பேர்.........
குரங்கின்றிச் சேட்டைகள் ஏராளம் காண்கின்றோம் சமூகத்தில்......
சிரங்கொன்றைச் சொரிந்து விட்டால் பலவாய் ஆகும்.
தரங்குன்று மனிதரையும் கடிந்து கொண்டால் அவ்வாறே தான்.

இந்நிலையில்,
இச்சாதாரணன்;
புவியாள வந்தாலே பொறுப்பதில்லை யென்னும்போது
கவியாளவும் வந்துவிட்டால் என் கதி தான் என்னே ?
அவி சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்வோன் அந்நாள் ஆள்வோன்.
கவி தெரிந்து ஆயிரம் பாடல்கள் புனைவோன் இந்நாள் ஆள்வோன்.

பொறுக்குமா மனம் ?
அடுக்குமா இது ?
தடுக்கலாம் இதை
அடக்கலாம்; உடன்
தகர்க்கலாம்; கை
முறிக்கலாம்; கால்
முடக்கலாம்; எனப் பலர்
முனகலாம்......... அது;
முடியுமா ?.........
இருள் விலகிப் பொழுது விடியுமா ?
ஏழைக்கின்னும் உதவிட முடியுமா ? இந்தச்
சாதாரணன் சிந்திக்கின்ருன்

பூதாகாரப் பேயிருள் விலகி விட்டால்
தீதான தனியுடமைப் பற்றற்றுச்
சீரான பொதுவுடைமைத் தத்துவங்கள்
ஏராளும் மனிதர் வாழ்வில்
தாராள மாயெங்கும் தங்கிடுமே — எனச்
சாதாரணன் சிந்திக்கின்ருன்.........

வாழ்வெனும் பாதையை வளப்படுத்த
வன்முறையால் ஆகாதெனல் எம் கொள்கை.
தாழ்வு உயர்வெனும் பேதம் நீங்கத்
தண்ணொளி சேர் அமைதி தேவை.
புரட்சி யெலாம் மனப்புரட்சி!
கிளர்ச்சியெலாம் உளக் கிளர்ச்சி!
எழுச்சி யெலாம் எழுத்தில் பேச்சில்......
எண்ணமெலாம் சமதர்மம் செயல்படுத்த ...
இவையிருந்தால் என்றைக்கோ வந்திருக்கும்
ஏற்றமிகு பொற்காலம் — புதுமைக் காலம்!

வாழ்க்கை யென்பது என்ன வென உணர்ந்த மனிதன் இருக்கின்ருனு!
பறவையும் விலங்கும் ஊர்வன மற்றும் '' உயிர் வாழ்கின்றன ''
என்போம்.
பகுத்தறிவு மனிதன் வாழவில்லை; அவன் வாழ்க்கையை நடத்துகின்
ருன் என்போம்
நடத்துகின்ருேம் நாம் தான் வாழ்க்கையை என்ற
நம்பிக்கை யில்லான் மனிதனே அல்ல; ஏதோ
கடத்துகின்ருேம் நாளை என்று —
நகர்த்துகின்ருர் பலபேர் வாழ்வை!

இருவர் தெருவில் சந்திக்கும் போது
என்னப்பா சுகமா எனக் கேட்பின்;
' ஆமாம் சுகந்தான் ' என்ற பதில் வந்திடுமோ பகர்ந்திடுவீர்......
'' ஏதோ இருக்கின்றேன் '' என்றிழுத்து
ஏக அலுப்பில் பதில் அளித்து நகர்கின்றார்; நண்பரை விடுத்து
ஏனிந்தச் சோர்வு வாழ்க்கையிலே...இதழ்த்
தேனீந்த மனைவி பொய் என்பார் — அவட்குத்
தானீந்த குழந்தை பொய் என்பார் —
' ஆ ' நீந்த வேண்டுமே சம்சாரக் கடல் என்பார் —

எப்போது இதெல்லாம் எனக் கேட்டால்
தப்பாது வயது சொல்வேன்; எழுபதுக்கு மேல்தான்! பாவம்!
இருபதுக்கும் முப்பதுக்குமிடையில் கூட
இன்ப மெனில் பேரின்பந்தான் என நவிலும்
இளந்துறவி உண்டே என்பீர்......
இதில் ஒன்றிரண்டு தவிர எல்லாமே எனக்கு ஐயம்......
இவரெல்லாம் பஞ்ச புலன் அடக்கவில்லை......
இவர்க்குப் புலன்தான் ஒன்றிரண்டு பஞ்சமென்பேன்......

இன்னும் சிலரோ;
அனைத்தும் பொய் என்று பகலில் கூறி......
அனைத்தும் உண்மையென இரவில் சொல்வார்......
வாழப் பிறந்தவன் தான் மட்டுமென்று
தாழப்பறந்து மீன் கொத்தும் பறவை போல்
வலியோர் சிலர் எளியோர் தமை
வதையே செய்தல் வாடிக்கையாம்
திருத்திச் செயல்படுதல் அவர்க்கு நன்று — அல்லால்
திருத்துகின்ற சட்டங்கள் திருத்தி விடும்.
தீயவர் கொட்டம் நிறுத்திவிடும்.

குட்டக் குட்டக் குனிகின்ற குப்பனுக்கோ
குலதெய்வம் துணையென்ற நினைப்பினிலே
குனிந்து குனிந்து கூன் மேவும்
கூனன் நிமிர்வதற்கே மருந்துகள்
கூடிய விரைவில் வரும். அவன்,
குலதெய்வம் விளக்கேற்றும் புதுவீட்டில்!
இனிக்கின்ற சர்க்கரையைக் குழந்தைக் கூட்டம் அள்ளி அள்ளி வாயில்

நிறைக்கின்ற காட்சிதனைக் கண்டிருப்போம் .....
சுவைக்கின்ற இன் த்தை அளவறிந்து நுகராமல்......மாடு;
மிதிக்கின்ற சேறு போல் ஆக்குகின்றார் சிலபேர் தம் வாழ்வை!
வேண்டியமட்டுமே உண வருந்தி மகிழும் வேங்கை — பசி
தாண்டிய பின்னும் மான்களை விழுங்கி மயங்கும் பாம்பு!
காடகத்தில் இரு காட்சி கண்டபின்னும் — வாழ்வு
நாடகத்தில் நடிக்கின்றோர் கற்கவில்லை — என்ன செய்ய ?

ஆறிலும் சாவு நூறிலும் சாவு
ஆனது ஆகட்டும் என்று
அறப்போர் புரிவோன் அரிமா வீரன்.
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
ஆனது ஆகட்டுமென்று
அயராதின்பம் அனைத்தும் துய்ப்போன்...வீரனே அல்ல; விலங்கினும் கீழோன்.
தன்வீடு — தன் மனைவி — தன் பிள்ளை — தன் சுற்றம் —
என்றிருப்போன் நடத்துவதும் வாழ்வல்ல!
என்நாடு — என் உரிமை—என் மொழியாம் — அனைத்தும் காக்க
என்னாலே இயன்றதெல்லாம் செய்திடுவேன் என்போன்தான் பொது மனிதன்.

ஆதலால்;
மதுவுண்ட வண்டுபோல் தேன்குடத்தில் மிதந்திடாதீர்.
'எது வேண்டும்' எனக்கென்று 'துறவு மொழி' புகன்றிடாதீர்...
எல்லாமே எனக்கென்று
ஏழைகளைப் பிழிந்திடாதீர்
வாழ்வெனும் பாதையிலே
வழிகாட்டும் பலகைகளாம்
கலையும் கல்வியும் கவிஞர்கள் காட்டுவர்.
பதவியும் பக்தியும் பாவலர் விளக்குவர்.
புகழும் செல்வமும் புலவர்கள் பொழிவர்.

முதலில்...கல்வி... .....
கற்றது கைம்மண் அளவென்பர்..........
கற்றவர்க்குக் கையில் மண்
கல்லா தார்க்கோ தலையில் .....என்பேன்........
கைமண்ணால் பானை வனைவர்.
தலைமண்ணோ சுளைக்கும் ஆகாதே;
'இளமையிற் கல்' என்றால்
இளமையிலே கல் எடுத்து எறிதல் என்று
ஏன்தான் சிலபேர் பொருள் கொண்டார் ?

கல்வியிற் சிறந்தவர் கம்பர் என்பர்.
கல்வியிற் சிறந்தவர் வம்பராதல் தீதன்றோ ?
முகத்திரண்டு புண்ணுடையார் கல்லாதோர் எனில் — கற்றவரோ
முப்பத்திரண்டு புண்ணுடையராய் விளங்கல் ஏனோ; சிந்தித்தீரா ?
கல்லூரி கண்டவன் நானல்ல எனினும் — என் கையில்.........
கல் ஊறியதில்லை எப்போதும்.......
கவியூறும் நெஞ்சில்
கலையூறும் கொஞ்சம் ....
புவியேறப் புகழேறும்

தமிழுரை ஆள்வதற்குத் — தமிழில்
ஏற்றது போதுமென்று
உற்றவர் சொன்னதாலே
ஒப்பினேன் உளமின்றி......இன்று
தப்பினேன் உம் தயவால்!
வாழ்வெனும் பாதையிலே
வறட்டுக் கதைபேச நேரமில்லை.
வளமான கல்வி பற்றி
வந்திருக்கும் புவியரசு பாடக் கேட்போம்.

(புவியரசு பாடியதும்)

அடுத்து,
பதவி —
அடவியிலே ஆயுள்வரை இருப்பதுவும் பெரிதல்ல......
குளவி நுனிக் கொடுக்கினிலே இதழ் பொருத்தி வலிபொறுப்பதுவும்
பெரிதல்ல. இந்தப்
பதவியிலே இருப்பதுதான் பெருந்தொல்லை கச்சியே கம்பனே!......
கோபுரத்தின் உச்சியிலே இருக்கின்றேன் என எண்ணிக்
குடல் கருகும்பேர்வழிகள்......
கோபுரத்து மாடத்தில் கூடுகட்டி வாழ்கின்ற புறுக் கூட்டம்
கொண்டிருக்கும் மகிழ்வு கூட எனக்கில்லை என அறிந்து
கூறிடுக அனுதாபம்... கொண்டிடுக நட்புணர்வு !

பதவியெனும் கொடுங்கத்தி சிலபேரின் கழுத்தறுக்கும் — பிறர்க்கு
உதவிபுரிவதற்கே பதவியெனப் பொறுப்பேற்றால்
உயிர் பறிக்கும் கத்தியாலே பல உயிர்கள் காத்திடவும் கூடுமன்றோ ?
பழமறுக்கும் கத்திதான் பதவியென்போம்......
பழிவாங்கும் வாளாக இருத்தல் கேடு !

சிரஞ்சீவியாய்ப் பதவியில் இருப்போமென்று
செருக்குமிகக் கொண்டலைந்த லூயிமன்னன்
சிரம் சீவிப் போட்டுவிட்டுப் புத்தாட்சி கண்ட கதை மறக்க
மாட்டோம்.

அறங் கூறும் வள்ளுவர்க்கு வாய்த்த நல் தொண்டர்களால்
புறங்கூறல், புறக்கணித்துப் புவியாண்டால்; — நம்
திறங் கூறப் புலவர் கூட்டம் .
திரண்டு வரும் .... தேசம் வாழ்த்தும் ....

உடும்பு போல் பதவியிலே ஒட்டிக் கொள்வோன்
உடும்பு வேண்டாம் கைவிட்டால் போதுமென்பான்.
கரும்பு போல் இனிக்குதென்று கடிக்கத் தொடங்கி
கரிக்குதப்பா உப்பாக எனக் கழன்றோர் உண்டு;
பதவி பற்றிப் பாடுதற்குப் பாவலராம் ரகுமான் இருக்கையிலே
பல வரிகள் நானேதான் பாடிவிட்டேன் .. — இது;
பதவியிலே உள்ள மோகமல்ல;
பாட்டினிலே உள்ள மோகமென்பேன்... .

நாட்டினிலே நற்கவிகள் பெய்துவரும்
நம் நண்பர் ரகுமானின் நாவெல்லாம்
பதவித்தேன் சொட்டுவதைப் பார்த்திடுவோம் .....
பதவிதனைப் பதம் பிரித்தால் .....
'ப' கரம் நீங்கி ..... தவி ! தவி ! என்று சொல்லும் .. ..
தவிக்கின்றோம் அதனாலே பதவி என்றார்... ..
பாடட்டும் அவர் பாட்டை ! பிறகு பார்ப்போம் !!.

(ரகுமான் பாடியதும்)

அடுத்து,
செல்வம் ..
'' செல்வோம் செல்வோம் '', என்று உருண்டு
செல்லுவதால் 'செல்வம்' என்பார் — பண்டிதர்கள் !
சீமான்கள் இரும்புப் பேழையிலே .....
'செல்' அரித்துப் போகுமட்டும் இருப்பதாலே
செல்வம் எனச் செப்புதலும் பொருத்தம்தானே !

இலக்குமிதான் செல்வத்தின் தெய்வம் என்பார் !......
இலக்குமிகள் ஒருகோடி வறுமையிலே உழல்கின்றார்......
செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் என்றவர்தான்......
பொருளிலார்க்கு இவ்வுலகமில்லையெனப் புரிய வைத்தார்......
செவிச் செல்வம் போதுமென்று நிறைவு கொண்டால்
செவியார நாலு வாழ்க போட்டு;
சென்று வருக என்றிடுவார், வழிச் செலவு வழங்காமல் வானொலியார் !

செல்வமுடையார் சீதக்காதி போல் இருத்தல் வேண்டும் .....
செழுந்தமிழன் குமணன் போல் பாரி போல் செகமதிலே சிறக்க
வேண்டும் ...
செல்வமுடையார்க்கு அவர் இலக்கணம் ...

செல்வ — '' முடை உடையார் '' க்கு .. ஆவிற்கு நீரென்று
இரப்பினும் நாவிற்கு இரவின் இளி வந்தது இல் ''
என்ற குறள்தான் இலக்கணம் .. !
செந்நாப் புலவர்க்கெல்லாம் செல்வ மழை — கொட்டுதற்குச்
சிறப்புறு தமிழண்ணல் இருக்கும்போது
செல்வமனைத்தும் நானே தட்டிக் கொள்ளல் முறையே அல்ல .....
செல்வம் தருக என அழைக்கின்றேன் தந்திடுக தமிழண்ணல் !......

(தமிழண்ணல் பாடியதும்)

அடுத்து,
கலை
கவியரங்கம் முடிந்த பின்னர் செய்யும் வேலை...
கலை; அரங்கை ! என்பார் நன்றி கூறி !
கலைத் திலகம் என்றாலோ பட்டமாகும் !
கலை — திலகம் ! என்றாலோ ! மங்கை பட்ட மரமாவாள் !
கலை, பிணக்கும் அரசியலை இக்காலத்து !
கலை பிணக்கு—அரசியல் ஏது எக்காலத்தும் ?
கலை பிணக்குத் தன் நிழலை அளித்த செயல்
கலித்தொகையில் காதல் காட்சி
தன் நிழலைத் தானே கண்டஞ்சும் காட்சி
கலையுலகில் நாள்தோறும் காணும் காட்சி ..
கலை குறைந்தால் மதி குறையும்
காண்கின்றோம் நாள்தோறும் வானவெளியில் !

கலை நிறைந்தோர் உள்ளத்தில் கருணை உண்டு...
கவலைகளை உணர்கின்ற பண்பும் உண்டு ..
கண்ணீர் விடுகின்ற ஏழைதனைக் காணும்போது...
கலைஞன்; தான் படைத்த பாத்திரத்தைக் காணுகின்றான்...
கற்பனை ஓட்டத்தில் அவன் நிலையை அறிகின்றான்...
கவலைதனைத் தீர்ப்பதற்குக் கடமைதனைச் செய்கின்றான்...
கலை கலைக்காக எனக கதைத்தோர் ஓய்ந்துவிட்டார்.
கவின் ஒளி வீட்டுக்காக; விளக்குக்காக அல்ல; என விளக்கம்
பெற்றார் !

கலைகளிலே எத்தனையோ வகையுண்டு — தொகையுண்டு
கவின் கலை
நுண் கலை
ஆடற் கலை
பாடற் கலை

ஆய கலை அறுபத்து நான்கு கலை...
வட கலை, தென் கலை... தவிர...!
இத்தனை கலைகளையும்
முத்தனைய தமிழ் எடுத்து
இவண் வழங்க வந்துள்ளார் என் நண்பர் — வாலி என்பார் !

வாலுடையவன் வாலி என்று சொல்வது தவறென்று — காட்டுதற்கே
வாலில்லா வாலியவர் வந்துள்ளார்...
வாலுடையோன் வாலி என்றால்....
காலுடையோரெல்லாம் காலிகளோ...? இல்லை... இல்லை...
வண்ண மணித் தமிழால்
வண்ணச் சரம் தொடுக்க வந்திடுக வாலியாரே... (வாலி பாடியதும்)

அடுத்து,
புகழ்...
கடற்கரையில் தலை நீட்டும் நண்டுகளை
கைநீட்டிப் பிடிக்க ஓட...
உடனவைகள் போனஇடம் தெரியாமல் பதுங்கிவிடும்...
புகழும் அதுதான் !
தேடி அணைத்தால் ஓடி விலகும்...
கோடி கொடுத்தால் வாடி வதங்கும்...
மாடிகள் கண்டு மயங்காது...
மூடி மறைத்தால் தயங்காது..-
நாணய முள்ளவனை நத்திக் கிடக்கும்...
ஆணவமுள்ளவனை எட்டி உதைக்கும்...
தியாகியின் கால்களில் மலர்கள் கொட்டும்...
தீரனின் சேவடி தொழுது வணங்கும்...
அரியதாம் புகழின் பெருமைகள் பற்றி
மரியதாசெனும் மாண்புறு கவிஞர்
இனிய தாம் மொழியில் இயற்றுவார் கவிதை !

(மரியதாஸ் பாடியதும்)

அடுத்து,
பக்தி.....
கைத்தல் நிறை கனி அப்பமொடவல் பொரி
வைத்துப் படைத்தல் பக்தி எனிலோ
சற்றும் ஒப்பார் ஆண்டவன் என்போர்
திருத்தலம் கோயில் திருக்குளமெல்லாம்
தீர்த்த யாத்திரை செய்வதும் பக்தி...
திருத்தலம் கோயில் திருக்குளமெல்லாம்

இந்திய அரசின் உள்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஒய். பி. சவான் அவர்களும், தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்களும், ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரங்கநாதசுவாமி கோயிலுக்கு வருகை தந்தபொழுது, நகராட்சித் தலைவர்களாலும், அறங்காவலர் பெருமக்களாலும், கோயிற்சிறப்பு மரியாதைகளுடன் வரவேற்கப்படுதல் (22 - 3 - 70).





மன்னார்குடி ஸ்ரீ சொக்கநாதர், மீனாட்சி யம்மை கோயில் மீனாட்சி கல்யாண மண்டபக் கால்கோள் விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. **கே. வி. சுப்பையா, B.A.,** அவர்கள் உரைநிகழ்த்துதல் (29-3-70).



மன்னார்குடி ஸ்ரீ சொக்கநாதசுவாமி மீனாட்சியம்மன் கோயில் மீனாட்சி கல்யாண மண்டபத்திருப்பணிக்கு, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. **கே. வி. சுப்பையா, B.A.,** அவர்கள் கால்கோள் விழா நிகழ்த்துதல் (29-3-70).

மன்னார்குடி ஸ்ரீ சேதுபாவாசுவாமி தரும ஸ்தாபனம் அரித்திராநதி மையமண்டபத் திருப்பணியை அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. **கே. வி. சுப்பையா, B.A.,** அவர்கள் தொடக்கி வைத்தல் (29-3-70).

மன்னார்குடி ஸ்ரீ சேதுபாவாசுவாமி தரும ஸ்தாபனம் அரித்திரா நதி மையமண்டபத் திருப்பணியை அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. **கே. வி. சுப்பையா, B.A.,** அவர்கள் தொடங்கி வைத்தல். உடனிருப்பவர்கள் புலவர் திரு. க. **முருகையன், M.L.A.** அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. **துரையரசன்,** அறநிலைய ஆணையர் முதலியோர் (29-3-70).

திடமுடன் மனத்தில் நிறுத்தலும் பக்தி...
காலொற்றிக் கடவுள் மீது கண் எடுத்துக்
கண்ணப்பன் வைத்ததுவும் ஒரு பக்தி...
கல் எறிந்து சாக்கியரும் கடவுளேயே
கண்மூடிப் பூசித்ததும் மற்ருெரு பக்தி...
எம்பெரும் சிவனே ! என்று இறையைப் போற்றி
ஏழைகளே ஏறெடுத்துப் பார்க்காவிட்டால் எங்கே பக்தி ?
ஏகலேவன் கட்டைவிரல் காணிக்கை தந்ததிலே குருவின் பக்தி...
ஏ குருவே உன் கையைக் காணிக்கை தா என்பதுதான் புதிய பக்தி.
பாவையவள் கணவனேயே தெய்வமெனல் பழைய பதிபக்தி.
பாவம் அவன்; பாவையிடம் மண்டியிடல் பதியின் பக்தி...?
பக்தியிலே பல உண்டு... அதையெல்லாம்
சக்தி மிகு வார்த்தைகளால்...
சர வரிசை விடுவதற்கு
முடியரசு வருகின்ருர்...
விரைவில் முடி ! அரசு...
எனச் சொல்லாமல் அழைக்கின்றேன். வந்திடுக !

(முடியரசர் பாடியதும்)

முடிவுரை :
வாழ்வெனும் பாதைக்கு வந்தவரே;
வழிகள் பல கண்டவரே...
கல்வி பெறுக; அதனைக் கசடறப் பெறுக;
பதவி பெறுக; அதனைப் பண்புடன் பெறுக;
செல்வம் பெறுக; அதனைச் சீலமுடன் பெறுக !
கலை மணக்கட்டும் நும் வாழ்வில்...
புகழ் குவியட்டும் நீர் தேடிப் போகாமல்...
பக்தி வெள்ளம்; நாடு, மொழி, மக்கள் மீது பாய்ந்தாலே...
இறைவன் அருள் கிட்டிவிடும்...
ஏழையின் சிரிப்பில்தான் அவன்
இருக்கின்ருன்... இதை மறவாதீர்.

வணக்கம் !

அப்பரும் சம்பந்தரும்*

ந. ரா. முருகவேள், M. A., M. O. L.

முன்னுரை :

அப்பரும் சம்பந்தரும், நமது தமிழ் நாட்டினை வாழ்விக்கத் தோன்றிய சான்றோர்களில் குறிப்பிடத்தக்க பெருஞ் சிறப்புடையவர்கள் ஆவர். சங்க காலம் தமிழ்மொழியின் பொற்காலம் என்றால், அப்பரும் சம்பந்தரும் வாழ்ந்தருளிய காலம், சைவ சமயத்தின் பொற்காலம் எனலாம். அப்பரும் சம்பந்தரும் ஆகிய இவ்விரு பெருமக்களுமே,

திசையனைத்தின் பெருமைஎலாம்
　　தென்திசையே வென்றேற,
மிசையுலகும் பிறவுலகும்
　　மேதினியே தனிவெல்ல,
அசைவில் செழுந்தமிழ் வழக்கே
　　அயல் வழக்கின் துறைவெல்ல,
இசைமுழுதும் மெய்யறிவும்
　　இடங்கொள்ளும் நிலைபெருக,

அவதாரம் செய்தருளியவர்கள் ஆவர் எனலாம். இவர்களால் தமிழ் நாட்டிற்கு விளைந்துள்ள அரும்பெறல் நலங்களுக்கு அளவே யில்லை.

அப்பரும் சம்பந்தரும் :

அப்பரும் சம்பந்தரும், வெறும் சமயத் தலைவர்கள் மட்டுமே அல்லர். சமயம்-மொழி-சமுதாயம்-கலை - நாகரிகம் - பண்பாடு முதலிய எல்லாத் துறைகளிலுமே, அவர்கள் நமக்கு வழிகாட்டி, நலங்கள் பலப்பல புரிந்துள்ளனர். சங்க காலத்திற்கும் பின்னர், அஃதாவது கி.பி. 2—ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 7—ஆம் நூற்றாண்டு வரையில், களப்பிரர் முதலிய வேற்றுப் புல அரசர்களால் தாக்குண்டு பல்லாற்றானும் சிதைந்து சீரழிந்து இருளடைந்து கிடந்த நமது தமிழ்நாட்டிற்குப் புத்துயிர்ப்பும் மறுமலர்ச்சியும் புதுவாழ்வும் அளித்து, எல்லாத்துறைகளிலும் அஃது இனிதோங்கித் தழைத்து வளருமாறு செய்தருளியவர்கள் அப்பரும் சம்பந்தருமே யாவர் எனத் துணிந்து கூறலாம்,

சாலப் பெரியர் :

சமயம் என்பது, சங்க காலத்திற் பெரிதும் மக்களிடையில் அவரவர்களின் உள்ளுணர்வு அளவிலேயே அமைந்து விளங்கியது. அதனை ஒரு பெரும் சமுதாய இயக்கமாக ஆக்கியருளியவர்கள், அப்பரும் சம்பந்தருமே ஆவர்.

"புறம்பு காண்குவன் புல்லியன் ஈசனை
　அறந்தரு ஞானியர் அகத்திற் காண்பரால்"

என்றபடி, அப்பரும் சம்பந்தரும் ஈசனைத் தம்முடைய அகத்திற் கண்டுணர்ந்து அவ்வளவில் அமைந்துவிடாமல், புறம்பேயும் ஈசனைக் கண்

---

* காஞ்சிபுரம் கச்சபேசர் கோயில் சித்திரைப் பெருவிழாவில். ' சித்தாந்தக் கலைச் செல்வர்'' திரு. க. வச்சிரவேல் முதலியார், பி. ஏ. எல். டி. அவர்கள் தலைமையில் நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது. (17-4-70).

டவர்; ஒவ்வோர் உயிரினும் பொருளினும் ஈசனைக் கண்டவர்; மன்னுயிர்க்குத்தொண்டு புரிதலே மகேசனுக்குத் தொண்டு புரிதலாகும் எனத் தெளிந்தவர். சமயத்தின் அருளனுபவ நலங்களைத் தமது தனிமை நிலையில் துய்த்துச் சமாதி நிலையில் ஒன்றிவிடாமல், அதனைச் சமுதாய இயக்கமாகமாற்றி, அனைத்துயிர்களும் இறையருள் நலனை அறிந்து, அதில் ஈடுபட்டுத் திளைக்குமாறு செய்தருளினர். சமயத்தினைத் தனிநிலை யியல்பினின்று (Individual Concern), சமுதாய நிலையியல்பிற்குரிய ஒரு பேராற்றல் ((Social Force) எனும்படி உருவாக்கி வளர்த் தருளியவர்கள், அப்பரும் சம்பந்தருமே யாவர் என்பதில் ஐயமில்லை.

''மூலை யிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியவர் என்று உந்திபற
தவத்தில் தலைவர் என்று உந்தீபற''

என்றபடி, ஞானிகளின் உள்ளத்திலும், யோகிகளின் அனுபவத்திலும், சான்றோர்களின் எண்ணங்களிலும், அருளாளர்களின் வாழ்விலும் மட்டுமே, எங்கேயோ ஒரு மூலையில் ஒதுங்கிக் கிடந்திருந்த சமயச் செந்நெறியினை, பற்பல ஆயிரம் தொண்டர்கள் தம்மைப் பின் பற்றித் தொடர்ந்து உடன்வர, பொது மக்களின் வாழ்வுத்துறை ஆகிய சமுதாயச் சூழல் என்னும் முற்றத்தே கொணர்ந்து விட்டருளியவர்கள், சாலப் பெரியவர்களும், தவத்தில் தலைவர்களும் ஆகிய நமது அப்பரும் ஞானசம்பந்தருமே என்றல் மிகையாகாது.

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்னும் உயரிய நோக்குடன், அப்பரும் சம்பந்தரும் ஆற்றியருளிய அரிய பெரிய சமுதாயத் தொண்டுகளை நம்மனோர் அளவிடல் ஒல்லுமோ? திருவீழிமிழலையிற் பெரிய தொரு பஞ்சம் நேர்ந்த பொழுது, இறைவன்பாற் படிக்காசு பெற்று, அப்பரும் சம்பந்தரும் அங்குப் பஞ்சத்தால் வருந்தியிருந்த மக்கள் அனைவரின் பசிப்பிணியையும் போக்கி நலம் புரிந்தருளினர். இதனை,

''அல்லார் கண்டத் தண்டர்பிரான்
அருளாற் பெற்ற படிக்காசு
பல்லா றியன்ற வளம்பெருகப்
பரமன் அடியார் ஆனர்கள்
எல்லாம் எய்தி உண்களன
இரண்டு பொழுதும் பறை நிகழ்த்திச்
சொல்லாற் சாற்றிச் சோறிட்டார்
துயர்கூர் வறுமை தொலைத்திட்டார்''

எனவரும் பெரியபுராணச் செய்யுளால், சேக்கிழார் பெருமான் விளக்கியிருத்தல் காணலாம். அப்பரும் சம்பந்தரும் ஆற்றியருளிய சமுதாயநலத் தொண்டிற்கு இஃதொன்றே சான்ருக அமைதற்குப் போதும் அன்றே?

அரும்பெரும் புரட்சியாளர் :

அப்பரும் சம்பந்தரும் போன்ற அரும் பெரும் புரட்சித் தலைவர்களை உலக வரலாற்றில் நாம் வேறு எங்கணும் காண்டல் இயலாது. கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் புரிந்து அரிய பெரிய புரட்சிகளை முதன்முதலில் விளைவித்தவர்கள் நமது அப்பரும் சம்பந்தருமே யாவர் எனலாம்.

வடமொழியிற் சிறந்த புலமையுடையவனும், இசைக்கலையில் வல்லவனும், சிற்பம் ஓவியம் நடனம் முதலிய கலைகளிற் பெரிதும் ஈடுபாடுடையவனும், போர்த்திறன் மிக்க பெரு வீரனும், 'மத்தவிலாசப் பிரகசனம்' என்னும் வடமொழி நாடக நூல் இயற்றியவனும், தம்மை நீற்றறையில் இட்டும் - நஞ்சூட்டியும் - களிற்றை ஏவியும் - கற்றூணைப் பூட்டிக் கடலிற் பாய்ச்சியும் - தமக்குப் பற்பல துன்பங்களை விளைவித்தவனும் ஆகிய **மகேந்திர வர்மன்** (கி. பி. 600 - 630) என்னும் பல்லவ மன்னனைத் தமது தெய்விக அருள் நலத்தால் திருத்தி ஆட்கொண்டு, அவனைச் சமண சமயத்தினின்று சைவ சமயத்தவனக மாறும்படி செய்தருளிய திருநாவுக்கரசரின் செயலினும் சிறந்த புரட்சிச் செயல் வேறொன்றுளதோ? ''இலிங்கத்தை வழிபடும் **குணபரன்** என்னும் அரசன், புறச் சமயத்தில் இருந்து திரும்பிய தனற் பெற்ற சிவஞானப் பேரொளியானது இந்த இலிங்கத்தின் வாயிலாக நெடுங்காலம் இவ்வுலகில் நின்று நிலவுவதாக'' எனவரும் மகேந்திரவர்மனின் திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டு, அப்பர் பெருமான் நிகழ்த்தியருளிய அரியபெரிய புரட்சியை அறைகூவி அறிவிக்கும் ஒப்புயர்வற்ற சான்றன்றே?

"வீடறியாச் சமணர்மொழி
பொய்யென்று மெய்யுணர்ந்த
காடவனும் திருவதிகை
நகரின்கண் கண்ணுதற்குப்
பாடலிபுத் திரத்தில் அமண்
பள்ளியொடு பாழிகளும்
கூடஇடித் துக்கொணர்ந்து
குணபரஈச் சுரம் எடுத்தான்''

எனச் சேக்கிழார் பெருமான், இப்புரட்சி நிகழ்ச்சியினைத் தமது பெரிய புராணத்தில் எடுத்து விளக்கி யிருத்தல், உன்னித்து உணர்ந்து மகிழற்பாலது.

''மன்னன்நீறு அணிந்தான் என்று
மற்றவள் மதுரை வாழ்வார்
துன்னிநின ரூர்கள் எல்லாம்
தூய நீறு அணிந்து கொண்டார்''

என்னும்படி, பாண்டியநாட்டில் மாறவர்மன் அரிகேசரி என்னும் நின்றசீர்நெடுமாறர் (கி. பி. 640 - 680) காலத்தில், திருஞானசம்பந்தர் நிகழ்வித்த சமய—சமுதாய—அரசியற்—கலைப் புரட்சியும், இங்கு நாம் பெரிதும் சிந்தித்து உணரத்தக்கது.

மகேந்திரவர்மன் என்னும் பல்லவமன்னன் திருநாவுக்கரசர் பெருமானுல் சிவநெறியாளனுக மாறிய மாபெருஞ் சிறப்பு நிகழ்ச்சி, தமிழகவரலாற்றிலும்சைவசமயவரலாற்றிலும் ஒப்புயர்வற்ற புகழ்மிக்க தனிப் பெரும் முதன்மை வாய்ந்த அரும்பெரும் புரட்சி நிகழ்ச்சியாகும்.

திருநாவுக்கரசரால் மனமாற்றம்பெற்றுச் சிவநெறியாளனுக மாறிய மகேந்திரவர்ம பல்லவன், சீயமங்கலம் பல்லாவரம் வல்லம் தளவானூர் திருக்கழுக்குன்றம், திருச்சிராப் பள்ளி, திருமயம் என்னும் இடங்களில் மலைகளை வெட்டிக்குடைந்து சிவபிரானுக்குக் கோயில்கள் எடுப்பித்தான்.

பழங்காலத்தில் மண் மரம் செங்கல் சுண்ணும்பு முதலியவற்றினுல்தான், தமிழ்நாட்டுக் கோயில்கள் கட்டப்பெற்று வந்தன. முதன் முதலில் கருங்கற்களினுல் கோயில்கள் கட்டத் தொடங்கிய பெருமை மகேந்திரவர்ம பல்லவனையே சாரும்.

''செங்கல் சுண்ணும்பு மரம் உலோகம்
என்பன இல்லாமல், மும்மூர்த்திகளுக்கு
விசித்திர சித்தன் அமைத்த கருங்கற்
கோயில் இது''

எனவரும் மகேந்திரவர்மனின் மண்டகப் பட்டுக் கல்வெட்டினுல் இவ்வுண்மை இனிது புலப்படும். இங்ஙனமே மகேந்திரவர்மனை மனமாற்றம் அடையும்படிசெய்து, அவனைச் சிவநெறிச் செந்தமிழ் மன்னனுக ஆகுமாறு மாற்றி, ஆட்கொண்டு அவன் பற்பல கருங்கற் கோயில்களை எடுப்பிப்பதற்குக் காரணமாக விளங்கிய பெருமை நம் அப்பரடிகளுக்கே உரியதாகும்.

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினே டெட்டும்; மற்றும்
கரக்கோயில்; கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்;
கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக் கோயில்;
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில்; மணிக்கோயில்; ஆலக்கோயில்;
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே.

என்றபடி, இங்ஙனம் எண்ணற்ற வகையான பற்பல கோயில்கள் இன்று தமிழ் நாட்டில் விண்ணளாவி ஓங்கி உயர்ந்த கோபுரங்களுடன் தோன்றிநின்று நிலவுவதற்கு அடிப்படை வித்திட்ட பெரும் புரட்சியாளர் அப்பரடிகளேயாவர் எனலாம்.

நற்றமிழ் வளர்த்த நல்லோர் :

அப்பரும் சம்பந்தரும் ஆற்றியருளிய அளப்பருந் தொண்டுகள் பற்பல. அவற்றுள் ஒன்று, ''பல்வேறு கொள்கைகளாலும் சூழ்நிலைகளாலும் சிதறுண்டு கிடக்கும் ஒரு நாட்டின் மக்களை, அவர்கள் பேசும் தாய்மொழியின் வாயிலாகவே ஒன்றுபடுத்தி உணர்ச்சியூட்டிக் கிளர்ந்தெழச் செய்யமுடியும் என்னும் உயரிய உண்மையினையுணர்ந்து, 'நாளும் இன்னிசையால்' நற்றமிழ் பரப்பிய பொற்புறு செயலாகும்; இவ்வாற்ருல், முதலில் தமிழ்ப் பண்பாட்டிற்கு மாறுபட்டுப் ''பல்லவர் பதகர்

நீசர்'' என்று நிகண்டு நூல்களில் இழித்துரைக்குமாறு இருந்த பல்லவர்களை நாளடைவில் தமிழ்ப்பண்பு தழுவித் தமிழ் வண்ணம் ஆகும்படி செய்து, ஐயடிகள் காடவர் கோன், கழற்சிங்கன் முதலிய சிறந்த சிவனடியார்களாகவும் மாறும்படி செய்தருளிய அப்பரின் பெருமை அளப்பரியது.

புண்ணியக் கண் இரண்டு :

தமிழ் வளரவும், சமயம் தழைக்கவும், இசை நடனம் சிற்பம் ஓவியம் முதலிய பல்வேறு கலைகளும் செழிக்கவும், அப்பரும் சம்பந்தரும் ஆற்றியுள்ள தொண்டுகளுக்கு அளவே இல்லை. அதுபற்றியே ஆசிரியர் சேக்கிழார் பெருமான்,

''அருட்பெருகு தனிக்கடலும் உலகுக்கெல்லாம்
அன்புசெறி கடலுமாம் எனவும்; ஓங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் இரண்டுஎனவும்; புவனம் உய்ய
இருட்கடுவுண் டவர்அருளும், உலகம் எல்லாம்
ஈன்றாள்தன் திருவருளும் எனவும் கூடித்
தெருட்கலைஞா னக்கன்றும் அரசும் சென்று
செஞ்சடைவா னவர்கோயில் சேர்ந்தார் அன்றே''

எனவரும் பாடலில், அப்பரையும் சம்பந்தரையும் ''பொருட்சமய முதற் சைவ நெறிதான் பெற்ற புண்ணியக் கண் இரண்டு'' எனப் புகழ்ந்து போற்றியருள்வாராயினர், ஆசிரியர் நம்பியாண்டார் நம்பிகளும்,

''பாடிய செந்தமி ழாற்பழங் காசு
பரிசில் பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம் பந்தன்
நிறை புகழான்,
நேடிய பூந்திரு நாவுக் கரசோடு
எழில் மிழலைக்
கூடிய கூட்டத்தி னல்உளது ஆய்ந்து;
இக்குவலயமே.''

எனத் தமது திருத்தொண்டர் திருவந்தாதியில், இவ்விரு பெருமக்களையும் திறந்தெரிந்து சிறந்தெடுத்துப் பாடிப் போற்றி மகிழ்ந்தருளினர்.

முடிவுரை :

இங்ஙனம் எத்துணையோ பல எண்ணற்ற சிறப்புக்களையுடைய, அப்பர் சம்பந்தர் என்னும் இவ்விரு பெருஞ் சான்றோர்களின் அருமை பெருமைகளையும் உணர்ந்து, அவர்களை வழிபட்டும், அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஒழுகியும், வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, நாம் அனைவரும் உய்ய முயலுவோமாக!

—ஆசிரியர்.

"In any social group, whatever its nature and however large it may be, language plays a role of primary importance. It is the strongest of the bonds uniting the members of the group, and is at the same time the symbol and safeguard of their common life. What instrument can have greater efficacy than language in affirming the individuality of the group. It is their sign of recognition, and their badge of brotherhood."

—Prof. Vendreyes, Language.

மகாபாரதம்

அருள்மொழியரசு
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

வசிட்டரின் மகிமை :

பக வதத்திற்குப் பின் பாண்டவர்கள் வேதங்களை அத்யயனஞ் செய்து கொண்டு அந்த ஏகசக்ர நகரில் வசித்துக்கொண்டிருந் தார்கள். ஒருநாள் ஒரு அந்தணன் யாத்திரை புரிந்துகொண்டு அங்கு வந்தான். பாண்ட வர்கள் தங்கியிருக்கும் வீட்டிற்கு வந்தான். வீட்டுப் பிராமணன் வந்த வேதியனை வர வேற்று உணவு தந்து இடந்தந்து உபசரித் தான். குந்திதேவியும் பாண்டவர்களும், புதி தாக வந்த அந்த அந்தணரைச் சூழ்ந்து அமர்ந்தார்கள். அவர் தான் பார்த்துவந்த புண்ணியத்தலங்கள், புண்ணிய நதிகள், நகரங்கள்; மன்னர்கள் ஆகிய இவற்றின் வரலாறுகளையும் மகிமையையும் கூறினர். முடிவில் பாஞ்சால நகரத்தைப் பற்றியும் கூறுவாராயினர்.

''பாஞ்சால நாட்டின் அரசனை துருபதன் புத்ரகாமேஷ்டி யாகஞ் செய்தான். அந்தப் புனிதமான யாகத்தில் திருஷ்டத்துய்மனன் என்ற ஒரு குமாரனும், கிருஷ்ணை என்ற அழகிய ஒரு குமாரியும் பிறந்தார்கள். புருஷ்தி என்ற பேருள்ள துருபதன் மனைவி அக்குழந் தைகளை அன்புடன் வளர்த்தாள். திருஷ்டத் துய்மனன் துரோணரிடம் சகல கலைகளையும் கற்று உணர்ந்தான்.

கிருஷ்ணை என்ற திரௌபதியை அர்ச்சுன னுக்கு என்று பெற்று வளர்த்து வருகின்றான். அக்கன்னி இலக்கண இலக்கியங்களையும் இசை நூலையும் கற்றுக் கலைக்களஞ்சியமாக விளங்கு கின்றாள். கொடியவனாகிய துரியோதனன் காசிமா நகரில் அரக்கு மாளிகை புதுக்கி அதில் பாண்டவர்களை எரித்துவிட்டான் என்று துருபத மன்னன் ஒற்றர்கள் கூறக் கேட்டான். தன் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் இறந்துபோனால் எத்துணைத் துயரப்படு வானோ அத்துணைத் துயரப்பட்டான். அவன் கண்களிலிருந்து மழைபோல் நீர் பெரு கியது.

''அமைச்சர்களே! பெரியோர்களே! பாண்டவர்கள் உத்தமமான பிள்ளைகள், அதி லும் அர்ச்சுனன் என்ன அழகு? என்ன வலிமை? ஆ! அஞ்சாமைக்கு அவன் உறைவிடம். அந்த வீரகுமாரன் தன் உடன் பிறந்தாருடன் தீய வனுடைய மாயச்செயலால் எரிந்தான்என்றால் இதைவிடக் கொடுமை உளதா? எல்லோரும் காலத்துக்கு உட்பட்டவர்கள்தானே. காலத் தைக் கடந்து வென்றவர் யார்?

நான் யாஜமுனிவருடைய கருணையால் வேள்விசெய்து தனஞ்சயனுக்கு என்று மகளைப் பெற்றேனே? அந்த முனிவருடைய வாக்கு பொய்க்குமா! என் மகள் திருமணம் ஆவதற்கு முன்னரேயே கணவனையிழப்பது என்ற இச் செய்தி என் மனத்தைக் கொளுத்துகின்றதே. என்னால் இத்துன்பத்தைத் தாங்கிக்கொள்ள

முடியவில்லையே?'' என்றுகூறித் துருபதன் விம்மி விம்மி அழுதான்.

பாஞ்சால ராஜனுடைய குரு அவனைத் தேற்றுகின்றார். ''துருபதனே! வருந்தற்க. நான் இதைப்பற்றி ஆராய்ந்தேன். பாண்டவர்கள் மாண்டார்கள் என்பது நம்பத்தக்க தன்று. அவர்கள் அறநெறி வழுவாதவர்கள். ஒழுக்கத்தில் உறுதியுள்ளவர்கள். அவர்கள் அகால மரணம் அடைய மாட்டார்கள். முன் ஒரு சமயம் இந்திரன் தாமரைத் தண்டினுள் மறைந்திருந்தானல்லவா? அதுபோல் பாண்டவர்கள் மறைந்திருக்கின்றார்கள். நான் அவர்களைப் பற்றி உபச்ருதி கேட்டேன். அவர்கள் உருவம் மாறி ஒரு இடத்தில் வாழ்வதாக வாய்ச்சொல் கூறியது, நிமித்தங்களும் நன்மையாகவே இருக்கின்றன. அவர்கள் இங்கே வருமாறு செய்யவேண்டும், அதற்கு உபாயம் திரௌபதிக்கு சுயம்வரம் என்று நாள் குறிப்பிட்டு எங்கும் விளம்பரஞ்செய். அவர்கள் எங்கிருந்தாலும் தாயுடன் இங்குவந்து சேருவார்கள். சந்தேகமில்லை. தாமதிக்காதே'' என்றார்.

மன்னன் மனம் மகிழ்ந்தான். எழுபத்தைந்து நாட்களுக்குப்பின் தை மாதம், சுக்ல பட்சம், ரோகிணி நட்சத்திரங்கூடிய நன்னாளில் சுயம்வரம் என்று நாடுநகரம் கிராமம் முதலிய எல்லா இடங்களிலும் பறை சாற்றினான். மன்னவர்க்குத் தூதர் மூலம் அறிவித்தான்.

திரௌபதியின் அழகு :

திரௌபதி நீலமணியினால் செய்து மெருகிட்டு ஒளி செய்யும் பதுமைபோல் காட்சி தருகின்றாள். அவளுக்குத் திருமகளும் இரதிதேவியும் இந்திராணியும் நிகராகமாட்டார்கள். அவளுடைய கூந்தல் ஊழிக் காலத்து மேகம் போல் கருத்துப் பளபள என்று கடல் அலை போல் படிப்படியாக நிலம் வரை வந்து தொங்கிக்கொண்டிருக்கும், அவளுடைய நெற்றி அஷ்டமி திதியில் தோன்றும் சந்திரனைப் போல் விளங்கும். கண்கள் நீலோற்பல மலர் போல் திகழும். அக்கண்களில் கருணையும் அறிவும் குடியிருக்கின்றன.

அவளுடைய புன்முறுவல் பதினான்கு உலகங்களையும் மயக்கும். பவள வாயைக்கண்டால் கண்கள் இமைக்குந் தொழிலை மறந்துவிடும். முழு நிலாவை வென்ற முகாரவிந்தம். கழுத்து வலம்புரிச்சங்கு போல் திகழும். பொற்குடம் போன்ற தனங்கள்; மின்னல் இடை; அன்னநடை. தேன்மொழி. அவளுடைய அழகுக்கு இணையே இல்லை. நிலமகள் போன்ற பொறையுடையவள். அருந்ததியன்ன கற்புடையவள், அவள் கைபட்டால் பட்டமரம் துளிர்க்கும். அவள் பாடினால் பாலைவனம் குளிரும். கல்லும் புல்லும் உருகும். மண்ணும் விண்ணும் மகிழும்.

ஏ! அந்தணச் சிறுவர்களே! அர்ச்சுனன் இல்லாமையால் உங்களில் ஒருவனுக்கு அவள் மாலையிடவுங் கூடும். அம்மா! நீ புதல்வர்களுடன் அங்குச் செல். பாஞ்சால தேயம் என்றும் செழுமையானது; யக்ஞசேனன் பரோபகாரி; அந்த நகர மாந்தர்கள் அந்தணர்களை அன்புடன் ஆதரிப்பவர்கள், நான் என் சீடர்களுடன் அங்கு சென்றுகொண்டிருக்கின்றேன். நீங்களும் வந்தால் சேர்ந்து போகலாம்'' என்று அந்த அந்தணர் கூறினார்.

பாண்டவர் புறப்பாடு :

இந்தச் சொற்களைக் கேட்டவுடன் ஐவர்க்கும் மனதில் ஆசைக்கனல் கொழுந்துவிட்டு எரிந்தது. காமன் கணையால் நொந்தார்கள். புதல்வர்களின் குறிப்பை யறிந்த குந்திதேவி, ''நாம் பாஞ்சால நாடு போவோம்'' என்றாள். சரியென்று, வீட்டு வேதியரிடம் அன்புடன் விடைபெற்றுக்கொண்டு பாண்டவர்கள் தாயுடன் புறப்பட்டார்கள்.

வியாசர் :

புறப்படும்போது வியாச முனிவர் அங்கு எழுந்தருளினார்; குந்தியும் மைந்தர்களும் தாயைக்கண்ட கன்றுகளைப்போல் களிப்புற்று அவரை எதிர்கொண்டு வணங்கி வழிபட்டார்கள்.

வியாசர், ''நீங்கள் பாஞ்சால நகர் போவது நல்லது. திரௌபதி சிறந்த

கன்னிகை. அவளை நீங்கள் அடைந்து பாஞ்சால நகரில் சிலகாலம் வாசஞ் செய்யுங்கள் என்று ஆசி கூறினர்.

பாண்டவர்கள் செல்லுகின்றபோது பல பிராம்மணர்களை வழியில் கண்டார்கள். அந்த மறையவர்கள் "நீங்கள் எங்கிருந்து வருகின் றீர்கள்? எங்குப் போகின்றீர்கள்?" என்று கேட்டார்கள்.

யுதிஷ்டிரர், "நாங்கள் ஏகசக்ர நகரத்தி லிருந்து வருகின்றோம். துருபத ராஜனுடைய நகரத்துக்குப் போகின்றோம். நாங்கள் யாத் திரை செய்யும் விருப்பமுள்ளவர்கள். சகோ தரர்கள். உங்களையும் நான் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்" என்றார்.

வழியில் :

வேதியர்கள் "ஐயா! நாங்களும் அங்கே தான் போகின்றோம். அங்கே ஒரு பெரிய விழா நடக்கப்போகின்றது. துருபதராஜன் உத்தமமானவன். அவனுக்கு ஒரு மகள். அப் பெண் கருவில் இருந்து பிறவாதவள், கனலில் உதித்தவள். நீலோற்பல மலர் போன்ற நிறம் படைத்தவள். அவளுக்குச் சுயம்வரம் நடை பெறப் போகின்றது. அங்கு அநேக இளவரசர் களும் பெரிய பெரிய மன்னர்களும் வரு வார்கள். தங்கள் விருப்பம் நிறைவேறும் பொருட்டு அன்னதானமும் சொன்னதானமும் புரிவார்கள். நாங்கள் அங்கு தானங்களையும் பெற்று, கல்யாணத்தையுங் கண்டு களிப் போம். உங்களில் ஒருவனை அப்பெண் வரித் தால் வரிக்கக்கூடும். ஈசன் செயலை யாரால் அளக்கமுடியும்?" என்றார்கள்.

சித்ரரதன் :

பாண்டவர்கள் இரவும் பகலும் நடந்து வடக்கு நோக்கிச் சென்றனர். கங்காநதியைக் கண்டார்கள். அர்ச்சுனன் ஒரு எரி கொள்ளி யைக் கையில் வைத்துக்கொண்டு முன்னே நடந்தான். அப்போது நடுநிசி. அங்கே சித்ர ரதன் பெண்களுடன் கங்கை நதியில் விளையா டிக் கொண்டிருந்தான். அவன் இவர்கள் வருவதையறிந்து சினங் கொண்டான். "ஏ மானிடப் பதர்களே! இங்கே பகலிலே யும் மற்றவர்கள் வர அஞ்சுவார்கள். இந்த இரவு நேரம் கந்தர்வர்களான எங்களுக்கு உரியநேரம். என்பேர் அங்காரபர்ணன். கந்தர் வன். இந்த இடம் எனக்குச் சொந்தம் குபேரனுக்கு நான் நெருங்கிய நண்பன், இதை விட்டு அப்பால் ஓடிப்பிழையுங்கள். ஆட்டுக் குட்டிகள் போல் வந்து வீணே மாளாதீர்கள்" என்றான்.

அர்ச்சுனன் "மூடனே! சிவபெருமானு டைய திருமுடியிலிருந்து வரும் இந்தக் கங்கை எல்லோருக்கும்பொது. கடல், வானம், ஆறு, காற்று இவைகள் யாருக்கும் தனியுடைமை யாக மாட்டா. வீண்கர்வம் கொள்ளாதே. நாங்கள் எந்த நேரத்திலும் எங்கும் போகக் கூடிய ஆற்றல் படைத்தவர்கள். எங்களைத் தடுக்க உனக்கு உரிமையேது. இப்புனிதமான கங்கையில் நீராடி நாங்கள் மங்களத்தைப் பெறுவோம்" என்றான்.

சித்ரரதன் சீற்றங்கொண்டு, வில்லை யெடுத்து அம்புகளைத் தொடுத்து விடுத்தான். அர்ச்சுனன் புன்னகை புரிந்து தன் கையில் இருந்த கொள்ளிக்கட்டைமீது அக்கினியாஸ் திர மந்திரத்தை ஏவி விடுத்தான். அது மகா தேஜோமயமாகச் சென்று அந்தக் கந்தர்வனை வளைத்துக் கொளுத்தியது. அவன் நிலை குலைந்து வீழ்ந்தான்.

கந்தர்வனுடைய மனைவி கும்பீனசி என்ற பெண் தருமருடைய தாள் மீது வீழ்ந்து மாங் கல்ய பிச்சை கேட்டாள். தருமர், "இவனைக் காப்பாற்று" என்றார். அர்ச்சுனன் அக்கினி யாஸ்திரத்தைத் திருப்பியழைத்தான். மயங்கி யுள்ள அவன் தலைமயிரைப் பிடித்துக்கொண்டு வந்து தருமர் முன்னே நிறுத்தினன்.

கந்தர்வன் அவர்களை உற்று நோக்கினன். அவர்கள் தெய்வ அம்சத்துடன் பிறந்த பாண்டவர்கள் என்பதை உணர்ந்தான். அவர்களைச் சரணுகதியடைந்தான் "வீரர் களே! எனது அழகிய ரதம் எரிக்கப்பட்டது. அதனல் சித்ரரதன் என்ற என் பேரையும் விட்டுவிட்டேன். உங்களின் பெருமையை அறியாமல் நான் எதிர்த்தேன். அடைக்கலம் புகுந்தவனை ஆதரிக்கின்ற குணக் குன்றங்கள் நீங்கள், உங்களுக்கு உலகமே பணியுமே, நான் எம்மாத்திரம்?

சாட்சுழி :

''அர்ச்சுனப் பெருமானே! நான் தவஞ் செய்து சாட்சுழி என்ற ஒரு வித்தையைப் பெற்றிருக்கின்றேன். மனு இதனைச் சந்திரனுக்குக் கொடுத்தார். சந்திரன் விசுவாவசு என்ற கந்தர்வனுக்குக் கொடுத்தார். விசுவாவசு எனக்குத் தந்தார். இப்படி குருபரம் பரையாக வந்தது. இந்த வித்தையால் மூன்று லோகங்களில் உள்ள எல்லாப் பொருள்களையும் காணலாம். ஆறுமாதம் ஒரு காலால் நின்று தவஞ்செய்து பெறக்கூடிய வித்தை இது. இந்த வித்தையால் நாங்கள் மனிதரைக் காட்டிலும் உயர்ந்திருக்கின்றோம். நீராடிய பின் இந்த வித்தையை நீ என்னிடம் பெற்றுக் கொள். இதற்குப் பிரதியாக, அக்கினியாஸ்திரத்தை நீ எனக்குக் கொடு. விண்வழியே செல்லக்கூடிய மகா மகிமையுள்ள கந்தர்வப் புரவிகள் ஐவர்கட்கும் நூறு நூறு வீதம் ஐநூறு தருவேன். காணிக்கையாக ஏற்றுக்கொள்ளுங்கள். இன்று முதல் நான் உங்களுக்கு இனிய நண்பன். உங்கள் நலத்தை நாடுபவன்'' என்றான். எல்லோரும் கங்கையில் மூழ்கினார்கள். அர்ச்சுனனுக்குக் கந்தர்வன் சாட்சுழி என்ற வித்தையை உபதேசித்தான். அவனிடம் இருந்து மிகப்பெரிய அக்கினியாஸ்திரத்தைப்பெற்றான்.

குருவின் அவசியம் :

அங்காரபர்ணன் கூறுகின்றான். ''அர்ச்சுனா நீங்கள் குருகுலத்திற் பிறந்தவர்கள். ஐவரும் தேவகுமாரர்கள். துரோணருடைய சீடர்கள். துரோணர் பிரகஸ்பதிபகவானுடைய அம்சம். உங்கள் பெருமையைப் பலகாலும் நாரதர் முதலிய பெரியோர்கள் சொல்ல யான் கேட்டிருக்கின்றேன். உங்களை வெல்பவர் விண்ணிலும் மண்ணிலும் ஒருவரும் இல்லை,

உங்களுக்கு மேலும் பெருமை வளர வேண்டும். நீங்கள் தக்க ஒரு குரு நாதனை யுடையவர்களாக இருக்கவேண்டும். குருவை யுடையவனுக்கே உலகம் அடங்கும். குருநாதன் இல்லாத வாழ்வு மாலுமியின்றிக் கப்பலில் போவது போலாகும். ஏ தாபத்யனே! ஆதலால் உயர்ந்த ஒரு குருவைப் பெற்று உயர்வு பெறுவீர்களாக'' என்றான்.

அர்ச்சுனன், ''அன்பனே! என்னைத் தாபத்யன் என்று அழைத்தனையே? அந்தத் தபதி என்பவள் யார்? நாங்கள் கௌந்தேயர்கள் தானே? தபதி என்பவளுக்கும் எங்களுக்கும் என்ன தொடர்பு? அதை விவரமாக நான் அறிய விரும்புகின்றேன்'' என்றான்.

—(தொடரும்)

செய்திச் சுருக்கம்

சைவசித்தாந்த சாத்திர வகுப்பு : சமயநெறி பரப்பும் நன்னோக்குடன், இவ்வாண்டும் லால்குடி என வழங்கும் திருத்தவத்துறையில், தம்பாச்சியாப்பிள்ளை அறநிலையத்தில், 12—5—70 முதல் 29—5—70 முடிய 15 நாட்களுக்கு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. சித்தாந்த கலாநிதி பேராசிரியர் திரு. அவ்வை துரைசாமிபிள்ளை அவர்கள் சிவஞான போத வகுப்பும், வித்துவான் திரு. ந. சிவப்பிரகாச தேசிகர் அவர்கள் தேவார வகுப்பும், நடத்துவார்கள். அன்பர்கள் பலரும் கலந்து கொண்டு பயன்பெறலாம் என்றும், வகுப்பில் கலந்துகொள்ள விரும்புவோர்க்கு உறையுளும் இருவேளை உணவும் அளிக்கப்படும் என்றும் திருக்குறள்வேள் திரு. ஜி. வரதராஜபிள்ளை, B. A., அவர்கள் அறிவித்துக்கொள்ளுகின்றார்கள்.

...ஆசிரியர்.

கம்பர் கண்ட கோசலம்

மகாவித்துவான் திரு. கு. மதுரை முதலியார்,
(முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், சென்னை லயோலா கல்லூரி)

கோசல நாட்டின் சிறப்பைக் கூறுவதற்கு முன்னர் அந்நாட்டுக்கு அழகு செய்யும் ''ஆற்றணி கூறுவாம்'' என ஆற்றுப் படலத்தைத் தொடங்குகிறார் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்ப நாடர்.

'நிலனே, நீ நாடேயாகுக; காடேயாகுக; பள்ளமேயாகுக; மேடேயாகுக; எவ்வாறாயினும், எவ்விடத்து ஆண்மக்கள் நல்லரோ, அவ்விடத்து நீயும் நல்லையல்லது, நினக்கென ஒரு நலமுடைய யல்லை, வாழி' என்பது ஔவையார் அருளிச் செய்துள்ள ஒரு புறப் பாட்டின் கருத்து. ஆகையால், கோசல நாட்டின் மக்களின் ஒழுக்கத்தைக் கூற வந்த கம்பர்,

'' ஆச லம்புரி ஐம்பொறி வாளியும்
காச லம்பு முலையவர் கண்ணெனும்
பூச லம்பும் நெறியின் புறஞ்செலாக்
கோச லம்புனை யாற்றணி கூறுவாம் ''

என ஓர் அழகிய பாட்டை நமக்களித்துள்ளார்.

ஆடவர்களின் ஐம்பொறிகளாகிய துன்புறுத்தும் அம்புகளும், மகளிரின் கண்களாகிய போர் புரிகின்ற அம்புகளும், நன்னெறியின் புறஞ் செல்லாத கோசலம் எனக் கோசல நாட்டினது மக்களின் ஒழுக்கச் சிறப்பைக் கூறியுள்ளார் கல்வியிற் பெரியார். இப்பாட்டில் ஆடவர்களின் ஐம்பொறிகளையும் விளக்கமாகக் கூறிய கம்பர், பெண்களின் கண்களை மட்டும் கூறி, மற்றப் பொறிகளையும் உய்த்துணரும்படி வைத்துள்ளதின் கருத்தாழத்தை நாம் காண வேண்டும். பெண்களுக்குச் சிறப்பும், சிறப்பின்மையும் வருவதற்கு முக்கிய காரணம அவர்களது கண்ணே. இக்கருத்தை அயோத்தியா காண்டத்தில் இராமபிரானது சிறப்பையும் சீதாப்பிராட்டியின் நலனையும் நன்கு விளக்கும் ஓர் அழகிய பாடலில் படித்து மகிழலாம்.

'' மண்ணினும் நல்லள் மலர்மகள் கலைமகள் கலையூர்
பெண்ணினும் நல்லள் பெரும்புகழ்ச் சனகியோ நல்லள்
கண்ணினும் நல்லள் கற்றவர் கற்றிலா தவரும்
உண்ணும் நீரினும் உயிரினும் அவனையே உவப்பார் ''.

'' பெரும்புகழ்ச் சனகி, நிலமகள், மலர்மகள், கலைமகள், மலைமகளிலும் நல்லள் '' என்று கூறிய வசிட்டர், அந்த நல்ல சீதாப் பிராட்டிப்ன் கண்ணினும் நல்லன் இராம பிரான் என்றார். இதனால் சீதையின் சிறப்புக்குக் காரணம் அவளுடைய கண்களே என்பதை உய்த்துணரலாம்.

மேலும், கோசல நாட்டின் சிறப்பைக் கூறுவதற்கு முன் கம்ப நாடர் ஆற்றின் சிறப்பைக் கூறினர். ஆற்றின் சிறப்பிற்குக் காரணம் மழையே.

' விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது '

என்பது திருக்குறள். அத்தகைய மழையின் மாட்சிக்குக் காரணம் மகளிரின் கற்பே என்பது. 'ஆசலம்புரி' என மேலே வந்துள்ள, செய்யுளின் ஆழ்ந்த பொருள். இக்கருத்தை

"பொற்பில் நின்றன பொலிவு; பொய்யிலா
நிற்பில் நின்றன நீதி; மாதரார்
அற்பில் நின்றன அறங்கள்; அன்னவர்
கற்பில் நின்றன கால மாரியே"

என்னும் செய்யுளிலும் காணலாம்.

இனிக் கோசல நாட்டின் பலவளங்களை 'வரம்பெல்லாம் முத்தம், தத்தும் மடையெல்லாம் பணிலம், மாநீர்க் குரம்பெலாம் (வாய்க்கால்களின் செய்கரைகள்), செம்பொன், மேதிக்குழியெலாம் கழுநீர்க் கொள்ளை, எனக் கம்பர் நமக்குக் காட்டி மகிழ்கின்றார்.

கோசல நாட்டில் உள்ள மருத நிலத்தின் மாண்பை நமக்குக்காட்ட, கம்ப நாடர் நம்மை ஒரு சோலைக்கு அழைத்துச் செல்கின்றார். ஆங்கே, ஓர் அழகிய நடனக் காட்சியைக் கண்டு மகிழலாம். அச்சோலையில் மயில்கள் நடன மாதரைப் போல் ஆடுகின்றன. செந்தாமரைக் கொடிகள் மகளிரே போல் விளக்குகளை ஏந்தி நிற்கின்றன. மேகங்கள் மத்தளம்போல் ஒலிக்க, தெளிந்த நீர்நிலையில் தோன்றுகின்ற அலைகள் திரைச்சீலையின் தன்மையைக் காட்ட, வண்டுகள் இனிது பாட, குவளை மலர்களாகிய தன் கண்கள் மலர விழித்துப் பார்க்க, நிகழும் நாடகத்தின் ஆடல் பாடல்களைக் கண்டு, கேட்டுக் களித்து, மருதத்திணை அரசு கொலு வீற்றிருக்கும். இந்நிகழ்ச்சிகள் அடங்கிய சொல்லோவியத்தைப் படித்து மகிழலாம்.

'தண்டலை மயில்கள் ஆடத்
தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்திரை யெழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம்வீற் றிருக்கும் மாதோ.'

மிக்க பசியும் நீங்காத பிணியும் புறத்தில் இருந்து, வந்து அழிவு செய்யும் பகையும் இல்லாமல் நடைபெறும் நாட்டில் கவலையின்றி வாழும் மக்கள் பலவகையில் பொழுதுபோக்கு தலைக் கீழ்வரும் செய்யுளால் அறிந்து மகிழலாம்.

'பொருந்திய மகளிரோடு
வதுவையில் பொருந்து வாரும்
பருந்தொடு நிழல்சென் றென்ன
இயலிசைப் பயன்துய்ப் பாரும்
மருந்திலும் இனிய கேள்வி
செவியுற மாந்து வாரும்
விருந்தினர் முகம்கண் டன்ன
விழாவணி விரும்பு வாரும்.'

கோசல நாட்டில் ஒருபுறம் செல்வோர், குலத்தாலும் பருவத்தாலும் வடிவத்தாலும் செல்வம் முதலியவற்றாலும் ஒத்துள்ள மகளிருடனே மணச்சடங்கில் பொருந்தி விளங்கும் ஆடவர்களைக் கண்டு களிக்கலாம். தற்காலத்து நிகழும் திருமணங்கள், முற்காலத்து நிகழ்ந்த திருமணங்களோடு மற்றும் முரண்பட்டிருப்பதை அறிகின்றோம். பணம் ஒன்றே குறியாக இக்காலத்தில் நடைபெறும் பொருத்தமில்லாத் திருமணங்களால் மக்கள் எங்ஙனம் இன்ப வாழ்க்கையை நடத்த முடியும்?

பாடலை யொத்துச் செல்லும் இசைக்குப் பருந்தொடு நிழல் செல்லுதலை உவமையாகக் கொடுத்திருப்பதை அறிய மனம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்கின்றது. சிந்தாமணியாரும் 'பருந்தும் நிழலும் போல் பாட்டும் எழாலும்' என்று கூறியுள்ளார். இத்தொடர்க்கு உரை கண்ட நச்சினார்க்கினியர், 'பருந்து பறக்குமிடத்து முறையே உயர்ந்து, அந்நிலத்தின் கண் நின்று, ஆய்ந்து, பின்னும் அம்முறையே மேன்மேல் உயர்கின்றாற்போலப் பாட வேண்டுதலின் அஃது உவமையாயிற்று' எனக் கூறியுள்ள நயம் பெரிதும் பாராட்டற்பாலது.

நாட்டின் மற்றொரு புறத்தே மருந்தினும் இனிய கேள்வி செவியுற மாந்துவாரைக் காணலாம். இவ்வண்ணம் செவியின் சுவையுணராத மக்களைத் திருவள்ளுவர், மாக்களென்றும், அவர்கள் 'அவியினும் வாழினும் என்?' என்றும் மிக இழிவாகக் கூறியுள்ளதைத் திருக்குறளில் காணலாம்.

'மனைவியோடு இல்லின்கண் இருந்து, பொருள்களைப் போற்றி வாழ்வதெல்லாம்

விருந்தினரைப் பேணி, அவர்க்கு உபகாரம் செய்தற் பொருட்டே' என்றும், 'எனவே, வேளாண்மை செய்யாவழி இல்லின்கண் இருத்தலும், பொருள் போற்றலும் காரணமாக வரும் துன்பச் செய்கைகட்கெல்லாம் பயன் இல்லை' என்றும் திருவள்ளுவர் கூறியுள்ளதற்கு இலக்கியமாக, 'விருந்தினர் முகம் கண்டு அன்ன விழா அணி விரும்புவார்' கோசல நாட்டிற் காட்சியளிக்கின்றனர்.

கோசலத்தில் வண்மையில்லை; திண்மையில்லை; உண்மையில்லை; ஒண்மையில்லை யெனக் கூறி, சமத்காரமாக அதற்குக் காரணங்களையும் கூறுகின்றார் கம்பர்.

'வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்
திண்மை யில்லை நேர் செறுநர் இன்மையால்
உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்
ஒண்மை யில்லைபல் கேள்வி யோங்கலால்.'

வறுமை அந்நாட்டில் இல்லாமையால் கொடையில்லை யென்பதைப் பின்னரும், 'கொள்வாரிலாமைக் கொடுப்பார்களும் இல்லை மாதோ' என்றார். நேர்நின்று போர் புரிவோர் இல்லாமையால் திண்மை எங்ஙனம் இல்லாமற் போகும்? பொய்யுரையிலாமையால் உண்மையில்லையென்று எங்ஙனம் கூறலாம்? பல கேள்வி யோங்கலால் ஒண்மை (அறிவுடைமை) இல்லையென்பது எங்ஙனம் பொருந்தும்? என இப்பாட்டில் சிறிது மயக்கம் உண்டாகலாம். பொய்யுரையிலாமையால், உண்மையுரை யில்லையென 'உரை' யென்னும் சொல்லை 'உண்மை' யென்னும் சொல்லோடு கூட்டி, உண்மையென்று சொல்லும் சொல் இல்லையென்று பொருள்கூறினல் அம்மயக்கம் அகன்றுவிடும். இப்படியே 'உரை' யென்னும் சொல்லைத் 'திண்மை' 'ஒண்மை' என்னும் சொற்களோடும் சேர்த்துப் பொருள் காணவேண்டும்.

அழகு எங்கு நிலைத்து நிற்கும்? நீதி நிலைபெற்று நிற்கும் இடம் யாது? அறங்கள் அசையாது நிற்கும் இடம் எது? கால மழை, நாட்டில் மாறுது பெய்வதற்குக் காரணம் என்ன? என்னும் கேள்விகளுக்கு விடைகளைக் கீழ்வரும் பாடலில் காணலாம்.

'பொற்பில் நின்றன பொலிவு, பொய்யிலா
நிற்பில் நின்ன நீதி, மாதரார்
அற்பில் நின்றன அறங்கள், அன்னவர்
கற்பில் நின்றன கால மாரியே.'

மக்களின் புற அழகு அழகல்ல, ஆகையால் அழகுகள் அவரவர்களின் குணங்களில் நிலைத்து நின்றன. 'அழகிய செயல்களைச் செய்பவன் எவனே, அவனே அழகன்' என்பது மேனாட்டுப் புலவர் கோல்ட்ஸ்மித் என்பவரின் கருத்து.*

'நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால் கல்வியழகே அழகு' என்பது நாலடியார். இத்தொடர்க்கு 'மனத்தில் யாம் நற்குணமுடையோம் என்று காண்கின்ற கோணுதலில்லாத தன்மையோடு கூடிய கல்வியழகே அழகு' எனக் குணநலனே அழகு என்பதை அறிகிறோம்.

நீதிகள் பொய்ம்மையில்லாத நிலைமையில் நின்றன. அறங்கள் மாதரார் அன்பில் நின்றன. 'அறத்திற்கே அன்பு சார்பு' என்பது திருக்குறள். கால மழை, மகளிரின் கற்பால் உலகில் தவறுது பெய்து நின்றன. 'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' என்ற தெய்வப் புலவரின் திருக்குறளையும் காண்க.

---

* 'Handsome is that handsome does'
—Goldsmith's
Vicar of Wakefield.

பட்டர் பெருமை

[மகாவித்வான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்.]

நமது சம்பிரதாயத்தில் எம்பெருமானுருடைய பதவியிலே அபிஷிக்தராய், அவரினும் விஞ்சிய ஞான வைபவத்தையுடையரான பட்டர் என்னும் ஆசிரியருடைய வைபவக் கடலில், சில சிறு சிறு திவலைகளை ஈண்டு அனுபவிக்க முற்படுகின்றோம். இவ்வாசிரியர் கூரத்தாழ்வானுடைய திருக்குமாரர் என்றும், ஸ்ரீ ரங்கநாதனுடைய திருக்குமாரர் என்றும் வழங்கப்படுவர். ஆழ்வான் கிருகஸ்தாச்ரமத்திலெழுந்தருளியிருக்கச் செய்தேயும் ''விஹித விஷய நிவ்ருத்தி தன்னேற்றம்'' என்று ஸ்ரீவசந பூஷணத்திலருளிச் செய்த கணக்கிலே விரக்தாக்ரேசரராக எழுந்தருளியிருந்தனர். இவர் தமது செல்வத்தை முற்றும் துறந்து எம்பெருமானர் திருவடிகளில் ஆச்ரயித்தது முதல், நாடோறும் உபாதாந காலத்திலே ஸ்ரீரங்கத்தில் சில திருமாளிகைகளில் உஞ்சவ்ருத்தி செய்து, அது கொண்டு குடும்ப காரியத்தை நிர்வகித்துக் கொண்டு ஒவ்வொரு நாளும் கிடைக்கிற உணவுப் பொருள்களில் மறுநாளைக்கென்று சிறிதும் சேஷப்படுத்தி வைத்துக்கொள்ளாமல், அன்றன்றைக்கே தேகயாத்திரை நடத்தி வந்தருளினர்.

ஒருநாள் விடாப் பெருமழை பொழிந்ததனால் வெளியே போய் உபாதாநம் செய்து வரக்கூடாமல் போக, அதனால் அன்றைக்கு வெறும் தீர்த்தத்தையே உட்கொண்டு அருளிச் செயல்அநுஸந்தாநமே தாரகமாகக் கொண்டு வேறு உணவின்றியே யிருந்திட, அன்றிரவு பெரிய பெருமாள் அமுது செய் தருளுகிற போது உண்டான திருச்சின்னவொலி கேட்டவளவில் இவரது தேவியாரான ஆண்டாள் பெருமாளைக் குறித்து, 'உம்முடைய அடியவர் பட்டினியிருக்க நீர் குலாவிக் குலாவி அமுது செய்தருளுகிறீரோ ?' என்று நினைப்பிட்டவளவிலே, சர்வஜ்ஞனை ஸ்ரீரங்கநாதன் அந்த ஆண்டாள் நினைப்பைத் திருவுள்ளம்பற்றி உடனே தேவஸ்தாந கார்ய நிர்வாஹகரான உத்தம நம்பிக்கு அர்ச்சக முகேந கட்டளையிட்டு, அப்பொழுது தாம் அமுது செய்த அக்காரவடிசிலைச் சகல பரிசந பரிவாரங்களுடன் அவரைக் கொண்டு ஆழ்வான் திருமாளிகைக்கு அனுப்பியருள, ஆழ்வானும் இதனையறிந்து பதறியெழுந்து எதிர் கொண்டு மஹாப்ரஸாதமென்று அதில் தமக்கும் தமது தேவிக்குமாக இரண்டு திரளைகளையெடுத்துக்கொண்டு உத்தம நம்பியை அனுப்பிவிட்டு, பக்தவத்ஸலனை பகவானுடைய வரம்புகடந்த கருணைத் திறத்தை வியந்து அந்த அடிசிலில் ஒரு பகுதியைத் தாம் அமுது செய்து மற்றதைத் தேவியாருக்குக் கொடுத்தருளினர்.

முன்பு தசரதச் சக்ரவர்த்திக்குப் புத்திர காமேஷ்டியிற் கிடைத்த பாயசத்தின் கூறுகளே ஸ்ரீராம லக்ஷ்மண பரத சத்ருக்நர்களின் திருவவதாரத்துக்குக் காரணமானதுபோலே, இப்பொழுது இவர்க்கும் இத்திரளைகளிரண்டுமே இரண்டு திருக்குமாரர்கள் திருவவதரிப்பதற்கு ஹேதுவாயின. முறையே இவர்களின் திருநாமம் ஸ்ரீபராசரபட்டர், ஸ்ரீவேதவ்யாஸபட்டர் என்பனவாம்.

பராசர பட்டர் என்று திருநாமமாயினும் நமது சம்பிரதாய கிரந்தங்களிலெங்கும் பட்டர் என்றே இவ்வாசிரியர் வழங்கப்படுவர். பட்டர் என்னும் வடசொல் வேதசாஸ்திரங்களை நன்கு கற்றுணர்ந்த வித்வானையும், ஸ்தோத்திரஞ் செய்யும் தொழிலுடையவனையும் சொல்லும்; 'விளையும் பயிர் முளையிலே' என்னுமா போலே சிசுவாயிருந்த தன்மையிலேயே இவருடைய திறமையை நன்குணர்ந்த எம்பெருமானுர் இவர்க்குப் பொருத்தமாகப் பட்டர் என்று திருநாமஞ் சாத்தினதும், அத்திருநாமத்திற்கு மிகப் பொருத்தமாகவே இவரும் ஸர்வஜ்ஞராய் விளங்கிப் புகழ் பெற்றதும், எம்பெருமானுடைய ஸத்ய ஸங்கல்பத்துவத்தை ஸத்தியமாக்கின போலும்.

இங்ஙனே நாமகரணம் செய்தருள்வதற்காக உடையவர் எம்பாருடன் ஆழ்வான் திருமாளிகைக்கெழுந்தருளிக் குழந்தைகளை எடுத்துக் கொண்டு வாரும் என்று எம்பார்க்கு நியமிக்க, அவர் அங்ஙனமே பிரபந்நகுலக் கொழுந்தான அக்குழந்தைகளை எடுத்துக் கொண்டு வரும்போது திருஷ்டி தோஷாதிகள் தங்காதபடி ரக்ஷையாகத் துவயமென்னும் மந்திர ரத்திநத்தை அநுஸந்தித்து வாழ்த்திக் கொண்டே வந்து குழந்தைகளை எம்பெருமானுர்க்குக் காட்டினர்; அவர் மிக்க களிப்புடனே ஆனந்தக் கண்ணீர் துளிக்கத் தம் திருக்கண்களாற் குளிரக் கடாக்ஷிக்கும்போது அத்தெய்விக சிசுக்களின் தேஜோ விசேஷத்தைக் கண்டு வியப்புக் கொண்டு 'எம்பாரே! இக்குழந்தைகளிடம் துவயம் பரிமளிக்கின்றதே, இங்ஙனம் ஆகுமாறு என் செய்தீர்?' என்று வினவ, எம்பார் 'குழந்தைகட்குக் காப்பாக துவயாநுஸந்தாநம் செய்து கொண்டு வந்தேன்' என்ன; உடையவர் அப்படி எம்பார் காப்பிட்டதற்கு உகந்து அவரைப் பார்த்து 'இக்குழந்தைகள் உய்யும் வகையை நாடிச் செய்தற்கு நீர் முற்பட்டீராதலால் இவர்கட்கு நீரே ஆசார்யராகக் கடவீர்' என்று நியமித்தருளினரென்றும், அப்படியே இத்திருக் குமாரர்கட்கு எம்பாரே ஆசார்ய கிருத்யங்கள் செய்தருளினரென்றும், அதுபற்றியே, **எம்பெருமானுர்—எம்பார்—பட்டர்—நஞ்சீயர்** என்றிப்படி ஆசார்ய பரம்பரை வருகிற தென்றும் பிரசித்தமானது.

இங்ஙனேயிருக்கச் செய்தேயும், ஆழ்வானும் பட்டர்க்கு ஆசார்யராயினர். அது எங்ஙனே யெனில்; ஆழ்வான் திருக்குமாரர்கட்குத் திருவாய் மொழிப் பொருள் கற்பித்து வரும் போது "எண்பெருக்கந் நலத்தொண்பொருள் ஈறில, வண்புகழ் நாரணன் திண்கழல் சேரே" என்கிற பாசுரத்தளவிலே வந்தவாறே, அது திருமந்த்ரார்த்தத்தை விவரிக்கிற பாசுரமாகையினுலும், மந்திரார்த்தம் ஆசார்யரிடத்திலேயே கேட்டறிய வேண்டியதாதலாலும், அதனை அவர்கட்குச் சொல்லாது நிறுத்தி 'இதனை உங்கள் ஆசார்யர் பக்கலிலே கேட்டுக் கொள்ளுங்கள்' என்று சொல்ல, எழுந்து தம் ஆசாரியரான எம்பார் எழுந்தருளியிருக்கும் இடத்தைக் குறித்துப் போகப் புக்கவளவில் ஆழ்வான், "மின்னின் நிலையில மன்னுயிராக் கைகள்" என்கிறபடியே யாக்கை நிலையாமையைத் திருவுள்ளம் பற்றி அவர்களை யழைத்து 'இன்னபோது இன்னுரிருப்பார் இன்னுர் போவாரென்று தெரியாது, ஆதலால் இருந்து கேளுங்கள்' என்று, திருமந்திரத்தைச் சொல்லி அப்பாசுரத்தின் பொருளையும் விவரித்து "இப்பாசுரத்தைத் திருமந்திரத்தின் அர்த்தமாக நினைத்திருங்கள்" என்று, பணித்தருளினமையால், திருக்குமாரர்க்கு ஆழ்வானும் ஒரு ஆசார்யராக அமைந்தருளினர் என்று சம்பிரதாயம் வல்லபெரியோர் கூறுவர்.

பட்டர் ஸஹஸ்ரநாம பாஷ்யம் அருளிச் செய்யும்போது ஆசார்ய வந்தநம் செய்கிற முதல் சுலோகத்தில் "வந்தே கோவிந்த தாதௌ" (எம்பாரையும் திருத்தகப்பனுரையும் தொழுகின்றேன்) என்றருளிச் செய்தது, உபய சம்பந்தமும் தமக்கு உண்டானது பற்றியேயாம். ஸ்ரீரங்கராஜ ஸ்தலத்திலும் இரண்டு ஆசிரியருக்கும் இரண்டு சுலோகங்களைத் துதியாக இட்டருளினர்.

பட்டரை இளங்குழந்தைப் பருவத்திலேயே ஸ்ரீரங்கநாதன் தனது புத்திரனுக அங்கீகரித்துத் தன்னுடைய சந்நிதியிலே திருமணத் தூணினருகே தொட்டிலிடுவித்து ஸ்ரீரங்கநாச்சியாரும் தானுமாகச் சீராட்டி வளர்க்க, அங்ஙனம் வளர்கிற அக்குழந்தை தவழ்ந்து சென்று, பெருமாள் அமுது செய்வதற்குத் திரு

முன்பே கொணர்ந்து சமர்ப்பிக்கப்படுகிற அடிசிலைக் கைகளால் அள்ளியளைந்து துழாவ, பெருமாள் அதுகண்டு உகந்தருளி, ''அமிழ்தினும் ஆற்றவினிதே தம் மக்கள், சிறுகையளாவிய கூழ்'' (குறள்) என்றபடி, அந்த இன்னடிசிலை மிகவும் பிரியமாக அங்கீகரித்தருள்வராம். இப்படி ரங்கநாதன் தம்மை அபிமானித்துப் புத்திரஸ்வீகாரம் செய்தருளப் பெற்ற பாக்கியமுடைமையால், பட்டர் 'ஸ்ரீரங்கநாதர் புத்ரர்' என்று வழங்கப்பட்டு வந்தார். ''வானிட்ட கீர்த்தி வளர் கூரத் தாழ்வான் மகிழவந்த, தேனிட்டதார் நம்பெருமாள் குமாரர்... பட்டர்'' என்று இவரது சிஷ்யரான பிள்ளைப் பெருமாளையங்கார், திருவரங்கக் கலம்பகக் காப்புச் செய்யுட்களுள் ஒன்றில் கூறினர். பட்டர் தாமும், ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் பதினேழாம் சுலோகத்தில் ''ஸ்ரீரங்கராஜ கமலாபதலாலிதத்வம்'' என்ற பதத்தினுல் இதனை ஸ்பஷ்டமாக்கியருளினதும் உணர்க.

இப்பேராசிரியர் ஸகல சாஸ்திரங்களிலும் அபாரமான பாண்டித்தியம் பெற்றவர் என்பது, இவர் அருளிச் செய்த கிரந்தங்களுள் ஸஹஸ்ரநாம பாஷ்யம் ஒன்று கொண்டே உணரத் தக்கதாகும். இவர் கவித்திறமையில் ஒத்தாரும் மிக்காருமில்லாதவர் என்பது, இவர் அருளிய ஸ்ரீரங்கராஜஸ்தவ ஸ்ரீகுணரத்ந கோசாதிகளால் நன்கு விளங்கும். அருளிச் செயல்களில் அற்புதமான விசேஷார்த்தங்களை அருளிச்செய்வதற்கு இவ்வாசிரியரே அநிதரஸாதாரணமான வல்லமை பெற்றவர் என்பது, திவ்யப்ரபந்த வியாக்கியானங்களில் பெரியவாச்சான் பிள்ளை முதலானோர் அடிக்கடி அருளிச்செய்யுமவற்ருல் தெரிகின்றது. வியாக்கியானங்களில், 'என்று பட்டர் அருளிச் செய்வர்' என வருமிடங்களி லெல்லாம், ஒரு விலக்ஷணமான ரஸாநுபவம் கல்நெஞ்சினர்க்கும் உண்டாவது வழக்கம். இவரது நிர்வாகங்களில் ஒன்றை ஈண்டெடுத்துக்காட்டுவோம்.

திருநெடுந்தாண்டகத்தில் 'அறுகால சிறு வண்டே தொழுதேனுன்னை' என்ற பாசுரத்தில் வண்டுக்கு சுவபாவிகமான ஆறுகால்களுள்ளமையை எதற்காகச் சொல்லிற்று? என்று விமர்சிக்கப் புகுந்த சிலர், இரண்டு காலாகவும் நான்கு காலாகவுமின்றியே விரைந்து செல்லுகைக்கு உறுப்பாக ஆறுகால்கள் இருக்கப் பெற்ற பாக்கியம் என்ன : என்று வியந்து கூறுவதாக நிர்வகித்தார்களாம். இந்த நிர்வாத்தில் சுவாரஸ்யமில்லை. வண்டு செல்லுதற்குச் சாதனம் சிறகேயன்றிக் கால்கள் அல்லவே ; ஆதலால் 'அறுகால' என்னும் அடைமொழிக்கு அங்ஙனே கருத்துரைத்தல் பொருந்தாதென்று, பட்டர் அருளிச் செய்வதாவது :— தொழுதேனுன்னை என்று மேலேயிருக்கையிலே என் தலையிலே வைப்பதற்கு ஆறுகால்கள் உண்டாகப் பெற்றதே : என்று வியந்து சொல்லுகிறபடி'' என்பதாம். இதனை விவரிப்போம். தூது சென்று மீண்டு வந்தால் வண்டின் கால்களைத் தலைநிறைய வைத்துக்கொண்டு கூத்தாடக் குதூகலித்திருப்பதனுல் அதற்குச் சேர இங்ஙனே கருத்துரைத்தபடி. சுவாபதேசத்தில் வண்டாகச் சொல்லுவது ஆசார்யர்களை. ஆசாரியனும், ஆசாரியனுடைய தேவியாரும், அவருடைய திருக்குமாரருமாக மூவரும் உத்தேச்யர் என்பது, ஆபஸ்தம்ப சூத்ரஸித்தம். ''மூவர்க்கும் சேர்ந்து ஆறு திருவடிகளாதலால் அது தோன்றவே அறுகால சிறு வண்டே; என்றது''—என்பது பட்டர் திருவுள்ளம். ''கொங்கார் பூந்துழாய் முடி என் குடக் கூத்தற்கென் தூதாய், நுங்கால்கள் என் தலைமேல் கெழுமீரோ நுமரோடே'' என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் சுவாபதேசார்த்தித்திற்கு மிகவு மிணங்கிய தாமிது.

திரிபுவன வீரதேவராயன் என்ற அரசன் பட்டர் வைபவத்தைக் கண்டும் கேட்டும் அவரிடத்து மதிப்புக் கொண்டு ஒரு நாள் 'பட்டரே! நீர் நமது அரண்மனைக்கு ஒருவிசை வந்து போம்' என்று சொல்ல, அதற்குப் பட்டர் சிறிதும் இணங்காமல் ''நம்பெருமாள் அஞ்சலென்று கைமறித்தாலும் அவர் வாசலொழிய வேருெரு போக்கிட முண்டோ எனக்கு?'' என்று சொல்லி மறுத்துவிட்டனர் என்பது பிரசித்தம். தன்னைச் சரணமடைந்தவர்கட்கு ஆவன வெல்லாஞ் செய்து அவர்களைப் பாதுகாத்தலையே விரதமாகக் கொண்டு அவர்களுக்கு அபயமளிப்பவனுகிய பரமபுருஷனுக்குஅடிமைப்பட்ட நாம் சில சிற்றரசரின் வாசலிலே கிடந்து துவளக்கடவோமல்லோம் என்கிற அத்யவஸாயத்தை வெளியிட்டவாறு.

திருவாய்மொழி முதற்பத்தில் தூதுவிடும் பதிகமான ''அஞ்சிறைய மடநாரை'' யில் நான்காவது பாசுரமாகிய "என்னீர்மை கண்டி ரங்கி'' என்னும் பாசுரத்தில் ஒரு தமிழனுக் கும் பட்டர்க்கும் நடந்த சம்வாதம் ஈடுமுப்பத் தாறுயிரத்தில் அருளிச் செய்யப்பட்டுள்ளது.

பிரிவில் தரிக்கமாட்டாத என்னுடைய சுவபாவத்தை நன்றாகக் கண்டு வைத்தும் 'ஐயோ ? இப்படிப்பட்டவளையோ விட்டுப் பிரிவது ! ஒருகாலும் பிரியத்தகாது' என்றி ராத என்னீல முகில்வண்ணர்க்கு என்ன சமா சாரம் சொல்லுவேன் என்பன முன்னடிகள். முற்காலத்தில் ஒரு தமிழன் பட்டரிடத்தில் வந்து இப்பாட்டின் முதலடியில் ஒரு ஆக்ஷேபம் செய்தானும் ; அதாவது—இது பிரிந்திருக்கும் நிலைமையில் சொல்லுகிற பாசுரமேயன்றிக் கூடியிருக்கும் நிலைமையிற் பாசுரமன்றே ; பிரிந் திருக்குங்காலத்தில் தலைவியின் தன்மைகளைத் தலைமகன் பிறர்சொல்லக் காதால் கேட்கலா குமே தவிரக் கண்ணால் நேரில் காண முடியா தன்றே; ஆகவே, ''என்னீர்மை கேட்டிரங்கி யிது தகாதென்னாதே'' என்று பாசுரமிருக்க வேண்டியது உசிதமாயிருக்க, ''என்னீர்மை கண்டிரங்கி'' என்று எப்படிச் சொல்லலாம் ? என்று பூர்வபக்ஷம் செய்தானும். பட்டர் அதைக்கேட்டு, பண்டிதரே ! நன்கு கேட்டீர்; ''புல்லிக்கிடந்தேன் புடைபெயர்ந் தேனவ் வளவில், அள்ளிக் கொள்வற்றே பசப்பு.'' என்ற திருக்குறளும், ''ஊருண்கேணியுண்டு றைத் தொக்க பாசியற்றே பசலை , காதலர் தொடுவுழித் தொடுவுழி நீங்கி விடுவுழி விடு வுழிப் பரத்தலானே'' என்ற குறுந்தொகைச் செய்யுளும் உமக்குத் தெரியாதுபோலும்' என்று சொல்லி அவற்றைப் பரக்க உபந்நிய ஸித்து சமாதானப்படுத்தியருளினராம். சமா தான விவரணம் வருமாறு :

''புல்லிக்கிடந்தேன்'' என்ற குறள், திருக் குறளில் பசப்புறு பருவரல் என்னுமதிகாரத் தில் ஏழாவதாகும். இது நாயகியின் பேச்சு ; முன்பொரு நாள் காதலரை அழுந்தத் தழுவிக் கிடந்தேன் ; கைமாறுவதற்காகச் சிறிது புடை பெயர்ந்தேன் ? ஒரு நொடிப்பொழுது விலகின மாத்திரத்திலும் பசலைநிறம் வந்து உடம்பெல் லாம் மூடிக்கொண்டது என்பது இதன் கருத்து. 'ஊருண்கேணி' என்ற செய்யுள் குறுந்தொகை யில் முந்நூற்றுத் தொண்ணூற்றொன்பதாவது. இதன் கருத்தாவது— ஊரிலுள்ள ஜனங்களா லே நீருண்ணப் பெறுகிற கேணியினுள்ளே படர்ந்துகிடக்கின்ற பாசியைப் போன்றது பசலை நிறம் ; தண்ணீரில் நாம் கைவைத்தோ மாகில் கைப்பட்ட இடங்களில் பாசி நீங்கும் ; கையை எடுத்து விட்டோமாகில் அவ்விடமெல் லாம் பாசி மூடிக்கொள்ளும் ; அதுபோல, கணவனுடைய கைபடுமிடங்களில் பசலைநிறம் நீங்கும் ; அணைத்தகை நெகிழ்ந்தவாறே அப் பசலை நிறம் படாது ஆதலால் பாசி போன்றது பசலைநிறம் என்றபடி. (தொடுவுழித்தொடு வுழி— தொட்டவிடங்கள்தோறும் ; விடுவுழி விடுவுழி—விட்டவிடங்கள்தோறும் ; பரத்த லான்—வியாபிக்கிறபடியினாலே,) பிரிவாற்று மையினால் ஸ்த்ரீகளின் மேனியில் தோன்றும் நிறவேறுபாடு பசலை நிறமெனப்படும். நாய கனை விட்டுப் பிரிந்தகாலத்திலே நாயகியினுட லில் இந்த நிறவேறுபாடு தோன்றுவது ஆச்சரி யம் அன்று ; ஒரு படுக்கையிலேயே படுத்துக் கூடியிருக்கும்போதே க்ஷணகாலம் கைநெகிழ்ந் தவளவில் இந்தப் பசலைநிறம் படர் கின்ற தென்றால் பிரிந்த நிலைமையிற் கேட்கவேண்டிய தில்லையன்றே.

பட்டரிடத்தில் ஆக்ஷேபம் செய்த தமிழ னுக்கு இப்போது என்ன சமாதானமாயிற் றென்னில், இப்பாட்டு பிரிவுகாலத்திற் சொல் லுவதனாலும், கூடியிருந்த காலத்தில் நிகழ்ந்த சம்பவத்தையே நினைப்பூட்டுவதாதலால், கேட்டிரங்கி என்ன வேண்டியதில்லை ; கண்டி ரங்கி என்றே சொல்லத்தகும் என்றதாயிற்று. பட்டருடைய இத்தகைய நுண்பொருள் உரை கள் பற்பல.

திருவக்கரை

[திரு. மயிலை, சீனி. வேங்கடசாமி]

தென்னுற்காடு மாவட்டத்தில் விழுப்புரம் தாலுகாவில் திருவக்கரை என்னும் திருப்பதி இருக்கிறது. இங்குள்ள சிவன் கோவிலில் சந்திர சேகரேசுவரரும், வடிவாம்பிகை அம்மையும் எழுந்தருளியிருக்கின்றுர்கள். திருஞானசம்பந்த மூர்த்திநாயனுர், இக் கோயிற் சிவபெருமானைப் பாடியுள்ளார்.

'சந்திரசேகரனே! அருளாய்' என்று தண் விசும்பில்
இந்திரனும்முதலா இமையோர்கள் தொழுதிறைஞ்ச
அந்தர மூவெயிலும் அனலாய்விழ ஓரம்பினல்
மந்தர மேரு வில்லா வளைத்தானிடம் வக்கரையே'

என்பது அத்திருப்பதிகத்தில் மூன்றுஞ்செய்யுள்.

திருவக்கரைத் திருக்கோயிலிலே பல கல்வெட்டெழுத்துக்கள் இருக்கின்றன. இக்கல்வெட்டெழுத்துகளிலிருந்து இந்தக் கோயிலைப் பற்றிய பழைய செய்திகளை அறிகிறோம். இந்தக் கல்வெட்டெழுத்துக்களில் காலத்தினுல் பழமையானது, முதலாம் இராஜராஜசோழன் காலத்தது. இவனுடைய 16-வது ஆட்சி ஆண்டில் (கி. பி. 1000-1001), இந்தக் கோவில் கற்றளியாகக் கட்டப்பட்டது. கற்றளியாகக் கட்டப்படுவதற்கு முன்பு இக் கோவில் செங்கற் கட்டடமாக இருந்திருக்க வேண்டும். இந்தக் கோயிலைக் கற்றளியாகக் கட்டியவர், செம்பியன்மாதேவியார் என்னும் சோழ அரசியார்.

''ஸ்ரீகோராஜராஜ ராஜகேசரி பன்மற்கு யாண்டு 16-வது ஸ்ரீ கண்டராதித்த தேவர் தம்பிராட்டியார் ஸ்ரீஉத்தம சோழரைத் திருவயிறு வாய்த்த உடைய பிராட்டியார் செம்பியன் மாதேவியார் எடுப்பித்தருளின ஸ்ரீவக்கரைத் திருக்கற்றளிச் சிவலோகம் உடைய பரம சுவாமிகள்'' என்று இந்தச்சாசனம் கூறுகிறது.

இதனைத் தொடர்ந்து வருகிற நீண்ட சாசனம் முற்றுப் பெறவில்லை. நிலமும் பொன்னும் தானஞ் செய்து அவற்றின் வருவாயிலிருந்து திருவமுது நெய்யமுது, பொரிக்கறி, மிளகுபொடி ஆகிய கறியமுது இரண்டு, தயிர் அமுது அடைக்காயமுது வெற்றிலையமுது முதலியவற்றுக்கு நிபந்தங்கள் செய்திருக்கிறுர். மற்றும் தலைப்பறை கொட்டும் உவச்சன், திருப்பதிகம் பாடுவார், திருப்பள்ளித் தாமம் பறிப்பான், திருவலகும் திருமெழுக்கும்இட்டுப் பள்ளித்தாமம் தொடுப்பவள், ஸ்ரீகாரியஞ் செய்கிறவர்கள் முதலியோருக்கு நிபந்தங்கள் செய்திருக்கிறுர். மற்றும் 'கலசங்களும் சால்களும் குடங்களும் பெருந்திருவமுதுக்குப் பானைகளும் சட்டிகளும்' இடும் குசவனுக்கும், நிபந்தங்கள் செய்திருக்கிறுர் (222. நி. த. இ. க. தொகுதி 17.)

இங்கு ஒன்றைக் கவனிக்கவேண்டும். இந்தக் கோவிலைக்கருங்கல்லினுல் கற்றளியாகக் கட்டி நிலங்களையும் பொன்னையும் வழங்கின இந்த அரசியார், பானை சட்டிகளில் திருவமுது செய்ய நிபந்தங்கள் செய்திருக்கிறார். சோழப் பேரரசியாகிய அவர் விரும்பியிருந்தால்பொன், வெள்ளி, வெண்கலப் பாத்திரங்களை வழங்கி யிருக்கலாம். அப்படி இல்லாமல் மட்கலங்களை நியமித்தது, அக்காலத்து வழக்கத்தைத் தெரி விக்கிறது. அரசர்களுங்கூட அக்காலத்தில் மட்கலங்களையே சமைப்பதற்கு உபயோகித் தார்கள் என்பது இதனுல் தெரிகிறது.

முதலாம் இராஜ ராஜனுடைய 29 - ஆம் ஆட்சியாண்டில் எழுதப்பட்ட இன்னொரு சாசனம் இக்கோவிலில் இருக்கிறது. அது கி. பி. 1013 - 14 ஆம் ஆண்டில் எழுதப்பட் டது. அது மாம்பாக்கம் உடையான் சாத்தன் ஆலை என்பவன் இந்தக் கோவிலில் நந்தா விளக்கு ஒன்று வைத்து, அவ்விளக்குக்கு நாள் தோறும் நெய் அட்டுவதற்காகத் தொண்ணூறு ஆடுகளைத் தானஞ் செய்ததைக் கூறுகிறது. அதாவது ஆட்டுப்பாலிலிருந்து நெய் எடுத்துத் திருவிளக்கு ஏற்றவேண்டும் என்று ஏற்பாடு செய்ததைக் கூறுகிறது. (195. தெ. இ. க. தொகுதி 17).

இராஜேந்திரசோழன் (முதலாமவன்)ஏழா வது ஆட்சியாண்டில் (கி. பி. 1018) நந்தி ஏறன் என்பவன் திருநந்தாவிளக்கு ஒன்று இக் கோயிலுக்கு வைத்தான். விளக்கு எரியும் நெய்க்காகத் தொண்ணூறு ஆடுகளையும் கோயிலுக்குத் தானம் செய்தான். இதனை இன்னொரு சாசனம் கூறுகிறது. (197. தெ. இ. க. தொகுதி 17)

இராசேந்திர சோழனின் 21 - ஆம் ஆண்டில் (கி. பி. 1052) இந்தக் கோவிலில், இணையன் ஆடவல்லானுன பெரியன் என்பவர் 72 பலம் நிறையுள்ள வெண்கலத்தினுல் செய்த ஒரு செயகண்டிகையை (சேமக்கலம்) தானம் செய்தார் என்று இன்னொரு சாசனம் கூறு கிறது. (198)

முதலாங்குலோத்துங்கசோழனின் பத்தாம் ஆண்டுச் சாசனம் (கி. பி. 1079) ஒன்று, அழகிய சோழப் பல்லவரையனுடைய அக முடையான் தாமருடையான் திருவாறை பொன் என்பவர், இக்கோயிலுக்குச் சந்தி விளக்குக்காகப் பன்னிரண்டு ஆடுகளைத்தானஞ் செய்ததைக்கூறுகிறது. (199) இந்தச் சோழ னுடைய 29-ஆம் ஆண்டுச் சாசனம் (கி. பி. 1098) இந்தக் கோவிலுக்குத் தேவரடியாரைத் தானம் செய்ததைக் கூறுகிறது.

''ஜயங்கொண்ட சோழ மண்டலத்து (தொண்டை மண்டலத்து) மாத்தூர் நாட்டுப் பந்திமங்கலத்துப் பரலிகை ஊர் இருக்கும் வேளாளன் மாம்பாக்க முடையான் அமுதன் பள்ளி கொண்டானும், அமுதன் வேளானும், அமுதன் உய்ய வந்தானும் இவ்வனைவோங்கள் அடியாள் அங்காடியும், இவள்மகள் பேரங்கா டியும், இவள் மக்களும் திருவக்கரையுடைய மாதேவற்குத் தேவரடியாராக ஸ்ரீஹஸ்தத்தே நீர்வார்த்துக் குடுத்தோம்'' என்று இந்தச் சாசனம் கூறுகிறது. (204)

விக்கிரமசோழனுடைய மூன்றும் ஆண்டு (கி. பி. 1120) சாசனம், ஒய்மா நாட்டு முந் நூற்றுச்குடிப்பள்ளி செங்கெணி அம்மையப் பன் பண்டி என்பவர் இக்கோயில் பெருமா னுக்கு மந்திரபோனகம் நெய்யமுது கறியமுது அடைக்காயமுது தயிரமுது முதலியவற்றிற்கு நிவந்தம் செய்ததைக் கூறுகிறது, (201) இவருக்கு நரலோகவீரப் பேரரையன் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு.

திருவக்கரைச் சிவன் கோவிலில், எழுந்தரு ளியுள்ள வரதராஜப் பெருமாள் கோவிலின் வாயிலில் இடதுபுறத்து வாயிலின் நிலையில் ஒரு செய்யுள் எழுதப்பட்டிருக்கிறது. அது கீழ்வருமாறு :

ஸ்வஸ்திஸ்ரீ.
இசைவிளங்குடையன்மன் எங்கோனுக்கு
இருபத்து நாலாமாண்டு
குசைவிளங்கு மறையவர்கள் குழுமிய
வக்கரை மாலின் கோயில் சாலத்
திசை விளங்கு திருவாசல் பொற்கதவு
சமைத்தான் வென்றி
திசைவிளங்கு வேற்கண்டன் துருவ்வை கோன்
வழிக்கரிசி மடந்தை கோவே.

இந்தச் சாசன எழுத்து, கி. பி. 11 - ஆம் நூற்றுண்டில் எழுதப்பட்டதாகத் தோன்று கிறது. (230).

சோழ அரசனான இரண்டாம் இராஜாதி ராஜனால் ஏழாம் ஆட்சியாண்டில் (கி. பி. 1169), திருவக்கரைக் கோயிலின் கோபுரம் கட்டப்பட்டது. இதற்கு முன்னர்க் கோபுரம் இல்லை என்று தோன்றுகிறது. இந்தக் கோபுரத்தைக் கட்டினவன் அம்மையப்பன் பாண்டி நாடு கொண்டானான கண்டர் சூரியன் சம்புவ ராயன் என்பவன். இந்தச் சாசனத்தின் வாசகம் இது :-

''ஸ்வஸ்திஸ்ரீ. திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீஇராஜாதிராஜதேவற்கு யாண்டு ஏழாவது திருவக்கரை ஆளுடையார் கோயிலில் திருக்கோபுரம், **கண்டர் சூரியன் திருக்கோபுரம்** என்னும் பெயரால் செய்வித்தான்அம்மையப்பன் பாண்டிநாடு கொண்டானான கண்டர் சூரியன் சம்புவ ராயன்'' (217).

இந்தச் சம்புவராயனே இத்திருக்கோவிலில் ஆயிரக்கால் மண்டபத்தையுங் கட்டினான். இந்த மண்டபம் மூன்றாங் குலோத்துங்க சோழனுடைய இரண்டாவது ஆண்டில் (கி. பி. 1179) கட்டப்பட்டது. இந்தச் சாசனத்தின் வாசகம் இது :-

''ஸ்வஸ்திஸ்ரீ. திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும் பாண்டியன் முடித் தலையுங் கொண்டருளின, ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு 2-வது. இராஜராஜவள நாட்டு மாத்தூர் நாட்டு உடையார் திருவக்கரை ஆளுடையார் கோயிலில் இத்திருமண்டபம் கண்டர் சூரியன் திருமண்டபம் என்னும் பெயரால் செய்வித்தான் அம்மை அப்பன் பாண்டிநாடு கொண்டானான கண்டர் சூரியன் சம்புவ ராயன் (212).

மூன்றாம் குலோத்துங்க சோழனின் பதினாறுவது ஆண்டில் (கி. பி. 1194) எழுதப்பட்ட இன்னொரு சாசனம், இந்தக் கோவிலில் நான்கு நந்தாவிளக்கு தானங்கொடுத்ததைக் கூறுகிறது. தானங்கொடுத்தவர் ஒரு காடவ ராயர். ''இத்திரு நந்தாவிளக்கு நாலுக்கும் விட்ட சாவா மூவாப்பசு 128. ரிஷபம் 4. ஒரு நந்தாவிளக்கு 32 பசுக்கள் வீதம் 4 விளக்குகளுக்கு 128 பசுக்களைக் கொடுத்தார். இந்தப் பசுக்களின் பாலிலிருந்து நெய் எடுத்து அந்த நெய்யினால் விளக்கேற்றவேண்டும் என்பது கட்டளை. 4 ரிஷபம் (காளைமாடு) கொடுத்தது எதுக்கென்றால், இவை ''சாவாமூவாப் பசுக்கள்'' ஆகையால் இப்பசுக்களின் எண்ணிக்கை குறையாமல் கன்றுகள் ஈன்று வளர்ச்சி எய்தி இருப்பதற்கு (215).

இந்த மூன்றாங் குலோத்துங்க சோழனுடைய 16 - ஆம் ஆட்சியாண்டில் (கி. பி. 1193) கண்டர் சூரியன் சம்புவராயன் இரண்டு குத்து விளக்குகளைத் தானஞ்செய்தான். இந்தச் சம்புவராயன் இக்கோவிலில் கோபுரத்தையும் ஆயிரக்கால் மண்டபத்தையும் கட்டினதை முன்னமே கூறினோம். குத்துவிளக்குச் சாசனத்தின் வாசகம் இது :

''ஸ்வஸ்திஸ்ரீ. திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு 16-வது உடையார் திருவக்கரை ஆளுடையார்க்கு அம்மை அப்பன் பாண்டிநாடு கொண்டானான கண்டர் சூரியன் செய்வித்து இட்ட ஐஞ்சு நிலைக்குத்து விளக்கு 2 - னால் இருப்பு நாராசம் உட்படத் தாராஎடை ஆயிரத்து நூற்று எண்பத்து இருப்லம்.'' (216. தெ. இ. க. தொகுதி 17).

மூன்றாம் விக்கிரமபாண்டியனுடைய நான்காம் ஆண்டில் (கி. பி. 1285) எழுதப்பட்ட சாசனம், இப்பாண்டியனுடைய அரசி இக்கோவிலில் ஒரு மண்டபம் கட்டியதைக் கூறுகிறது. ''பெருமாள் விக்கிரமபாண்டிய தேவர் நம்பிராட்டியார் உலகமுழுதுடையார் செய்வித்த திருமண்டபம் யாண்டு 4.'' (210)

இந்தப் பாண்டியனுடைய ஆறாவது ஆண்டில் (கி. பி. 1288) எழுதப்பட்ட சாசனம், இந்தப் பாண்டியன் இந்தக் கோவிலுக்கு நிலம் தானங்கொடுத்ததைக் கூறுகிறது. இவன் தன் பேரால் நித்தியபூசை, திருநாள்களை அமைத்தான். ''நம்பேரால் கட்டின விக்கிரம பாண்டியன் சந்திக்கும் விக்கிரமபாண்டியன் திருநாளுக்கும் அமுதுபடி சாத்துப்படிஉள்ளிட்டு வேண்டும் நித்த நைமித்திகங்களுக்கும் திருநாமத்துக் காணி'' என்று இச்சாசனம் கூறுகிறது (202).

முதலாங் குலோத்துங்க சோழனுடைய 44 - ஆம் ஆண்டுச் சாசனம் (கி. பி. 1113), இக்கோயிற் சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் துர்க்கைக்கும் திருவிளக்காக (65) பொற்காசு தானம் செய்யப்பட்டதைக் கூறுகிறது. ''இக்காசு அறுபத்தஞ்சுக்குத் திருவக்கரை ஆளுடையார்க்கு ஒரு திருநந்தாவிளக்கும், திருவக்கரை ஆழ்வார்க்கு ஒரு திருநாந்தா விளக்கும், துர்க்கையார்க்கொரு சந்தி விளக்கும் இரண்டு தேவர்களுக்கும் சனி எண்ணெய் காப்பு மாசத் திருநாழி எண்ணெயும் நீக்கி நின்றது தூண்டுவான் கூலியாகவும் இப்பரிசு சந்திராதித்தவல் இக்கோயிலிரண்டுங், குடமும் அலகுங்கொண்டு புகுவார் இத்திரு விளக்கும் எரித்து இக்கோயில் கைக்கொண்டு திருவாராதனை செய்வோம்'' என்று இந்தச்சாசனப்பகுதி கூறுகிறது (203).

சாலிவாகன சக ஆண்டு 1352 - இல் (கி. பி. 1430 - இல்) **செம்மந்தை காங்கேயன்** என்பவர் இக்கோவிலில் ஒரு கோபுரத்தையும் ஒரு மண்டபத்தையுங் கட்டினர் என்று ஒரு செய்யுட் சாசனங் கூறுகிறது. இந்தக் கோபுரமும் மண்டபமும் முற்கூறிய கண்டர் சூரியன் சாம்புவராயன் அமைத்த கோபுரமும் மண்டபமும் அல்ல; இவை வேறு,

விம்பச் சகர மற்றோராயிரத்து
முந்நூற்றுக்குமேல்
ஐம்பத் திரண்டினில் வக்கரையார்க்கு
அணிகோபுரமுஞ்
செம்பொற்றிரு மண்பமுங் கண்டான்
செஞ்சொல்தேவரசன்
கப்பக் களிற்றண்ணல் இதூர்மன்
செம்மந்தை காங்கேயனே'' (218).

இந்தக் கோபுரமும் மண்டபமும் பிற்காலத்தில் பழுதடைந்தபோது **செவ்வன்னன்** என்பவர் இவற்றைப் புதுப்பித்தாரென்று இங்குள்ள இன்னொரு சாசனச் செய்யுள் கூறுகிறது. இந்தச் சாசனத்தின் எழுத்து பிற்காலத்தது. இந்தச் சாசனச் செய்யுள் இது!

''பன்னக பூஷணர் வக்கரை
ஈசற்குப் பத்தியுடன்
முன்னளிற் காங்கயன் கோபுரம்
மண்டபம் முற்றுங்கண்டான்
இந்நாள் அதனை யெல்லாம்
நவமாக்கினன் எங்கள் கச்சிச்
சின்னன் துணைவன் அரசன்
குமாரன்நற் செவ்வண்ணனே'' (219).

இந்தச் செய்திகளையெல்லாம் திருவக்கரைத்திருக்கோயிலில் எழுதப்பட்டிருக்கிற கல்வெட்டுச் சாசனங்களிலிருந்து அறிகிறோம். கல்லில் எழுதிவைக்காமலிருந்தால் இவைகளை நாம் எங்ஙனம் அறிய முடியும்?

திருக்கோயில்களில் திருவிளக்கு ஏற்றினால் ஞானம்பெறலாம் என்பது ஆன்றோர் வாக்கு. திருவிளக்கு இடுவது பெரும் புண்ணியமாகக் கருதப்படுகிறது. திருவிளக்கேற்றிக் கடவுளை வணங்கினால் கடவுள் திருவருள் கிடைக்கும்.

விரும்பிநல் விளக்குத் தூபம்
விதியினால் இடவல்லார்க்குக்
கரும்பினிற் கட்டிபோல்வார்
கடவூர் வீரட்டனாரே.

என்று திருநாவுக்கரசு சுவாமிகள் கூறுவது காண்க.

முற்காலத்துப் பெரியவர்கள் எண்ணெய் விளக்கேற்றுவதைவிட, நெய் விளக்கு ஏற்றுவதை உயர்வாக மதித்தார்கள். (இதனால் எண்ணெய்விளக்கு கூடாது என்பதன்று). இதனால்தான் அக்காலத்தவர் வசதியிருந்த போது திருக்கோயில்களில் நெய்யினால், திருவிளக்கு ஏற்றினார்கள். அதற்காக ஆடுகளையும் பசுக்களையும் திருக்கோயில்களுக்குத் தானம் கொடுத்தார்கள். செல்வர்கள் அக்காலத்தில் பசுக்களையும் ஆடுகளையும் திருக்கோயில்களுக்குத் தானஞ்செய்து, அவற்றின் பாலிலிருந்து கிடைக்கிற கலப்பற்ற நெய்யினால் திருவிளக்கேற்ற நிபந்தங்களைச் செய்தார்கள். இச்செய்திகளைக் கல்வெட்டெழுத்துக்களிலிருந்து அறிகிறோம்.

திருஞான சம்பந்தர் தேவாரத்தில் குறிஞ்சித் திணைவளம்

(ந. ரா. முருகவேள், M A., M. O. L.)

முன்னுரை :

திருஞான சம்பந்தப் பெருமானுக்குப் பல திறச் சிறப்புக்கள் உண்டு. அவற்றுள் அவர் '' நற்றமிழ் வல்லவர் '' என்பதும் ஒன்று. திருஞான சம்பந்தப் பெருமானே தம்மை 'நற்றமிழ் வல்லவர்' எனப் பலஇடங்களில் குறிப்பிட்டுக் கொள்வதுடன், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தமது பாடல்களில் அவ்வுண்மையை வழிமொழிந்துகூறி வற்புறுத்தி உணர்த்துகின்றூர். நம்பியாண்டார் நம்பிகள் '' ஆறது ஏறும் சடையான் அருள்மேவ அவனியர்க்கு வீறது ஏறும் தமிழால் வழி கண்டவன் '' எனத் திறம் அறிந்து பாராட்டித் திருஞான சம்பந்தரைப் போற்றித் துதித்துள்ள அருமைப்பாடு, பெரிதும் அறிந்து மகிழ்தற்குரியது.

நற்றமிழ் :

ஞான சம்பந்தர் நற்றமிழில் வல்லவர் என்பதனை நன்கினிது உணர்த்தும் நல்லபல சான்றுகள், அவர்தம் திருப்பாடல்களில் ஆங்காங்கே மலிந்து காணப்படுகின்றன. 'நற்றமிழ்' என்னும் தொடருக்கு, எத்தனையோ பல இயைபுடைய பொருள்களைத் தத்தம் மதிநுட்பத்திற்கு ஏற்ப அறிஞர்கள் இனிதெடுத்து விளக்குதல் கூடும். ஆயினும், 'பல்பொருட்கு ஏற்பின் நல்லது கோடல்' என்னும் தந்திர உத்திபற்றி, 'நற்றமிழ்' என்றது ஈண்டுச் சங்கத் தமிழ் மொழியையே குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்.

பத்துப்பாட்டு ஆதிமனம்
பற்றினர் பற்றுவரோ ?
எத்துணையும் பொருட்கிசையும்
இலக்கணமில் கற்பனையே

எனப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் கட்டுரைக்கும் திறம் கருதியுணர்ந்தால், சங்கத் தமிழ் மொழியை நற்றமிழ் எனக் கொள்ளுதலின் பொருத்தத்தை அறிஞர்கள் அனைவரும் நயந்து உடன்படுவர்.

சம்பந்தரும் சங்கத்தமிழும் :

ஞான சம்பந்தப் பெருமான், சங்க காலத் தமிழ் மரபை நன்குணர்ந்து பாடுதலில் வல்லவர். சங்க காலத்தில் வழங்காத பலபுதிய

சீர்காழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி கோயிலில், திருமுலைப்பால் திருவிழாவின் சார்பில், தருமையாதீனம் கயிலைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளப்பாங்கின்படி, நடைபெற்ற திருஞானசம்பந்தர் தேவாரம் பற்றிய கருத்தரங்கில், தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு புலவர் திரு. கா. கோவிந்தன், M.A. அவர்கள் தலைமையில் ஆற்றிய சொற்பொழிவைத் தழுவியது. (13-4-70)

— ஆசிரியர்

பாவினங்களை ஞான சம்பந்தப் பெருமான்தான், முதன்முதற் பாடியருளிப் பெருக வழங்கச் செய்தனர். ஆயினும், அவர் சங்ககாலத் தமிழ் மரபைப் பெரிதும் போற்றியவரேயாவர். ஞான சம்பந்தர்க்குச் சங்க காலச் சான்றோர் கள் மாட்டும், சங்க காலத் தமிழ்ப் பண்பாட்டு மரபுநெறிகளிலும் மிக்க ஈடுபாடு இருந்த தெனத் தெரிகின்றது. தமது பாடல்களை ''ஞான சம்பந்தன் உரை செய் சங்கமலி செந்தமிழ்கள்'' என அவர் சிறந்தெடுத்து உரைத்தலால், இதனைத் தெளியலாம். மேலும், அவர் ''பட்டிமன் தென்னன்'' என்றும், ''அந்தண் மதுரைத் தொகை ஆக்கினுன்'' என்றும், அருளிச் செய்திருத்தலும், ஞான சம்பந்தர்க்குச் சங்கத் தமிழின்பால் இருந்த எல்லையற்ற ஈடுபாடும் பெருமதிப்பும் பற்றி இனிது புலப்படுத்தும்.

ஞானசம்பந்தரின் பாடல்கள், எத் துணையோ பலப்பல நலங்கள் சான்றவை. அவர் தம் அழகிய இனிய பாடல்களில், ஆங்காங்கே சங்க நூற் சாயல்களும், கருத்துக்களும் மரபு களும் வழக்காறுகளும் நிறைந்து காணப் பெறுகின்றன. அவ்வொப்புமைப் பகுதிகளைக் கண்டு சுவைத்து மகிழ்வதும், ஞான சம்பந்த ரின் பாடல்களை நாம் ஆராய்ந்துணர்ந்து நலம்பெறத்தக்க பலதிற வழிவகைகளுள் ஒன்ருகும்.

திணைகொள் செந்தமிழ் :

பிறமொழிகளிற் காணப்பெருத தனிப் பெரும் சிறப்பியல்புகள்பல, நம் தமிழ் மொழிக்கு உண்டு. ஆசிரியர் சிவஞான சுவாமி கள், தமது தொல்காப்பியச் சூத்திரவிருத்தி என்னும் நூலில், தமிழ்மொழிக்கே உரிய சிறப் பியல்புகள் சிலவற்றைத் திறம் தெரிந்து சிறந் தெடுத்துக் காட்டிக் குறிப்பிட்டருளியிருக்கின் றனர். அவற்றுள் தமிழ்மொழியில் மட்டுமே குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் முதலிய திணைப் பாகுபாடுகளும், அவற்றிற்குரிய முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என்பவற்றின் விளக் கங்களும் முதலியனபற்றிக் கூறும் பொருள் இலக்கணம் என்பதொன்று தனியே விரிவுற அமைந்திருத்தலையும், அவர் சிறப்புற எடுத்துக் காட்டியிருக்கின்ருர். பொருளிலக்கணம் தமிழ் மொழிக்குப் பெரும் சிறப்பை விளைவித்து விளங்கிக் கொண்டிருத்தலை, மிகப் பழைய பரி பாடல் என்னும் சங்க நூலும், ''தள்ளாப் பொருளியல்பில் தண்டமிழ் ஆய்வந்திலார் கொள் ளார் இக்குன்றின் பயன்'' என்னும் வரிகளாற் புலப்படுத்தியிருக்கின்றது. குறிஞ்சி முல்லை முத லிய திணைப்பாகுபாடுகள் தமிழ்மொழிக்கே சிறப்பாக உரியன ஆதலை வலியுறுத்திச் சுந்தர மூர்த்தி சுவாமிகளும், ''திணைகொள் செந்தமிழ் பைங்கிளி தெரியும் செல்வத் திருநின்றி ஊரானே'' எனவரும் தமது தேவாரப் பாடற் பகுதியில் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

திருஞான சம்பந்தர் ''அசைவில் செழுந் தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல'' அவதரித்தருளியவர். வேறுபிற எந்தப் பண்டைத் தமிழ்ச் சான்ருேரும் குறிப்பிட்டுக் கொள்ள நினையாத நிலையில், தம்மைத் 'தமிழ் ஞானசம்பந்தன்' எனப் பல (45) இடங் களில் முதன்முதலாகக் குறிப்பிட்டுக்கொண்டு, நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பியருளிய நலம் சிறந்தவர் அவர்! ஞானசம்பந்தரை நினைப்போர், நல்ல தமிழையும், நல்ல தமிழை விரும்புவோர் ஞானசம்பந்தரையும் ஒருங் கியைத்தே நினைவு கூர்வர். தமிழுக்கும் ஞான சம்பந்தருக்கும் அத்துணைச் சிறந்த தொடர்பு உண்டு. தமிழ்மொழியை வளர்த்து வாழ்விக்கத் தோன்றியவர்களுள், தலைசிறந்த ஒருவர் திரு ஞான சம்பந்தர். தமிழைப் பரப்பி வளர்த்த வர்களின் வரிசையில் ஞானசம்பந்தருக்குத் தனிப்பெரும் சிறப்பிடம் உண்டு. அவரை ஒரு சிறந்த 'தமிழ் வீரர்' என நாம் துதித்துப் போற்றலாம்.

குறிஞ்சித் திணை :

சங்க காலத்தைச் சேர்ந்த அகம் புறம் என்னும் பாகுபாடுடைய நூல்களில், குறிஞ்சி முல்லை முதலிய திணைகள் பற்றிய வருணனை கள் இடையிடையே வருவதை நாம் அறி வோம். அத்தகைய் பல வருணனைகள் திரு ஞான சம்பந்தரின் தேவாரப் பாடல்களிலும் பெரிதும் விரவி வருவதை நாம் காணலாம். சங்க காலக் கவிஞர்கள் வெறும் இயற்கைக் காட்சிகளையே பெரிதும் பாடிச் சென்றனர். ஆனல் திருஞான சம்பத்தரோ வெறும் இயற் கைக் காட்சியோடு அமையாமல், அவற்றின் இடையே பொலியும் இறையருட் காட்சியை

யும் இணைத்து இயைத்து, இயலிசை நாடகம் என்னும் முத்தமிழும் பொலியத் தமது வித்தகப் பாடல்களை அருளிச் செய்துள்ளனர். சங்க காலக் கவிஞர்களிற் பலர், ஒவ்வொரு திணையையே சிறப்புறப்பாடும் திறம் பெற்றிருந்தனர். குறிஞ்சித் திணையைப் பாடுதலிற் கபிலரும், பாலைத் திணையைப் பாடுதலில் பாலை பாடிய பெருங்கடுங்கோவும் நெய்தற்றிணையைப் பாடுவதில் நல்லந்துவனும் சிறப்புற்றிருந்தனர் என நாம் அறிகின்றோம். அங்ஙனமின்றித் தமிழகத்தின் "நானிலத்து ஐந்திணை வளங்களையும்" நயமுறப் பாடுதலில் ஞானசம்பந்தர் இணையற்றுத் திகழ்ந்திருந்தார். இங்கு அவர் குறிஞ்சித் திணைவளம் பற்றிப் பாடியருளிய ஒருசில பகுதிகளைமட்டும் இயன்றவரை சுருக்கமாகக் காண்போம்.

திருஞான சம்பந்தர் பாடியருளிய தலங்கள் பல. அவற்றுள் திருவண்ணாமலை, இந்திர நீல பருப்பதம், ஈங்கோய்மலை, திருக்கயிலாயம், திருக்கழுக்குன்றம், திருக்காளத்தி, திருக்கற்குடி, திருக்குற்றாலம், திருக்கேதாரம், திருக்கொடுங்குன்றம், திருப்பரங்குன்றம், திருப்பருப்பதம், திருமுதுகுன்றம், திருக்கோகரணம் என்னும் தலங்கள், குறிஞ்சித் திணையாகிய மலையும் மலைசார்ந்த பகுதிக்கும் உரிய தலங்களாகும். அத்தலங்களுக்குரிய தேவாரத் திருப்பதிகங்களில், பழந்தமிழ்ப் பெருஞ்சான்றோராகிய தொல்காப்பியர் விதித்தருளிய பண்டைய தமிழ் இலக்கண மரபு அமைதிகளைத் தழுவி, ஞான சம்பந்தர் குறிஞ்சித் திணையின் வளங்களை நலந்திகழப் பாடியருளியுள்ளார்.

நல்லிசைக் கவிஞர் :

ஒரு பெரும் நல்லிசைக் கவிஞரின் கவிதைச் சிறப்பினை நலந்தெரிந்து சுவைத்து மகிழ்தற்குப் பலவழிகள் உண்டு. அவற்றுள், அவர் இயற்கைப் பொருள் நிகழ்ச்சிகளையும், காட்சிகளையும், எங்ஙனம் திறம்படப் புனைந்துரைத்து விளக்கியுள்ளார் எனக் கண்டறிவதும் ஒரு வழியாகும். இயற்கையில் ஈடுபாடும் அதனைப் புனைந்துரைக்கும் ஆர்வமும், கவிஞர்கள்பால் பொதுவாகக் காணப்படும் சிறப்பியல்பாகும்.

"கவிஞரின் கண்ணானது மிகச் சிறந்ததோர் உள்ளெழுச்சியினால், விண்ணிலிருந்து மண்ணையும், மண்ணிலிருந்து விண்ணையும் சுற்றிச் சுழன்று பார்வையிடுகின்றது; காணவும் கருதவும் இயலாத பொருள்களின் இயல்புகளைக் கவிஞனின் எழுதுகோல் எழில்கனிந்த கலையோவியங்களாக இனிது வடித்துக் கொடுக்கின்றது; காற்றென நுண்ணியவாய்க் காணப்படாமையின் இல்லனவாய் விளங்குவனவற்றிற்குக் கவிஞனின் கற்பனை உணர்வு, ஓர் உறைவிடமும் பெயரும் அளிக்கின்றது".

வல்லதம் விழியின் வீச்சால்
    மண்ணொடு விண்ணும் எல்லாம்
ஒல்லையின் அளந்து தேர்ந்து
    கற்பனை உணர்வின் மாண்பால்
இல்லது தனையும் ஊர்பேர்
    இயைபுறப் படைத்துக் காட்டும்
நல்லியற் கவிஞர் செய்கை
    நலமெலாம் நவிலற் பாற்றே!

— மொழிபெயர்ப்பு, ஆசிரியர்.

எனச் செகப்பிரியர் கவிஞர்களின் இயல்பினை இனிதெடுத்து விளக்குகின்றார். அதனால் கவிஞர்களின் கவித்திறனுக்கும், இயற்கைப் புனைவிற்கும் இடையே மிக்க பெருந்தொடர்பு உண்மை புலப்படும். ஞான சம்பந்தர் ஒப்புயர்வற்ற ஒரு பெரும் நல்லிசைக் கவிஞராதலின், இயற்கைக் காட்சிகளைத் தமது பாடல்களில் எழில் கனிந்த கலையோவியங்களாக வடித்துக் கொடுத்தருளுகின்றார்.

(1) திருமுதுகுன்றம்

(1) இந்நாளில் 'விருத்தாசலம்' என வழங்கும் தலம், ஞானசம்பந்தர் காலத்தில்,

---

* "The poet's eye, in a fine frenzy rolling,
Doth glance; from heaven to earth, from earth to heaven;
And as imagination bodies forth
The form of things unknown, the poet's pen
Turns them to shapes, and gives to airy nothing
A local habitation and a name".

—Shakespeare,
A Midsummer-Night's Drea'm

'திருமுதுகுன்றம்' எனப் பெயர் பெற்றிருந்தது. அத்தலத்தைக் குறித்து, ஏழு தேவாரத் திருப்பதிகங்களை ஞான சம்பந்தர் பாடியிருக்கின்றார். தொல்காப்பியர் மலையும் மலைசார்ந்த பகுதியும் குறிஞ்சித் திணையென்றும், அதற்குரிய தெய்வம் முருகன் என்றும், அத்திணைக்குரிய பண் குறிஞ்சிப் பண் என்றும் பிறவாறும் தமது இலக்கண நூலிற் குறிப்பிட்டிருக்கின்றார். 'சேயான் மேய மைவரை யுலகம்'' என்பது தொல்காப்பியம். திருமுதுகுன்றம் பற்றிய தேவாரப் பாடல்களில் அங்கே உள்ள மலைநில மக்களாகிய குறவர்குலப் பெண்கள், தமது குறிஞ்சித் திணைக்குரிய குலதெய்வமாகிய முருகனைக் குறிஞ்சிப் பண்கொண்டு பாடி மகிழ்கின்றார்கள்.

கருகுகுழல் மடவார்
　　கடிகுறிஞ்சி யதுபாடி
முருகன்னது பெருமைபகர்
　　முதுகுன்று அடைவோமே.

இவ்வரிகளில் 'குறிஞ்சி' என்னும் சொல்லும் அத்திணைக்குரிய 'முருகன்' என்னும் தெய்வத்தின் பெயரும் பயின்று வந்திருத்தல் அறிந்து மகிழ்தற்குரியது.

2. திருமுது குன்றத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான், ஒருகாலத்தில் உறுதிப் பொருள்கள் யாவை என்று தெளிவுறத் தெரியாமல், சிந்தைகலங்கி வருந்திய சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர் என்னும் நான்கு முனிவர்களுக்கும் ஆலமர நிழலின்கண்ணே அமர்ந்திருந்து அறம்பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கினையும் உபதேசித்தருளினன்.

அழிந்தசிந்தை அந்தணாளர்க்கு
　　அறம்பொருள்இன்பம் வீடு
மொழிந்தவாயான் முக்கண் ஆதி
　　மேயது முதுகுன்றே

என்னும் தேவாரப் பாடலில் தொல்காப்பியரும் திருவள்ளுவரும், விளக்கியருளிய அறம் பொருள் இன்பங்களைப் பற்றிய குறிப்பும், அவற்றின் பயனாகிய வீடு பேற்றின் திறமும் சுட்டப் பெற்றிருத்தல் ஓர்ந்து உணர்ந்து மகிழற்பாலது.

3. கடவுளுணர்ச்சி என்பது, மக்கள் எல்லோருக்குமே பொதுவாக உரியது. மக்கள் தத்தம் பண்பாட்டின் தரத்திற்கு ஏற்பக் கடவுள் வழிபாடு புரிவர். குறிஞ்சி நிலத்தில் உள்ள கொல்லைப்பகுதிகளில் வாழும் வேடர்கள், திரண்டுகூடித் தங்கள் தெய்வத்திற்கு விழாக் கொண்டாடிக் கும்பிடுகின்றனர். அங்கு அருகேயுள்ள முல்லைக் கொடிகளிற் பூக்கள் மலர்ந்திருத்தல், அவ்வேடர்களின் இனிய செயல்கண்டு மகிழ்ச்சியால் முறுவல் புரிவது போல உள்ளது.

கொல்லை வேடர் கூடி
　　நின்று கும்பிட
முல்லை அயலே முறுவல்
　　செய்யும் முதுகுன்றே

எனத் திருஞானசம்பந்தர், இக்காட்சியை எழிலுறப் பாடுகின்றார். சிறந்த இப்பாடலின் கருத்தை நினைப்பிக்கும் வகையில், பின்வரும் குறுந்தொகைவரிகள், அமைந்திருத்தல் காணலாம்.

முல்லை வாழியோ முல்லை ; நீநின்
சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை;
நகுவை போலக் காட்டல்
தகுமோ ? மற்றிது தமியோர் மாட்டே

—குறுந்தொகை, 162

பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை இலங்கெயிறு ஆகத்
தகுமே தோழி ! நறுந்தண் காரே

—குறுந்தொகை, 126

2 திருக்காளத்தி :

4 சிவனடியார்களுள் தலைசிறந்தவராகிய கண்ணப்பரோடு தொடர்புடையது திருக்காளத்திமலை. அதனை இரண்டு திருப்பதிகங்களால் சிறப்பித்துப் பாடியருளியுள்ளார், திருஞானசம்பந்தர். திருக்காளத்தி மலை வேங்கை மரங்கள் நிறைந்தது. வேங்கை மரம் குறிஞ்சித் திணைக்குரியது. பண்டைத் தமிழகத்தில் குறிஞ்சி நில மக்கள் வேங்கை மலரும் பருவத்தினைத் தினையறுக்கும் காலமாகவும், திருமணம் செய்தற்குரிய காலமாகவும் கொண்டிருந்தனர். திருமணத்திற்குரிய காலத்

தைக் கணித்துக்கூறும் **கணியன்** (சோதிடன்) போல ஒருவகையில் வேங்கை மரம் பூத்துக் காலத்தை அறிவித்து வந்தமையின், வேங்கை மரத்திற்கு **'கணி'** என்னும் ஒரு காரணப் பெயரும் உண்டு. ''கணியார் நம்மைக் கடைக் கணியார் நாளைக் கருங்கணியே'' என்னும் பழைய பாடல் ஒன்றில், இச்சொல் அழகுறக் கையாளப் பட்டிருத்தல் காணலாம். வேங்கை மலரும் பருவமே திருமணம் செய்தற்குரிய காலம் எனக் குறிஞ்சிநில மக்கள் கொண்டிருந் தனர் என்பது,

வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன
நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே
—அகம், 2

வருமோ தோழி நன்மலை நாடன்
வேங்கை விரிவிடம் நோக்கி
வீங்கிறைப் பணைத்தோள் வரைந்தனன்
கொளற்கே

எனவரும் அகநானூற்றுப் பாடற்பகுதியானும், 'இணர்விரிதலும் ஊர்கோடலும் ஆகிய இரண்டும் மணஞ்செய் காலம் இதுவென உணர்த்துலாகிய ஒரு பொருள் குறித்து நின்ற மையால், அவை ஒருவினைப்பாற்படும் என்பது' எனப்போதரும் **சேனாவரையர் நச்சினார்க்கினியர்** உரைகளாலும் தெளியப்படும். இச்சங்க நூற் கருத்தினைத் தழுவி,

புனவர்புன மயிலனைய மாதரொடு
மைந்தரும் **மணம் புணரும் நாள்,**
கனகம்என மலர்கள்அணி வேங்கைகள்
நிலவு காளத்தி மலையே

எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல்வரிகள் அருளிச் செய்யப் பெற் றுள்ளமை பெரிதும் சுவை பயக்கின்றன அன்றோ !

5. குறிஞ்சித்திணைக்குரிய மலைப்பகுதி களில் பாம்புகள் மிகுதியாக வாழும். பாம்பு களின் நஞ்சே மாணிக்கமாக மாறும் என்றும், அம்மணிகளைப் பாம்புகள் தாம் வேண்டும் பொழுது வெளியே உமிழவும், மீண்டு விழுங் கவும் முடியும் என்றும், இரவுக்காலங்களில் பாம்புகள் மணியை உமிழ்ந்து, அதன் ஒளியால் கண்பார்வை பெற்று இரைதேடி உலாவும் என்றும், சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன.

இருங்களிறு அட்ட பெருஞ்சின உழுவை
நாம நல்லராக் கதிர்பட உமிழ்ந்த
மேய்மணி விளக்கிற் புலர ஈர்க்கும்
வாள்நடந் தன்ன வழக்கறும் கவலை

—அகநானூறு, 72

நறுந்தாது ஊதும் குறுஞ்சிறைத் தும்பி
பாம்புமிழ் மணியில் தோன்றும்
முந்தூழ் வேலிய மலைகிழ வோற்கே

—குறுந்தொகை, 239

திருக்காளத்திமலையின் சிறப்பை விவரிக்குங் கால், திருஞானசம்பந்தர் இச்செய்தியைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

ஊரும் அரவம் ஒளிகொள் மாமணி
உமிழ்ந்தவை உலாவி வரலால்
கார் இருள் கடிந்து கனகம்மன்ன
விளங்கு காளத்தி மலையே

(3) திருக்கேதாரம் :

வடஇந்தியாவில் இமயமலைச் சாரற் பகுதி யில் அமைந்துள்ள சிறந்த தொரு பெருந்தலம் இது. இத்தலத்தைப்பற்றிய பாடல்களிலும் திருஞான சம்பந்தர் குறிஞ்சித்திணையின் வளங் களைப் பாடியிருக்கின்றார். மலைப்பகுதியைச் சார்ந்த காடுகளில் வேங்கை மரங்கள் நிறைந் திருக்கும். அவற்றின் பூக்கள் பொன்னிற முடையனவாய் மலைநிலத்துக் கருங்கற்பாறை களின் மீது சிதறிக்கிடக்கும் காட்சி, மதயானை களுக்குப் புலியின் தோற்றத்தையும் நினைவை யும் எழுப்பும். அதனால் வெருக்கொண்ட மத யானைகள் வேங்கை மரத்தின் மீது பாய்ந்து மோதிப் பொருதும். இச்செய்தி சங்கநூல் களில் ஆங்காங்கே பல இடங்களிற் குறிப்பிடப் படுகின்றது.

கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையில் தோன்றும்
காட்டிடை

எல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் நிலவே

—குறுந்தொகை, 47

ஓங்கல் மிசைய வேங்கை ஒள்வீ
புலிப் பொறி கடுப்பத் தோன்றும்

—அகம், 228

அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட்டு ஒள்வீ தாய துறுகல்
இரும்புலி வரிப்புறம் கடுக்கும்

—புறம், 202

கருங்கால் இனவேங்கை கான்றபூக் கல்மேல்
இருங்கல் வயவேங்கை ஏய்க்கும்

— திணைமாலை; 26

குறிஞ்சித் திணையைப் பாடுதலில் வல்லவராகிய **கபிலர்** என்னும் பெரும் புலவர், வேங்கைமரம் பூத்திருத்தலைக் கண்டு, அதனைப் புலியென நினைந்து மருண்டு, அதன்மீது பாய்ந்து மோதியதனல், அம்மரத்தில் ஆழப் பதிந்துவிட்ட தனது தந்தங்களை மீட்டு இழுக்க முடியாமல் அலறிக் கதறிப் பிளிறும் சோகக் காட்சி, செருக்கு மிகுந்து திருக்கயிலை மலையைப் பெயர்த்து எடுக்க முனைந்த இராவணன், அதன்கீழ் அகப்பட்டுக் கொண்டு வருந்தி அழுத காட்சியைப் போன்றிருந்தது, எனக் குறிஞ்சிக் கலியில் ஓர் இடத்திற் பாடியிருக்கின்ருர். இன்னேரனைய பல சங்க நூற் கருத்துக்களை நமக்கு நினைப்பிக்கும் வகையில் திருஞான சம்பந்தப் பெருமான், திருக்கேதாரப் பதிகத்தில் பாடியிருக்கும் பின்வரும் வரிகள் அமைந்திருத்தல் அறிந்து இன்புறற்பாலது.

உடைந்த காற்றுக்கு உயர்வேங்கை
பூத்து உதிரக் கல்லறைகள்மேல்
கிடந்த வேங்கைச் சினமா முகம்
செய்யும் கேதாரமே

(7) ஆசிரியர் திருவள்ளுவர், அறிவை அங்குசமாகக் குறிப்பிட்டு, அதனல் ஐம் பொறிகளை அடக்கி ஆள்பவன் வீட்டுலகத் திற்கு வித்தாகத் திகழ்வான் என்னும் கருத்தமைய அருளிச் செய்த "உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான் வரனென்னும் வைப்பிற்கோர் வித்து" என்னும் திருக்குறளின் அழகிய கருத்தைத் தழுவி விளக்கும் முறையில்,

தொண்டர் அஞ்சு களிறும் அடக்கிச்
சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யும்
இடம் என்பரால்;
வண்டு பாட மயில் ஆல
மான்கன்று துள்ள வரிக்
கெண்டை பாயச் சுனைநீல
மொட்டலரும் கேதாரமே

என்னும் திருக்கேதாரப் பாடல் அமைந்திருத்தலும், ஈண்டு இயைபுடைமை பற்றி நாம் அறிந்து இன்புறற்பாலது.

(8) சங்க நூல்களில் பறவை விலங்கு முதலியன பற்றிய செய்திகள் பலப்பல வரும். பறவைகள் தம்முடைய குஞ்சுகளுக்கு இரை தேடிக் கொணர்ந்து அதனை இன்னருளோடு அவற்றின் வாயிற்பெய்து ஊட்டி மகிழும் அழகிய காட்சி, எவருள்ளத்தையும் மகிழ்விக்கும். இக்காட்சியை வருணிக்கும் முறையில்,

அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை
இறையுற ஓங்கிய நெறியியல் மராஅத்த
பிள்ளை யுள்வாய்ச் செரீஇய
இரைகொண் டமையின் விரையுமாற் செலவே

— குறுந்தொகை, 92

உடங்கிரை தேரும் தடந்தாள் நாரை
ஐய சிறுகட் செங்கடைச் சிறுமீன்
மேக்குயர் சினையின் மீமிசைக் குடம்பைத்
தாய்ப்பயிர் பிள்ளை வாய்ப்படச் சொரியும்

— நற்றிணை, 91

எனப்பல பகுதிகள், சங்க நூல்களில் வரும் பறவைகள் தம்பார்ப்பினங்களுக்கு உணவூட்டி மகிழும் இனிய காட்சியைப் பலகாற் கண்டு மகிழ்ந்த குழந்தையாகிய ஞானசம்பந்தர்,

அதனைப் பின்வரும் திருக்கேதாரப்பாடல் வரிகளில் அரியதோர் சொல்லோவியமாக அமைத்திருக்கின்றார்.

பிள்ளை துள்ளிக் கிளைபயில்வ
கேட்டுப் பிரியாது போய்க்
கிள்ளை ஏனற் கதிர் கொணர்ந்து
வாய்ப்பெய்யும் கேதாரமே

(4) திருக்கற்குடி :

(9) திருக்கற்குடி என்பது, திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள சிறந்த ஒரு பெரும் தலமாகும். இது அப்பர் சம்பந்தர் சுந்தரர் என்னும் மூவர் பாடலும் பெற்ற சிறப்புடையதாகும். இங்குள்ள இறைவனுக்கு விழுமியான், உய்யக்கொண்டான் என்னும் பெயர்கள் வழங்கப்படும். இத்தலத்தைப் பற்றிய பாடல்களிலும் குறிஞ்சித் திணைக்குரிய யானைகளைப் பற்றிய இனிய செய்திகள் பல அமைந்து கிடக்கின்றன.

மக்களிடையே நிகழும் இல்லற வாழ்வு, வனவிலங்குகளிடையிலும் கூட ஒருவகையில் அமைந்து காணப்படுகின்றது. தான் மணந்து கொண்ட மனைவியின் மனம் மகிழும்படி, பல வகை நல்லுணவுப் பொருள்களைத் தேடிக் கொணர்ந்து தருகின்றான் கணவன். அது போலவே ஆண் யானைகளும், தாம் உண்ணாமல் தமது பிணையாகிய பெண் யானைகளின் வாயில் மூங்கில் நெல்லின் இனிய முளைகளை வாரிக் கொணர்ந்து கொடுக்கின்றனவாம். அத்தகைய அழகிய இயற்கை வளத்தான் மிக்கது கற்குடி மாமலை.

மருங்கு அளியார் பிடிவாயில்
வாழ்வெதிரின் முளைவாரிக்
கருங் களியானை கொடுக்கும்
கற்குடி மாமலை யாரே

என்பது சம்பந்தர் தேவாரம். இங்ஙனம், களிறுகள் பிடிகளுக்குக் கவளம் தேடிக் கொணர்ந்து கொடுத்தலைச் சங்க நூல்களும் பல இடங்களிற் குறிப்பிடுகின்றன.

கயந்தலை மடப்பிடி உயங்குபசி களைஇயர்
பெருங்களிறு தொலைத்த முடத்தாள்
ஓமை

— நற்றிணை, *127*

பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பிளக்கும்
அன்பின தோழி, அவர் சென்ற ஆறே

— குறுந்தொகை, *37*

(10) குறிஞ்சி நிலத்தில் மூங்கிற் காடுகள் அடர்ந்து ஓங்கி உள்ளன. அங்கு உயர்ந்தோங்கி வளர்ந்துள்ள மூங்கில் மரங்களை, யானைகள் தம் துதிக்கையினால் தாழப்பற்றி ஈர்க்கின்றன. ஈர்த்து அதன் இலைகளை உண்கின்றன. உண்டபின்னர், அவற்றைத் தம் கைந்நெகிழ்த்து விடுகின்றன. அதுபோது அம் மூங்கில்கள் மிக்க விசையுடன் உயர்ந்துசென்று மேகங்களை மோதிக், கீறி நிற்கின்றன. ''விட்ட குதிரை விசைப்பின் அன்ன விசும்பு தோய் பசுங்கழைக் குன்ற நாடன்'' எனவகம் குறுந்தொகை *(174)* வரிகளை, நினைக்கச் செய்யும் வகையில் பின்வரும் பாடற்பகுதி அமைந்திருத்தல் காணலாம்.

தாள் அமர் வேய்தலை பற்றித்
தாழ்கரி விட்ட விசைபோய்க்
காளமது ஆர்முகில் கீறும்
கற்குடி மாமலை யாரே

(11) இத்தகைய குறிஞ்சி நில மூங்கிற் காடுகளில் குரங்குகளும் ஏராளமாக வாழ்கின்றன. குரங்குகள் குறும்பு செய்யாமல் வாளா இருக்குமோ? அவைகள் மூங்கிற் கொம்புகளில் பாய்ந்து தாவி ஏறுகின்றன. அவைகள் ஏறுந்தோறும் மூங்கில்கள் வளைந்து தாழ்கின்றன. அவற்றின் மேற் குரங்குகள் நின்றும் நடந்தும் குனிந்தும்ஒடியாடிக் களிநடம் புரிகின்றன.

திருகல் வேய்கள் சிறிதே
வளையச் சிறுமந்தி
முருகின் பணைமேல் இருந்து
நடஞ்செய் முதுகுன்றே

எனத் திருஞானசம்பந்தர் அருளியுள்ள இனிய தேவாரப் பாடல்களை ஓதுங்கால் பின் வரும் சங்கப் பாடல்கள், நாம் நினைவுக்கு வராமல் இருத்தல் இயலாது.

சிலம்பின் வெதிரத்துக் கண்விடு கூழை
குரங்கின் வன்பறழ் பாய்ந்தென, இலஞ்சி
மீன்எறி தூண்டிலின் நிவக்கும் நாடன்
உற்றோர் மறவா நோய்தந்து
கண்டோர் தண்டா நலம்கொண்டனனே

— ஐங்குறுநூறு, 228

கான யானை கைவிடு பசுங்கழை
மீன்எறி தூண்டிலின் நிவக்கும்

— குறுந்தொகை, 54

(5) திருச்சிராப்பள்ளி :

(12) ஆணும் பெண்ணும் அன்பினுற் கலந்து கூடி வாழ்தல், இயற்கை யமைப்பின் நியதி. இந்நியதி மக்களின் வாழ்க்கையில் மட்டுமேயன்றி, விலங்குகளின் மாட்டும் விளங்கித்தோன்றுகின்றது. திருச்சிராப்பள்ளி மலையில் ஆண்குரங்காகிய கடுவனும், பெண் குரங்காகிய மந்தியும், கணவனும் மனைவியுமாய்க் கூடிக் களித்து வாழ்கின்றன. கூடலுக்கு ஊடல் இன்றியமையாத தொன்றன்றோ? ஆதலின் மந்தி கடுவனோடு ஊடல் கொண்டது. ஊடலினால் தன் கையில் தனது மகவாகிய குட்டியை அணைத்து எடுத்துக் கொண்டது. குட்டியின் பொருட்டாகவாதல் கணவன் தன்னைத் தேடி வந்தே தீர்தல் வேண்டும் என்னும் கருத்தில், அது தன் கணவன் ஆகிய கடுவனை விட்டுப் பொய்க்கோபமாகிய ஊடல் கொண்டு மலை உச்சியில் உள்ள மூங்கிலில் ஏறி அங்கிருந்து கீழே குதித்து விடுவதற்குத் துணிந்தது போல, வரை ஏறிச் செல்லுகின்றது.

கைம்மகவு ஏந்திக் கடுவனோடு
ஊடிக் கழை பாய்வான்
செம்முக மந்தி கருவரை
ஏறும் சிராப்பள்ளி

எனத் திருஞானசம்பந்தர், இக்காட்சியினைப் புனையா ஓவியமாகப் புனைந்து காட்டிப் பாடுகின்றார். இது போன்றதொரு செய்தி, பின் வரும் குறுந்தொகைப் பாடல் ஒன்றில் கூறப் பட்டிருத்தல், ஒப்பு நோக்கி யுணர்ந்து மகிழ்தற்குரியது.

கருங்கண் தாக்கலைபெரும்பிறிதுஉற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர்
செகுக்கும்
சாரல் நாட ! நடுநாள்
வாரல் வாழியோ! வருந்துதும் யாமே

—குறுந்தொகை, 69

(6) திருவண்ணுமலை

13 பிடியும் களிறும் மலைப்பகுதியில் உலா வருகின்றன. அப்போது அங்கு ஒரு புலி வருகின்றது. புலியும் களிறும் ஒன்றையொன்று சினந்து மோதிப் பொருகின்றன. அது கண்டு பெண்யானை அஞ்சித் தன் கன்றுகளுடன் வெகுண்டு ஓடுகின்றது. புலியைக் கொன்ற களிறு, பின்னர்த் தன் பிடியையும் கன்றுகளையும் காணுமல் தேடி அலைகின்றது. தன் குரலொலிகாட்டிப் பிளிறி அலறுகின்றது. எங்கும் தேடிக் காணுமையால் களைப்படைந்து, தன்னையும் அறியாமலே உறங்கத் தலைப்படுகின்றது. அத்தகைய இயற்கை யமைப்புடையது திருவண்ணுமலை எனப் பாடுகின்றார் திருஞானசம்பந்தர்.

பிழைத்த பிடியைக் காணுது ஓடிப்
பெருங்கைம் மதவேழம்
அழைத்துத் திரிந்தங்கு உறங்கும் சாரல்
அண்ணு மலையாரே.

இஃது ஒருவகையில், களிற்றைக் காணுமல் பிடியானது அலைந்து தேடி வருந்துவதாகக் கூறும் அகநானூற்றுப் பாடல் வரிகளை ஒத்துக் காணப்படுகின்றது.

வெண்கோட்டு யானை முழக்கிசை வெரீஇக்
கன்றொழித்து ஓடிய புன்றலை மடப்பிடி
கைதலை வைத்த மையல் விதுப்பொடு
கெடுமகப் பெண்டிரில் தேரும்
நெடுமர மருங்கின் மலையிறந் தோரே

அகநானூறு, 347

(7) திருக்கொடுங்குன்றம் :

14 இது பிரான் மலை என இந்நூலில் வழங்குகின்றது. சங்க காலத்திற் புகழ்பெற்று விளங்கிய பாரி வள்ளல் அரசு செலுத்திய பறம்புமலை இதுவேயாகும். இத்தலத்துத் திருப்பதிகத்திலும் திருஞானசம்பந்தர், குறிஞ்சித் திணைக்குரிய அரிய செய்தி ஒன்றைக் குறிப்பிடுகின்றார்.

'யாளி' என்பது பண்டொருகால் இருந்து, இஞ்ஞான்று இல்லையாய் மறைந்துபோன ஒரு வகை விலங்கு. அவ்விலங்கு யானைகளையும் விடப் பெரியதாய், அவைகளைக் கொல்ல வல்ல பேராற்றல் உடையதாக விளங்கியிருந்ததெனத் தெரிகின்றது. யாளிகள் வந்துவிடுமோ என்ற அச்சத்தால், அவற்றின் இடமிருந்து தப்பும்பொருட்டு, யானைகள் மலைகளைக் குத்திக் குடைந்து குகைகளை யுண்டாக்கிப் பாதுகாப்பாக இருந்து வருகின்றன.

மத்தக் களிறுஆளி வரவஞ்சி
மலை தன்னைக்
குத்திப் பெருமுழை தன்னிடை
வைகும் கொடுங்குன்றம்

எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரப் பாடலால், இச்செய்தியை இனிதுணரலாம். இவ்வரிகளின்படி யானைகள் யாளிக்கு அஞ்சும் இயல்பின என்பது,

மழைவிளை யாடும் கழைவளர் அடுக்கத்து
அணங்குடை யாளி தூக்கலிற் பலவுடன்
கணஞ்சால் வேழம் கதழ்வுற் றாஅங்கு
எந்திரம் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை

—பெரும்பாண்' 257

எனவரும் பெரும்பாணாற்றுப் படை வரிகளால் தெளியப்படும். யாளி என்னும் விலங்கு பண்டொருகால் வாழ்ந்திருந்து இன்று இல்லையாய் மறைந்து போயினும், அதனைப் பற்றிய குறிப்பு, திருஞானசம்பந்தர்பாடலில் வந்திருத்தல் நாம் மகிழத் தக்க நற்செய்தியாகும்.

(8) திருக்கயிலாயம் :

(15) விலங்குகளிற் பெரியது யானை. ஆயினும் அதனையும் கூடச் சில சமயங்களில் விழுங்கிவிடக் கூடிய பாம்புகள் சில, மலைநிலப் பகுதிகளில் உண்டாம். மிகவும் பெரிய யானையையே விழுங்கிவிடக் கூடிய அம்மலைப் பாம்புகள், எத்துணைப் பெரியனவாக இருக்கும் என்பது, நாம் உன்னி உணரற்பாலது.

பரிய களிற்றை அரவு விழுங்கி
மழுங்க இருள்கூர்ந்த
கரிய மிடற்றார் செய்ய மேனிக்
கயிலை மலையாரே

எனத் திருக்கயிலாய மலையில், யானைகளையும் விழுங்க வல்ல மிகப் பெரிய மலைப்பாம்புகள் இருப்பனவாக ஞானசம்பந்தர் நவிலுகின்றார்.

ஞால்வாய்க் களிறு பாந்தட் பட்டெனத்
துஞ்சாத் துயரத்து அஞ்சுபிடிப் பூசல்
நெடுவரை விடரகத்து இயம்பும்
கடுமான் புல்லிய காடிறந் தோரே

—நற்றிணை, 261

களிறுஅகப் படுத்த பெருஞ்சின மாசுணம்
வெளிறில் காழ்மரம் பிணித்துநனி
மிளிர்க்கும்

—நற்றிணை, 14

முடிவுரை :

இதுகாறும் திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல்களில் வரும் குறிஞ்சித் திணைவளம் பற்றிய செய்திகளை ஒருசிறிது இயன்றவரை கண்டோம். ''கடல்கண்டோம் என்போர் யாவரே முடிவுறக் கண்டார்'' என்றபடி, இத்தகைய ஆராய்ச்சிகளுக்கும் ஒரு முடிவில்லை. இவைகள் விரிப்பிற் பெருகியும், தொகுப்பின் எஞ்சியும் நிற்கும் இயல்புடையன. ஆதலின் ''இதன் அளவு உண்டுகோள் மதி வல்லோர்க்கே'' என்னும் முறையில், ஒருசில கருத்துக்கள் மட்டுமே இங்குச் சுட்டப் பெற்றன. ஆயினும் இவற்றால் தமக்கு முன் பிறந்த சான்றோர்களை மதித்துப் போற்றிய திருஞானசம்பந்தரின் சிறப்பும் * அவர்தம் பாடல்களின் அருமை பெருமைகளும் தமிழ்ப் பெருவீரராகத் திகழ்ந்து நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பித் தொண்

டாற்றிய அவர்தம் சான்றாண்மை நலங்களும் இணையவென்று. நாம் நன்கினிது உணர்தல் கூடும். உணர்ந்து, திருஞானசம்பந்தரைப் போற்றி, அவர்தம் செந்நெறியில் நின்றொழுகிச் சிறப்புடன் வாழ, நாம் முயலுவோமாக.

கவிக்குத் தகுவன; கண்ணுக்கு
 இனியன; கேட்கில் இன்பம்
செவிக்குத் தருவன; சிந்தைக்கு
 உரியன; பைந்தரளம்
நவிக்கட் சிறுமியர் முற்றில்
 முகந்துதம் சிற்றில்தொறும்
குவிக்கத் திரைபரக் கும்கொச்சை
 நாதன் குரைகழலே

—நம்பியாண்டார்.

—ஆசிரியர்.

"A great poet is not an isolated fact. He has affiliations with the present and the past; and through these affiliations he leads inevitably to his Contemporaries and predecessors."

"The true poet, whatever his range and quality, is one in whom the power of seeing and feeling the sensuous beauty and spiritual meaning of things exists in a pre-eminent degree, and to whom, more-over, another special power has been granted—the power of so expressing and intrepreting what he sees and feels as to quicken our own imaginations and sympathies, and to make us see and feel with him."

—William Henry Hudson,
Study of Literature, p.36.

இந்திய அரசின் உள்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஒய். பி. சவான் அவர்களும், தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்களும் ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாத சுவாமி கோயிலுக்கு வருகை தந்தபொழுது கோயிற் சிறப்பு மரியாதைகளுடன் வரவேற்கப்படுதல் (23-3-70)



கருவூர்த் தான்தோன்றி மலைக் கோயிலில் நடைபெற்ற பாவை மாநாட்டில், கோவைத் துணை ஆணையர் திரு. ஜி. ஆதிமூலம், B.A.B.L. அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல்.

இறைவனின் இன்னருட்டிறன்

[ந. ரா. முருகவேள், M. A., M. O. L.]

முன்னுரை:

ஓர் ஊரில் ஒரு பெரும் நிலக்கிழார் இருந்தார். அவருக்குத் தலையில் முடிசிறிதும் இல்லாமல் வழுக்கை விழுந்திருந்தது. அவர் ஒரு நாள் தமது மாளிகையின் முற்றத்தில், நெல் பரிமாறிக்கொணடு நின்றிருந்தார். அப்போது அங்கே ஒருவன் சென்று, 'தலைமுடியைப் பேணாமல் இங்ஙனம் தனியே நின்று எற்றுக்கோ பரிமாறு நின்றீர்?' என்று உசாவினன். அது கேட்ட அந்நிலக்கிழார், அவனது முகமனுரைக்கு மிகவும் மகிழ்ந்து அன்பு பாராட்டி, 'இவ்வளவு தூரம் எங்கு நடந்து வந்தீர்' என்று வினவினர். அதற்கு அவன், 'ஒன்றுமில்லை; நும்மைக் கண்டுபோக வந்தேன்' என்றான். தம்மிடம் பெரிதும் அன்புகொண்டு தம்மைப் பார்த்துச் செல்வதற்கென்றே, அவன் வந்திருப்பதாக எண்ணி உவகையுற்ற அந்நிலக்கிழார், 'இவ்வளவு தூரம் வந்தீரே, இங்கிருந்து ஒரு கோட்டை நெல் கொண்டு போகலாகாதோ?' என்று பரிவுடன் கூறி, அவனுக்கு ஒரு கோட்டை நெல் எடுத்து அனுப்பி வைத்தார். அவன் அதை எடுத்துக்கொண்டுபோகும் வழியில், எதிரே வந்த ஒருவன், 'இது எங்கே பெற்றது?' என வினவினன். அதற்கு அவன், அவ்வழிப்போக்கன்பால் சற்று வெறுப்புடன், 'உன்னைப்போல ஒரு மொட்டைத் தலையன் தந்தான்' என்று சொல்லிவிட்டுத் தன்வழியே சென்றான்.

அதுகேட்ட வழிப்போக்கன், உடனே விரைந்து சென்று அப்பெருநிலக்கிழாரிடம், 'இன்னான் உன்னை வைதுபோகா நின்றான்' என்று புறங்கூறிச் சினம் உண்டாக்கினன். அவ்வளவில் அந்நிலக்கிழார் 'என்நெல்லையும் கொண்டு என்னையும் வைது போவதே?'' என்று தன்னை இகழ்ந்து சென்றவனைப் பிடிக்கத் தொடர்ந்து வந்தார். அதைக் கண்ட அவன், நிலைமையைப் புரிந்து கொண்டு, தப்பும் வழி ஆராய்ந்து தனது சமயோசித புத்தியினால், 'ஏன்தான்! குழல்கள் அலைய அலைய இங்ஙனம் ஓடி வாராநின்றீர்?' எனப் பரிவு தோன்ற வினவினான். அவனது போலிப் பரிவுரையைக் கேட்ட அளவிலேயே அந்நிலக்கிழார் தம் சினம் தணிந்து, தாம் தொடர்ந்து வந்த காரணம் இன்னதெனச் சொல்ல நாணமுற்றவராய், 'ஒன்றுமில்லை. இன்னும் ஒரு கோட்டை நெல் கொண்டு போகச் சொல்ல வந்தேன்' என்று குழறி உரைத்துத் திரும்பினர்.

திருவாய்மொழி

இச்சிறிய புனைகதையைப் பட்டர் என்னும் வைணவப் பெருஞ்சான்றோர், திருவாய்மொழிப் பாசுரம் ஒன்றற்கு உரை விளக்கம் செய்யும்போது அழகுற எடுத்துச் சொல்லி, இறைவனது இன்னருளின் திறத்தை நமக்கு நயமுற விளக்குகின்றார்.

''திருமலையிலே நித்தியவாசம் செய்தருளுகின்ற பெருமானுக்கு, நம என்று சொல்லுவதாகிற அந்தக் கடமையை வகிக்கின்றவர்களுக்கு, அனுபவித்தே தீர்க்க வேண்டிய பாபங்களும், இனிமேல் விளையக்கூடிய பாபங்களும் ஆகியன அனைத்தும், வெந்து தொலைந்தொழியும். இங்ஙனம் பாபங்கள் தொலையவே, அடியவர்களான தாங்கள் தங்கள் இயல்பிற்குத் தகுதியான கைங்கர்யங்களைச் செய்யப் பெறுவார்கள்'' என்னும் கருத்தை,

> ''வேங்கடங்கள் மெய்ம்மேல் வினைமுற்றவும்
> தாங்கள் தங்கட்கு நல்லனவே செய்வார்
> வேங்கடத்துறை வார்க்கு நமவென்ன
> லாங்கடமை அதுசுமந்தார்கட்கே''

என்னும் திருவாய்மொழிப் பாசுரத்தில், பிரபந்நஜன கூடஸ்தரான நம்மாழ்வார் நன்கினிது எடுத்துப்பாடி, உபதேசித்தருளுகின்றார்.

ஆளவந்தார்:

இப்பாசுரத்தில், 'வேங்கடங்கள் மெய்ம்மேல் வினைமுற்றவும்,' என்னும்வரியானது, மிகவும் முதன்மையும் பொருட்சிறப்பும் வாய்ந்தது. ''அந்தணன் ஒருவன் பிறக்கும்போதே, முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் பிதிரர்களுக்கும் கடன்பட்டவனாகப் பிறக்கின்றான். இம்மூன்று கடன்களையும் தீர்க்காமல், அவன் வீடுபேற்றை அடைதல் இயலாது. ''வேங்கடத்து உறைவார்க்கு நம' என்று சொல்லி விட்டால், அம்மூன்று கடன்களும் முழுவதும் தீர்ந்து போய் விடும்'' என்று, இவ்வரிக்கு, ஆளவந்தார் பொருள் அருளிச் செய்வர்.

158529

இராமாநுஜர்:

இதற்கு எம்பெருமானார் என்னும் இராமாநுஜர், வேறொரு வகையில் பொருள் பண்ப்பர். பாவங்களானவை பூர்வாகங்கள் என்றும், உத்தராகங்கள் என்றும் இருவகைப்படும். எம்பெருமானைப் பற்றுதற்கு முன்பு, புத்திபூர்வகமாகச் செய்த பாவங்கள் **பூர்வாகங்கள்** ஆகும். பிறகு, பிரகிருதி பாரவசியத்தாலே பிராமாதிகமாக நேரும் பாவங்கள் **உத்தராகங்கள்** எனப்படும். இவற்றையே 'போயபிழையும் புகுதருவான் நின்றனவும்' என்று ஆண்டாள் நாச்சியார் அருளிச் செய்தார். 'வேங்கடத் துறைவார்க்கு நம' என்று கூறுவோமாயின், பூர்வாகங்கள் ஆகிய கடன்களும், உத்தராகங்களாகிய மேல்வினைகளும், முற்றவும்வேம் (முழுதும் அழிந்தொழியும்); இது மெய் (சத்தியம்) என்பதாக, இவ்வரிக்கு எம்பெருமானர் பொருள் அருளிச் செய்வர்.

பட்டர்:

எத்தனையோ பிறவிகளில் தொடர்ந்து செய்து, மலைமலையாகக் குவிந்து கிடக்கும் நம் பாவங்கள், 'வேங்கடத்து உறைவார்க்கு நம' என்ற அவ்வளவில் தொலைந்தொழியுமோ? என்று ஒரு சிலர் இங்கு ஐயுறுவர். அங்ஙனம் ஒரு சிலர் ஐயுற்றபொழுதே, பட்டர் என்னும் வைணவப் பெரியார், மேலே குறிப்பிடப் பெற்ற சிறிய புனைகதையை எடுத்துக் கூறியருளியிருக்கின்றார். இறைவன் எல்லையற்ற கருணையுடையவன் ஆதலால், நாம் அவனைச் சிறிது புகழ்ந்த அளவிலேயே மிகவும் திருப்தியடைந்து, நம் குற்றங்களை யெல்லாம் பொறுத்து அருள் புரிகின்றான். அவனது அருளின் நீர்மை இருந்தபடி இது' என்று விளக்கியருள்கின்றார் பட்டர். அப்பெருந்தகையாரின் அரிய நுண்ணிய கருத்தை விளக்கும் உரைப் பகுதி வருமாறு:

''இவ்விடத்திலே பட்டர் ஒரு இதிஹாஸம் அருளிச் செய்வர். 'பண்டு, தலையில் மயிரின்றிக்கே யிருப்பானொருவன் நெல் பரிமாறா நின்றானாய், அங்கே ஒருவன் சென்று 'மயிரைப் பேணாதே நீர் தனியே நின்று பரிமாறா நின்றீர்' என்ன, 'ஏன் தான் நடந்ததீ! என்ன, ஒன்றுமில்லை; கண்டுபோக வந்தேன்' என்ன, 'ஆகில் ஒரு கோட்டையைக் கொண்டு போகலாகாதோ? என்று எடுத்துவிட, அவன் அத்தைக்கொண்டு வாரா நிற்கச் செய்தே, எதிரே ஒருவன் வந்து 'இது எங்கே பெற்றது?' என்ன, 'உன்தனை மொட்டைத் தலையன் தந்தான்' என்றானாய், அவன் அத்தைச் சென்று அங்கே 'இன்னான் உம்மை வைதுபோகா நின்றானீ' என்ன, 'அடா! என் நெல்லையுங்கொண்டு என்னையும் வைது போவதே?' என்று தொடர்ந்து வந்தானாய், அவன் புரிந்து பார்த்து 'ஏன்தான்! குழல்கள் அலையஅலைய ஓடிவாரா நின்றதீ!' என்ன, 'ஒன்றுமில்லை, இன்னம் ஒரு கோட்டை கொண்டுபோகச் சொல்லவந்தேன்' என்றானும். அப்படியே கடலை முகங் காட்டுவித்துக் கொள்கைக்காகக் காலைப் பிடிப்பது கோலைத் தொடுப்பதாக நிற்க, அவன் வந்து முகங் காட்டினவாறே, 'உனக்கு அம்பு தொடுத்தோம்' என்ன லஜ்ஜித்து, 'உன் விரோதிகளைச் சொல்லு, நாம் இதைவிட' என்றாரிறே'' என்பது.

முடிவுரை:

இவ்வரிய இனிய உரைப்பகுதியால், இறைவனது எல்லையற்ற அருளின் இயல்பும்; எதனையேனும் ஒரு காரணமாக மேலிட்டுக்கொண்டு, உயிர்த்தொகுதிகளையெல்லாம் காப்பாற்றிக் கரை ஏற்றி உய்வித்தருளுதலையே விரும்புகின்ற இறைவனது திருவுள்ளத்தின் சிறப்பும்; உயிர்கள் தமது தீவினைகளெல்லாம் எளிதில் ஒழிந்து, உய்வதற்கு உரிய இனிய பற்றுக்கோடாகத் திகழ்கின்ற இறைவனது திருநாமத்தின் பெருமையும் பிறவும்; பசுமரத்தில் **ஆணி** போல நம் உள்ளத்திற் பதியுமாறு விளக்கப் பெற்றிருத்தல் உணரலாம். இத்தகைய இறைவனது இன்னருளின் திறனை உணர்ந்து, அவனது திருநாமங்களை இடையறாது பல்காலும் வழுத்தி வழிபட்டு, நாம் அனைவரும் இறையருள் பெற்று நலமெய்து உய்ய முயலுவோமாக.

—ஆசிரியர்.

தஞ்சை மாவட்டம் நீடாமங்கலம் ஸ்ரீ சந்தானராமசாமி தொகுதிக் கோயில்களின் திருமண மண்டபக் கால்கோள் விழாவில், தமிழ் நாடு அரசின் அரிசன நலத்துறை அமைச்சர் மாண்புமிகு திருமதி **சத்தியவாணிமுத்து அம்மையார்** அவர்கள் கலந்துகொண்டு உரை நிகழ்த்துதல் (29 - 3 - 70).



தஞ்சை மாவட்டம் நீடாமங்கலம் ஸ்ரீ சந்தானராமசுவாமி தொகுதிக்கோயில்களின் திருமண மண்டபக்கால்கோள் விழாவில் அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. **கே. வி. சுப்பையா, B.A.,** அவர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்துதல். (29 - 3 - 70).

நாகப்பட்டினம் மெய்கண்ட மூர்த்தி சுவாமி கோயில் குமரகோயில் திருக்கல்யாண மண்டப அடிக்கல் நாட்டு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. **கே. வி. சுப்பையா, B.A.,** அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தபொழுது, ஆணையர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துதல் (8 - 3 - 70).



இந்திய அரசின் உள்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஒய். பி. சவான் அவர்களும், தமிழ் நாடு அரசின் முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்களும், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா, B. A., அவர்களும், ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதசுவாமி கோயிலுக்கு வருகை தந்தபொழுது, நகராட்சித் தலைவர்களாலும், அறங்காவலர் பெருமக்களாலும், கோயிற் சிறப்பு மரியாதைகளுடன் வரவேற்கப்படுதல் (22 - 3 - 70).

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras - 34.
Printed at General Printers, 14, Poonamallee High Road, Madras - 3.